REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஏப்ரல் 29 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 100 | April 29,Thursday, 2021 | 20பக்கங்கள் | 30/-




## சுற்றாடலை அழிவுக்கு உட்படுத்துவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள்



**இரசாயன உரவகை, கிருமிநாசினி, பூச்சிக் கொல்லி இறக்குமதி உடன் அமுலுக்கு வரும் வகையில் தடை**

**- ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை வழங்கும் நோக்கில் சுற்றாடலை பாதுகாப்பதற்காக தீர்க்கமான

06

## சீன பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

**மிகவும் பயனுள்ளதாக சீன தரப்பு தெரிவிப்பு**



இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் பிங் (Wei Fenghe)க்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று (28) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த சீன பாதுகாப்பு அமைச்சரை ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர மற்றும் வெளிவிவகார செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் வரவேற்றனர்.

ஜனாதிபதிக்கும் தனக்குமிடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை மிகவும்

06



இலங்கை வந்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் பிங் (Wei Fenghe)க்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (28) அலரி மாளிகையில் நடைபெற்றபோது...

## நாட்டின் பல பகுதிகளில் பிரிட்டனில் திரிபுபடுத்தப்பட்ட கொரோனா வைரஸ்

**55 வீத மரணத்தையும் 50 வீத பரவும் வேகமும் கொண்டது**



**அவதானத்துடன் செயற்படுமாறு மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை**

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிசாந்தன்**


கொழும்பு, குருநாகல் உட்பட நாட்டின் சில பகுதிகளில் பிரிட்டனில் பரவும் வேகமாக பரவக்கூடியதும்

06

**கொரோனா தொற்று பரவல் தீவிரம்;**

# 09 மாவட்டங்களில் 105 GS பிரிவுகள் முடக்கம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



மூன்று மாவட்டங்களிலுள்ள 05 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று புதன்கிழமை காலை 06 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மொத்தமாக 09 மாவட்டங்களில் 105 கிராம சேவகர் பிரிவுகள் இதுவரை கொவிட்19 தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்டத்தின் வெல்லவாய கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட மூன்று கிராமங்களும் புத்தள கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ரத்தன்கம பகுதியும் மாத்தளை மாவட்டத்தின் அலுகொல்ல பகுதியும் அம்பாறை மாவட்டத்தில் குமாரிகம பகுதியுமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தியாவசிய தேவைக்காக செல்பவர்களுக்கும் அரச சேவைக்குச் செல்லும் ஊழியர்களுக்கும் மாத்திரமே தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியில் செல்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி எவரும் செயல்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, ஏதாவது ஒரு பொலிஸ் அதிகாரி தனிமைப்படுத்தல் பகுதியில் வசித்து வந்தால் அவர் கடமைக்கு சமுகமளிக்காமல் தனிமைப்படுத்தல் காலம் முடிவடையும் வரையில் இப் பகுதியில் தங்கியிருக்க முடியும். இதற்கான விசேட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## மே தினப் பேரணியை ஒன்லைனில் நடத்த ஜே.வி.பி. தீர்மானம்



தற்போதையகொரோனா தொற்று பரவல் நிலை காரணமாக மே தினப் பேரணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால்,

06

## அரச ஊழியர்கள் வாரத்துக்கு 02 தினங்கள் மட்டும் கடமைக்கு

- அதற்கு மேல் நிறுவனத் தலைவர் தீர்மானிக்கலாம்
- பொதுநிர்வாக அமைச்சு புதிய சுற்றுநிருபம் வெளியீடு

03



**இரண்டு வருடமாகியும் கண்டுபிடிக்க முடியவில்லை;**

## சாராவுக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது

**இந்தியாவுக்கு தப்பிச் செல்ல வாய்ப்பில்லை**

03




## க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகள் 07 நாட்களில்

**பாடசாலைகள் மீள் திறப்பு மே 02இல் அறிவிக்கப்படும்**



**-கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான பெறுபேறுகள் இன்னும் ஒரு வார காலத்துக்குள் வெளியிடப்படுமென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

06

**அதிகளவு நோயாளர் கண்டுபிடிக்கப்படும் பகுதிகள் முடக்கப்படலாம்**

## ஆயத்தமாக இருங்கள்

**- இராணுவத் தளபதி முன்னெச்சரிக்கை**



பொதுமக்களை அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்து வைத்திருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, அதிகளவு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்படும் பகுதிகள் முடக்கப்படலாம் என தெரிவித்துள்ளார்.

பலநாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்துவைத்துக்கொண்டு

06

**வெள்ளை வேன் கடத்தல் விவகாரம்**

## ராஜிதவுக்கு எதிரான வழக்கு ஜூலையில் விசாரணைக்கு



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுதாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை ஜூலை மாதம் 07 ஆம் திகதி

06

## யாழ்.மாதகல் கடலில் 240 Kg கஞ்சா மீட்பு

**கடற்படையினர் அதிரடி**



யாழ்ப்பாணம், மாதகல் கடற்பரப்பில் சுமார் 240கிலோ கஞ்சா கடற்படையினால் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கடற்படையினர் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில்

06

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோருக்கான தண்டனை

**ரூ.10,000 அபராதத்துடன் 06 மாத சிறை**



தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதன் பின்னர் அவர்கள் குற்றவாளி என நிருபிக்கப்பட்டால் 10,000 ரூபா தண்டப்பணம் மற்றும் 06 மாத சிறைத்தண்டனை விதிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த 24 மணி நேரத்தில் மாத்திரம்

06

**கொரோனா பரவலுக்கு வழிசமைத்தனராம்;**

## யாழ். வண்ணார்பண்ணை கோவில் தலைவர், செயலாளர் கைது

**பிணையில் விடுவிப்பு; வழக்கு விசாரணை இன்று**

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் கொவிட்19 கட்டுப்பாட்டு விதிகளை மீறி தேர்த் திருவிழாவை நடத்திய குற்றச்சாட்டில்

06

**விக்கல் வீராச்சாமி**



என்ன? உங்க தலைவர் தன்னைத் தானே திமிர் தலைவன், தன்மானத் தமிழன், ரோசமுள்ள தமிழன் எண்டு பேஸ்புக்ல போட்டுத் தள்ளுறார்....

உண்மைதான், அதை அடுத்தவர்கள் சொன்னாத்தான் அவருக்குப் பெருமை, அது அவருக்கு புரியேல்லையே...!!!



## 'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றத்தை பார்வையிட

# ஜனாதிபதி ஹல்துமுல்லை விஜயம்...

“கிராமத்துடன் உரையாடல்” முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ (26) பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்லை வெலங்விட கிராமத்திற்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

இதுவரை உரிய கவனத்தை பெற்றிருக்காத பின்தங்கிய கிராமிய மக்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அச்சந்தர்ப்பத்திலேயே அவற்றை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து தீர்வுகளை வழங்கும் நோக்குடன் கடந்த செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி “கிராமத்துடன் உரையாடல்” நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்டது.

பதுளை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேச செயலாளர் பிரிவான ஹல்துமுல்லை வெலங்விட கிராமம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக முதலில் தெரிவு செய்யப்பட்டது. மக்கள் முன்வைத்த மற்றும் அங்கு இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

07 மாதங்களுக்குப் பின்னர் அதன் முன்னேற்றத்தை கண்டறிவது இன்றைய பயணத்தின் நோக்கமாகும்.

மக்களின் கோரிக்கைகளின் பேரில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட கொட்டபோகஸ்தென்ன விளையாட்டரங்கிலிருந்து ஜனாதிபதியின் சுற்றுப் பயணம் ஆரம்பமானது.

ஹப்புத்தலையிலிருந்து வெலங்விட வரை இரண்டு பஸ் வண்டிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டன. ஒரு நாளைக்கு இரண்டு பயணங்கள் என்ற அடிப்படையில் 08 கிராமங்களின் ஊடாக இந்த பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுவதன் மூலம் போக்குவரத்துப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

காட்டு யானைகளின் தாக்குதலினால் உடைந்துபோயிருந்து, இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீட்டையும் ஜனாதிபதி பார்வையிட்டார். “கிராமத்துடன் உரையாடல்” திட்டத்தின் விளைவாக காணி உறுதிகளைப் பெற்றுக்கொண்ட சிலருடன் உரையாடிய ஜனாதிபதி, தொடர்ச்சியாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஆலோசனை வழங்கினார்.

வெலங்விட கிராமத்தில் மின்சார யானை வேலிகள் சுமார் இரண்டு வருடங்களாக செயற்படாதிருந்தது. இதன் நீளம் 6 கிலோமீற்றர்களாகும். மின்சார வேலி புனரமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.









யானை வேலியை பாதுகாக்கும் பொறுப்பு கிராம மக்களுக்கு வழங்கப்பட்டது. 1 கிலோமீற்றருக்கு ஒருவர் என்ற வகையில் மாதாந்தம் ரூபா 7500 கொடுப்பனவு கிடைக்கும் வகையில் இதற்காக 6 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். நிகபொத முதல் வெலங்விட வரையான வீதி காபட் செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. வெலங்விடயிலிருந்து கொஸ்லாந்த, வெல்லவாய வீதியை இணைக்கும் 14 கிலோமீற்றர் வீதி நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நிறைவு செய்யப்பட்டுள்ள மற்றும் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிட்ட ஜனாதிபதி, அவற்றை விரைவாக நிறைவு செய்து மக்களிடம் கையளிக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் வருகையினால் கிராமத்தின் மக்கள் முகங்கொடுத்திருந்த பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்திருப்பதையிட்டு மகாசங்கத்தினரும் மக்களும் ஜனாதிபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.


பதுளை மாவட்ட ஆளுநர் ஏ.ஜே.எம். முசாம்மில், இராஜாங்க அமைச்சர் தேனுக்க விதானகமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான சுதர்ஷன தெனிபிட்டிய, சாமர சம்பத் தசநாயக்க, திஸ்ஸ குட்டியாரச்சி,பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் மற்றும் பிரதேச மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





## சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் பிங் (Wei Fenghe) யின் இலங்கை விஜயத்தின் போது...













இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் பிங் (Wei Fenghe) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,பெசில் ராஜபக்ஷ ஆகியோரை நேற்று உத்தியோகபூர்வமாக சந்தித்த போது பிடிக்கப்பட்ட படங்கள்

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 29 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN


தொழுகை நேரம்
25 முதல் 29 வரை
சுபஹ் - 04.41
லுஹர் - 12.10
அஸர் - 03.23
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் சித்திரை 16
ராகுகாலம் : பகல் : 01.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: திரிதியை



# தொற்றுநோயை கையாள்வதில் சீன அரசின் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்க்கிறோம்

## சீன பாதுகாப்பு அமைச்சருடனான இருதரப்பு பேச்சுவார்த்தையில் பிரதமர் மஹிந்த கருத்து

**சுப்பிரமணியம் நிசாந்தன்**

கொரோனா தொற்றுநோயைக் கையாள்வதில் சீன அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்க்கிறோமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இலங்கை வந்துள்ள சீன தேசிய பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

அத்திடன் உலகளாவிய ரீதியிலிருந்து இலங்கைக்கு முதலீடுகளை ஈர்ப்பதே தற்போதைய முன்னுரிமையாகவுள்ளதென்றும் அவ்வாறான முதலீட்டாளர்களின் இலங்கை மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு சீனாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சீன தேசிய பாதுகாப்பு அமைச்சர் வெய் பிங் (Wei Fenghe) க்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்த சந்திப்பின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்

சீன பாதுகாப்பு அமைச்சரான உங்களை இலங்கைக்கு வரவேற்க கிடைத்தமை தொடர்பில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தொற்று நிலைமையையும் பொருட்படுத்தாது இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான உங்களது தீர்மானத்தை நாம் பாராட்டுகின்றோம்;.

தொற்று நிலைமைக்கு மத்தியில் சீனாவின் உயர்மட்ட தூதுக் குழுவினர் பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு விஜயம் செய்தனர். உங்களது இவ்விஜயம் மற்றும் சந்திப்பின் ஊடாக எமது பலமான மற்றும் நட்பு ரீதியிலான இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

முதலில், இந்த ஆண்டு இடம்பெறவுள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100ஆவது ஆண்டு நிறைவு மற்றும் அதன் அனைத்து சாதனைகளுக்கும் எனது அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இது உண்மையில் ஒரு மிக முக்கியமான மைல்கல்லாகும்.

மேலும், வறுமையை ஒழிப்பதில் சீனா செய்த சாதனைகள் குறித்தும் நான் வாழ்த்துகிறேன். சீன அரசாங்கம் சுமார் 100 மில்லியன் கிராமப்புற மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளது. மறுபுறம், வறுமையை ஒழிக்கும் அமெரிக்காவின் உலகளாவிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை 10 ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவிற்கு அடைய முடிந்தது. இது ஒரு பெரிய சாதனையாகும்.

இந்த தொற்றுநோயைத் தடுப்பதற்கான ஒரே வழி தடுப்பூசி மட்டுமே என்பது தற்போது உலகளாவிய ரீதியில் தெளிவாகியுள்ளது. கொவிட் 19 தொற்றுநோய் பரவல் ஆரம்பித்ததிலிருந்து, சகல இலங்கையர்களுக்காகவும் சீனா 6,00,000 சினோஃபார்ம் தடுப்பூசிகள் மற்றும் சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றை தாராளமாக நன்கொடையாக வழங்கியிருந்தமையை நான் பாராட்டுகிறேன். இந்த தொற்றுநோயைக் கையாள்வதில் சீன அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

கடந்த சில வாரங்களில் கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், நாட்டின் பொருளாதார மற்றும் சமூக தாக்கத்தை கருத்திற்கொண்டு முழு நாட்டையும்

06




## அல் குர்ஆனின் மகத்துவம்

'ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய)தென்றால் அதில் தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டும் திருக்குர்ஆன் (எனும் வேதம்) இறக்கப்பட்டது. அது (நன்மை, தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடிய வசனங்களை உடையதாகவும் இருக்கின்றது' (அல் குர்ஆன் 02:185).

இவ்வசனத்தின் ஊடாக இம்மாதத்தில் நோன்பு கடமையாக்கப்பட்டிருப்பதன் பின்னணி தெளிவாகின்றது. குர்ஆனானது உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொருவரதும் ஈருலக வாழ்வுக்கு நேர்வழிகாட்டக்கூடியதாகும். இதில் சத்தியமும் அசத்தியமும் தெளிவாக்கப்பட்டு நேரான பாதை எதுவென அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தெளிவானதும் உறுதியானதுமான ஆதாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இக்குர்அன், மனித சமூகத்தை காரிருளில் இருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வந்த அருள் மறையாகும்.

மாறாக ஹலால், ஹராம் குறித்து மாத்திரம் சொல்வதற்காக அருளப்பட்டதல்ல இக்குர்ஆன். என்றும் அழியாத, வலுவான ஆதாரங்களின் களஞ்சியமாகவே குர்அன் விளங்குகின்றது. இவ்வாறு சிறப்புற்று விளங்கும் குர்ஆன் கிடைக்கப்பெற்றமைக்கு நன்றி செலுத்துமுகமாகவே அல்லாஹ் இம்மாதத்தில் நோன்பைக் கடமையாக்கியுள்ளான். இதன் ஊடாக மனிதன் தன் எல்லையற்ற ஆசைகள், இச்சைகளிலிருந்தும் ஷைத்தானின் தூண்டுதல்களில் இருந்தும் முற்றிலும் விடுபட்டு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

அல்லாஹ் மனிதனுக்கு அளித்துள்ள அருட்கொடைகளிலேயே பெரிய அருட்கொடை அறிவாகும். அந்த அறிவை விடவும் மிகப்பெரிய அருட்கொடையே அல் குர்ஆன். அறிவுக்கும் சரியான வழிகாட்டுதலை வழங்கக்கூடியதாக குர்ஆன் இருக்கின்றது.

'இக்குர்ஆன் அருளப்பட்டிராவிட்டால் அறிவு காரிருளிலேயே தட்டுத்தடுமாறிக் கொண்டிருந்திருக்கும். பூமியில் எந்த அந்தஸ்தையும் வானத்தில் எந்த நினைவுகூரலையும் மனிதன் பெற்றிருக்க மாட்டான்' என்று அல்குர்ஆன் விரிவுரையாளரொருவர் குறிப்பிட்டிருகின்றார்.

அதனால் இவ்வருட்கொடைக்கு நன்றி செலுத்தும் குறைந்த பட்ச வடிவம் தான் அது அருளப்பட்ட இம்மாதத்தில் நோன்பு நோற்று அல்லாஹ்வின் பெருமையையும் புகழையும் பறைசாற்றுவதாகும்.

ஆகவே மகத்துவம் மிக்க குர்ஆன் அருளப்பட்ட இம்மாதத்தை நோன்பு நோற்று குர்ஆனை ஓதிபடித்து இறை வணக்கங்களில் ஈடுபட்டு கண்ணியப்படுத்துவோம்.

மர்லின் மரிக்கார் ...



கொவிட்19க்கு எதிரான பிரதிபலிப்புகள்

# ஆப்கான், பாக், சீனா, பங்களாதேஷ் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களுடன் கலந்துரையாடல்

## கூட்டு வீடியோ மாநாட்டில் அமைச்சர் தினேஸ் உரை

கொவிட்19 தொற்றுக்கு எதிரான கூட்டு ஒத்துழைப்பை ஒருங்கிணைப்பதற்கான பிராந்திய மட்ட செயற்பாட்டில் இலங்கை பங்கேற்குமென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொவிட்19க்கு எதிரான பிரதிபலிப்புகள் குறித்த சீனா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு அமைச்சர்களுடனான கூட்டு வீடியோ மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கொவிட்19 க்கு எதிரான பிரதிபலிப்பு சார்ந்த ஒத்துழைப்பைப் பலப்படுத்துதல் மற்றும் தொற்றுநோய்க்குப் பிராந்திய பொருளாதார மீட்சியை ஊக்குவித்தல் மற்றும் கொவிட்19 தொற்றுநோயின் அண்மைய அதிகரிப்புக்கு மத்தியிலான வறுமை ஒழிப்பு ஆகியன தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் கருத்து வெளியிடுகையில், கொவிட் 19க்கு எதிராக திறம்பட பிரதிபலிப்பதிலான ஒத்துழைப்பின் முக்கியமான தேவையாகும். பொருளாதார மீட்சி மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதில் தேசிய முன்னுரிமைகளை

06



ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ரா செனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கும் பணி நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகியது. மாளிகாவத்தை, மத்திய கொழும்பு மருத்துவமனையில் முன்னுரிமை சுகாதார ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, கொழும்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் என்.ஐ.ஜாகொட, வைத்தியசாலையின் மருத்துவ கண்காணிப்பாளர் வைத்தியர் ருசிர சரணபாலா ஆகியோர் கலந்துகொண்டதை படத்தில் காணலாம்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல்;

# எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள அரசு தயார் நிலையை ஏற்படுத்த வேண்டும்

GMOA அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில் அதற்கான சிகிச்சை நிலையங்கள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள், கட்டில்கள், தேவையான ஒட்சிசன் ஆகியவை தொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனம் செலுத்த வேண்டுமென்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் அச்சுறுத்தலான காலகட்டத்தில் நாடு உள்ளதாகவும் வைரஸ் தொற்று நோயாளிகள் அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதற்கு விரைவான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்றும் அந்த சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

நாடு பூராகவும் வைரஸ் தொற்று நோயாளர்கள் பெருமளவில் இனங்காணப்பட்டு வரும் நிலையில் அரசாங்கம் நிலைமைகளை எதிர்கொள்ளக்கூடிய தயார் நிலையை ஏற்படுத்திக் கொள்ள

06

# அரச ஊழியர்கள் வாரத்துக்கு 02 தினங்கள் மட்டும் கடமைக்கு

- அதற்கு மேல் நிறுவனத் தலைவர் தீர்மானிக்கலாம்
- பொதுநிர்வாக அமைச்சு புதிய சுற்றுநிருபம் வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் பரவலை கருத்திற் கொண்டு அரசாங்க ஊழியர்கள் வாரத்துக்கு இரண்டு தினங்கள் என்ற வகையில் மாதமொன்றுக்கு எட்டு நாட்கள் கடமைக்கு சமுகமளித்தல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய சுற்றுநிருபம் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி சேவை நிறுவனங்களில் சமூக இடைவெளியை பேணுதல் உள்ளிட்ட நடைமுறைகளை முறையாக செயற்படுத்தும் வகையிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே .ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மாதத்திற்கு எட்டு தினங்கள் மட்டுமே ஊழியர் ஒருவர் சேவை நிறுவனத்திற்கு சமுகமளிக்க

06

# அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுப்பாடற்ற முறையில் அதிகரிப்பு

## காஸ் விலை குறைப்பிலும் பாரிய மோசடி

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா எம்.பி

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுப்பாடற்ற முறையில் உயர்வடைந்துள்ளதால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, நாட்டு மக்கள் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.நாளாந்த நுகர்வுத் தேவைகளுக்கு ஏற்றால் போல்

06

இரண்டு வருடமாகியும் கண்டுபிடிக்க முடியவில்லை;

# சாராவுக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது

## அமைச்சர் சரத் வீரசேகர

**சுப்பிரமணியம் நிசாந்தன்**



உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட ஒருவரின் மனைவி எனக் கருதப்படும் சாரா ( புலத்சினி ராஜேந்திரன்) இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருப்பதற்கான வாய்ப்பில்லையென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். சாய்ந்தமருதில் குண்டு வெடிப்பு இடம்பெற்று இரண்டு வருடங்களாகியுள்ள போதிலும் சாராவுக்கு என்ன நடந்தது? என்பது மர்மமாகவே உள்ளதென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் திட்டமிட்டுள்ள இரண்டாவது மரபணு பரிசோதனை மிகவும் கடினமானதென தெரிவித்துள்ள அமைச்சர், சாரா இறந்து விட்டாரா? அல்லது இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளாரா? என்பதை உறுதிசெய்வதற்காக புதைக்கப்பட்டுள்ள பெருமளவு உடல்பாகங்களை மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டியிருக்குமென தெரிவித்துள்ளார்.

நிசார் என்ற சாட்சியொருவர் சாரா புலத்சினி

06

இந்திய தூதரக உயரதிகாரியுடன்

# புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ரவிகுமார் சந்திப்பு



புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ரவிகுமார் அண்மையில் இந்திய உயர் உயர்ஸ்தானிகராலயத்தில் அதன் அரசியல் அபிவிருத்தி ஒத்துழைப்புப் பிரிவின் தலைவர் பானு பிரகாஷை சந்தித்து, மலையக மக்களின் பிரச்சினைகளை முன்வைத்துக் கலந்துரையாடினார்.

இந்திய

06

# அஸ்ட்ரா செனகா 02 ஆவது டோஸ் வழங்கல் ஆரம்பம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸை பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டம் நேற்றுமுதல் நாடு முழுவதும் ஆரம்பமாகியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதாரத்துறை ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர் உட்பட முன்னுரிமை அடிப்படையில் கொவிட்19 தொற்றுக்கு எதிரான தடுப்பூசியை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 150.12 | 155.29 |
| கனடியன் டொலர் | 156.97 | 161.50 |
| யூரோ | 234.40 | 241.28 |
| ஜப்பான் யென் | 1.7809 | 1.8370 |
| சிங்கப்பூர் டொலர் | 146.86 | 150.88 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 269.77 | 277.50 |
| சுவிஸ் பிராங்க் | 210.47 | 218.76 |
| அமெரிக்க டொலர் | 194.86 | 199.52 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 523.87 | கட்டார் ரியால் | 54.23 |
| குவைத் டினார் | 655.88 | சவூதி ரியால் | 52.65 |
| ஓமான் ரியால் | 513.00 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 53.76 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 16ம் நாள் வியாழக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 16

### குறள் தரும் சிந்தனை



பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது

பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் வளம் பெற்று விளங்குவர், அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பயம் அற்றவரே அவர் ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை

## உச்சபட்ச விழிப்புணர்வை கடைப்பிடிக்க வேண்டும்

கொவிட் 19 தொற்றுக்கு நாட்டில் நாளாந்தம் அதிகளவானோர் உள்ளாகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்நாட்டின் கொவிட் 19 தொற்று வரலாற்றில் முதல் தடவையாக 1111 பேர் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான கொவிட் 19 தொற்று சிகிச்சைப் பிரிவுகளில் நோயாளர்களின் எண்ணிக்கையும் பெரிதும் அதிகரித்துள்ளது. இந்நிலைமைக்கு முகம் கொடுப்பதற்கு தேவையான எல்லா ஏற்பாடுகளையும் அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது.

இவ்வாறான நிலையில், தற்போது நாட்டில் உருவாகியுள்ள இத்தொற்று பரவுதலுக்கு பிரித்தானியாவில் பரவிய திரிபடைந்த கொவிட் 19 தொற்றே காரணமென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூற்று அறிவியல் பீட மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

'இவ்வைரஸானது நாட்டில் ஏற்கனவே பரவிய கொவிட் 19 வைரஸை விடவும் 50 வீதம் வேகமாகப் பரவக் கூடியதாக இருப்பதோடு, 55 வீதம் மரணத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் விளங்குகின்றது' என்று இம்மருத்துவ பீடத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர தெரிவித்திருக்கின்றார்.

கொவிட் 19 தொற்று தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூற்று அறிவியல் பீடத்தில் மருத்துவ ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் இம்மாதம் 08 ஆம் திகதி ஆய்வுக்காக கிடைக்கப்பெற்ற மாதிரிகளில் பொரலஸ்கமுவ பிரதேசத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற மாதிரியொன்றில் சந்தேகம் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொரலஸ்கமுவ, கொழும்பு, குருநாகல் ஆகிய பிரதேசங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற 43 மாதிரிகளை பரீட்சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள், தற்போது இலங்கையில் பரவுவது பிரித்தானியாவில் திரிபடைந்த பி.1.1.7 வைரஸ் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது ஏற்கனவே பரவிய வைரஸை விடவும் வேகமாகப் பரவக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களை முறையாகவும் உச்சளவிலும் கடைப்பிடிக்குமாறும் அரசாங்கமும் சுகாதாரத் தரப்பும் மாத்திரமல்லாமல் சமூக நல அமைப்புகளும் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

ஏனெனில் வேகமாகப் பரவும் ஒரு தொற்று நோயாக இருப்பதால் இதன் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். அதன் ஊடாக மாத்திரமே இத்தொற்றின் பரவுதல் தொடரைத் துண்டிக்கக் கூடியதாக இருக்கும்.

தற்போது இத்தொற்று தீவிர நிலையை அடைந்திருந்தும் கூட அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொள்பவர்களை சமூகத்தில் பரவலாக அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இத்தொற்று தவிர்ப்புக்கான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பேணப்படாமை அவற்றில் குறிப்பிடத்தக்க கவனயீனங்களாக உள்ளன.

அதனால் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பேணாதவர்களையும் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிச் செயற்படுபவர்களையும் கைது செய்து சட்டத்தின் முன்கொண்டு வரும் நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். அந்த அடிப்படையில் நேற்றுமுன்தினம் வரையும் 140 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். வண்ணார்ப்பண்ணையிலுள்ள கோயிலொன்றில் கொவிட் 19 தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாத வகையில் சமய நிகழ்வு நடத்தப்பட்டது என்ற சந்தேகத்தின் பேரில் கோயிலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவரும் செயலாளரும் கூட கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில், வெகுஜன ஊடக அமைச்சரான அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல்ல 'கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் இத்தொற்று பேரிடராக மாறுவதற்கு ஏற்ப மக்கள் செயற்படுவார்களாயின் அவர்கள் விரும்பாத அன்றாட வாழ்க்கையைக் கடினமாக்க கூடிய நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே நாட்டில் தற்போது உருவாகியுள்ள கொவிட் 19 தொற்றின் பாரதூரத்தையும் தாக்கங்களையும் உணர்ந்து அதன் பரவுதலுக்கு துணை போகாத வகையில் சுகாதார வழிகாட்டல்களைப் பேணி, தனிமைப்படுத்தல் சட்டங்களை மதித்து செயற்படுவதில் மக்கள் ஆர்வமும் அக்கறையும் காட்ட வேண்டும். அது தமக்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் அளிக்கப்படும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# விபுலாநந்த அடிகளாரின் துறவற தினத்தின் 97 வருட நிறைவு காரைதீவில் அனுஷ்டிப்பு



உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 97ஆவது துறவற தினவிழா சித்ரா பௌர்ணமி தினத்தன்று சுவாமிகள் பிறந்த காரைதீவில் சுகாதார வழிகாட்டலுடன் சிறப்பாகக் அனுஷ்டிக்கப்பட்டது.

சுவாமி விபுலாநந்த அடிகளார் 1924 ஆம் ஆண்டில் சித்ரா பௌர்ணமி தினத்தில்தான் துறவறத்தை மேற்கொண்டார். பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடி சீடரான சுவாமி சிவானந்தரிடமிருந்து துறவற ஞானோபதேசம் பெற்றுத் துறவியானார்.

## கல்லடியிலுள்ள சுவாமியின் சமாதியில் அருங்காட்சியகம் அமைக்க திட்டம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம் இணைந்து நடாத்திய துறவற தினவிழா மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்த ஜீ மஹராஜ் முன்னிலையில் பணிமன்றத் தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முன்னதாக இச்சிறப்பு தினத்தில் சுவாமியின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை புஷ்பாஞ்சலி செலுத்தி காவிவஸ்திரம் அணிவித்து தீபாராதனை காட்டப்பட்டது. சுவாமி விபுலாநந்த கற்கைநிலையத்தின் ஏற்பாட்டில் பண்ணிசை மற்றும் பரதநாட்டிய வகுப்புகளின் அங்குரார்ப்பண நிகழ்வுகளும் அதே மணிமண்டபத்தில் நடைபெற்றன.தேசிய கல்வி நிறுவக நடனத்துறை தலைவர் கலாநிதி திருமதி ராகினி திருக்குமரன் கலந்து சிறப்பித்தார். அதேவேளை மணிமண்டபத்தில் 'வித்திய கூடம்' எனும் நூலகமும் திறந்து வைக்கப்பட்டு அங்கு அறநெறி நீதிநூல்களின் கண்காட்சியும் இடம்பெற்றது.

பின்பு மணிமண்டப விபுலாநந்த கலாலயத்தில் துறவற தின பொதுக் கூட்டம் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியான அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், சிறப்பதிதியான காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ஆகியோரும் உரையாற்றினர்.

97ஆவது துறவற தினத்தையொட்டி இந்து கலாசார திணைக்களம் தயாரித்த சுவாமி விபுலாநந்தரின் திருவுருவப் படம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்து கலாசாரத் திணைக்களம் வெளியிட்ட நீதி துணை நூல்கள் அறநெறி மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. திணைக்களத்தினால் 5 அறநெறி வகுப்புகளுக்கு சுருதிப் பெட்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

'ஆன்மிகம் ஒன்றுதான் மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்தும். ஆன்மிகம் சிறப்பாக தொழிற்பட்டால் ஏனைய அனைத்தும் நல்வழியில் சிறப்பாக இயங்கும். இதைத்தான் சுவாமி விவேகாநந்தர் முதல் சுவாமி விபுலாநந்த அடிகளார் வரை கூறியிருந்தனர்' என்று துறவற தின விழாவில் உரையாற்றிய மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்த ஜீ மஹராஜ் தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் "சுவாமிக்கு விழா எடுப்பதானால் மிகப் பொருத்தமான தினம் இந்த துறவற தினம்தான். பிறந்த, மரணித்த தினங்களை விட சுவாமிகளுக்கு மிகவும் பொருத்தமான தினம் இதுதான். இந்து மதம் ஒன்றுதான் ஆன்மிகப்பட்ட மதம்.

இந்து மதத்தின் ஒரு அங்கம் தமிழ். பௌத்த மதத்தையும் ஒரு காலத்தில் வழிகாட்டியது இந்து மதமே. இந்து மதம்தான் ஆன்மீகப்பட்ட ஒரு மதம். இந்துமதத்தின் ஒரு அங்கமான தமிழ்மொழியை நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

தமிழ்மொழி முக்கியமானது. இந்துமதத்தை பின்பற்றுவதனால் தமிழ் தெரிய வெண்டும். தமிழ்மொழயில் தொல்காப்பியம் பழைமையானது என்பது தவறு. அதற்கு முன் ஏராளமான சமயநூல்கள் இருந்தன. அவையனைத்தும் சமணர்களால் எரிக்கப்பட்டன. அதனால்தான் தொல்காப்பியம் பழையது என்கிறோம்.

முதன்முதலில் நல்லதம்பிப்பிள்ளை என்பார்தான் உலகெங்கும் சைவசமயத்தை பரப்பியவர். ஆங்கில புலமை அவருக்கிருந்தது. சைவசமயத்தை பார்க்க வேண்டுமானால் சுவாமி விவேகாநந்தரை பார்க்க வேண்டும் என்கிறார் அவர்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு தயவான வேண்டுகோள். கர்நாடகத்திற்குள் மேலைத்தேய இசையை சேர்ப்பது தவறு.மாணவரிடையே எந்தப் பாகுபாடுமில்லாமல் கல்வியை வழங்கியவர் சுவாமி. ஆன்மிகம் பெரியதொரு வரப்பிரசாதம். எல்லோராலும் போற்றப்படும் யாழ்நூலை அனைவராலும் படிக்க முடியாது. விளக்கவுரையை எழுதி மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும். அனைவரும் படிக்க வேண்டும், பயன் பெற வேண்டும்.

யாழ்நூலை விளக்கவுரையுடன் பலரும் படிக்கத்தக்கதாக இலகுவாக்குமாறு கல்லடி விபுலாநந்த அழகியல் கற்றை நிறுவகப் பணிப்பாளரிடம் கோரியுள்ளேன்.

கல்லடியிலுள்ள சுவாமியின் சமாதியில் அருங்காட்சியம் அமைக்கப்படவுள்ளது. அதில் அவரது ஒட்டுமொத்த விடயங்களும் காட்சிப்படுத்தப்பட வேண்டும். அதற்காக தமிழ் கூறு நல்லுலகம் உதவ வேண்டும்" என்றார்.

இவ்வைபவத்தில் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின. மன்றச்செயலாளர் கு.ஜெயராஜி நன்றியுரை நிகழ்த்த, கலாசாரஅலுவலர் என்.பிரதாப் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# ஊடகவியலாளர் சிவராம் 16 ஆவது நினைவு தினம்

சிவராம் மட்டக்களப்பில் பிறந்து உலகறிந்த ஊடகவியலாளராக திகழ்ந்தவர். சிவராமின் தந்தையார் தர்மரட்ணம் கேம்பிறிட்ச் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். சிவராமின் பாட்டனார் சபாபதிப்பிள்ளை (வன்னியனார்) 1938ஆம் ஆண்டில் மட்டக்களப்பின் இரண்டாவது தெரிவு செய்யப்பட்ட இலங்கை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்.

சிவராம் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார். அதைத் தொடர்ந்து கொழும்பில் கற்றார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றார். செப்டம்பர் 1981இல் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு சென்ற அவர், ஆங்கிலத்தையும் ஒரு பாடமாகக் கொண்டு இரண்டு ஆண்டுகள் மட்டுமே அங்கு பயின்றார். பின்னர், அரசியல் ஈடுபாட்டினாலும், 1983 இல் இடம்பெற்ற இனக்கலவரத்தினாலும் பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டார்.

சிவராம் 'தராகி' என்ற புனைபெயரில் ஆங்கிலத்தில் கொழும்பில் இருந்து வெளிவரும் 'The Island' ஏட்டில் தமது முதலாவது கட்டுரையை 1989இல் எழுதினார். அரசியல், போரியல் மற்றும் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக



அவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. உள்நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் அவரது கட்டுரைகள் பெயர் பெற்றிருந்தன.

சிவராம் கடந்த 2005 ம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி கொழும்பில் கடத்தி செல்லப்பட்டு மறுநாள் ஏப்ரல் 29 ம் திகதி கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார்.

தனது கருத்துக்களின் ஊடாக உண்மைகளை உரக்கச் சொன்ன மிகவும் துணிச்சல் மிக்க ஊடகப் போராளியாக திகழ்ந்த ஊடகவியலாளர் சிவராம் 'தராக்கி' மற்றும் 'எஸ்.ஆர்' ஆகிய புனைபெயர்களில் பல ஆக்கங்களை எழுதி வந்திருந்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் பத்திரிகையாளர்கள் பலரை கணினியுகத்திற்குள் கொண்டு வந்த பெருமையும் சிவராமையே சாரும் என்பதும் குறிப்பிடத்தக்கது.பத்தி எழுத்தாளராக, அரசியல் ஆய்வாளராக, பாதுகாப்பு ஆய்வாளராக பல்வேறு பரிமாணங்களை கொண்ட சிவராம் ஆரம்பத்தில் 1980 களில் தமிழர் தீவிரவாத போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் (புளொட்) முழுநேர செயற்பாட்டாளராக மாறிய சிவராம் 1990 களின் நடுப்பகுதியில் அதன் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாக கடமையாற்றியவர்.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் மனங்களை விட்டு விலகி விடாத ஒருவராக 'தராக்கி' என்ற சிவராம் விளங்குகின்றார். பத்திரிகையாளர்கள் நல்ல பல புதிய விடயங்களைத் தொடர்ந்து கற்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக அவர் விளங்கினார்.

**ஆர்.நடராஜன்...**
*(பனங்காடு தினகரன் நிருபர்)*

# டெல்லியில் உடல்களை தகனம் செய்வதற்கு இடப்பற்றாக்குறை

இந்தியாவில் கொரோனா காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், நிலைமையை சமாளிக்க நாய்களைத் தகனம் செய்யும் இடத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்ய டெல்லி அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொரோனா 2ஆம் அலையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக டெல்லி உள்ளது.

டெல்லியில் தினமும் 4,149 பேருக்கு வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்படுகிறது. அதே போல கொரோனா உயிரிழப்புகளும் தினமும் 300 ஐ தாண்டியுள்ளது. இதன் காரணமாக உயிரிழப்பவர்களைத் தகனம் செய்வதிலும் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. நிலைமையைச் சமாளிக்க தெற்கு டெல்லியில் உள்ள துவாரகா செக்டர் 29 இல் தற்காலிக ஏற்பாடாக, உயிரிழக்கும் கொரோனா நோயாளிகளைத் தகனம் செய்ய டெல்லி மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

இது நாய்களை தகனம் செய்ய திட்டமிடப்பட்டிருந்த இடமாகும். செக்டர் 29 இல் சுமார் 3.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த இடத்தில் இன்னும் சடலங்கள் எரிக்கும் பணிகள் தொடங்கப்படவில்லை. மாநிலத்தில் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதால் நிலைமையை சமாளிக்க இந்த இடம் உதவும் என டெல்லி அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெல்லியில் கடந்த வாரம் தினமும் 650 பேரின் உடல்களுக்கு இறுதிச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த எண்ணிக்கை தற்போது 882ஆக உயர்ந்துள்ளது. எதிர்வரும்நாட்களில் கொரோனா உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதால் குழப்பத்தைத் தவிர்க்கத் தினசரி 1,000 உடல்கள் வரை தகனம் செய்ய தயாராக இருக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். யமுனை நதிக்கரையில் உடல்களை தகனம் செய்ய ஏதுவான இடங்களையும் அடையாளம் கண்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.



## கொரோனாவினால் தினமும் 300இற்கு மேல் உயிரிழப்புகள்

# மருந்து உற்பத்தியை உள்நாட்டில் மேற்கொள்ள துரித நடவடிக்கை

**ஹம்பாந்தோட்டை ஆரபொக்க மருந்து உற்பத்தி வலயத்தில் முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக விமான சேவைகள் மற்றும் முதலீட்டு அபிவிருத்தி வலய பிரதி அமைச்சர் டி. வீ. சானக தெரிவித்தார்.**

## ஹம்பாந்தோட்டை ஆரபொக்க மருந்து உற்பத்தி வலயத்தில் முதலீட்டுக்கு வாய்ப்பு

ஹம்பாந்தோட்டை ஆரபொக்க மருந்து உற்பத்தி வலயத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விமான சேவைகள் மற்றும் முதலீட்டு அபிவிருத்தி வலய பிரதி அமைச்சர் டி. வீ. சானக இங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

"உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளில் மிகவும் பிரசித்தி பெற்ற இலங்கை, மருந்து உற்பத்தியில் புதியதோர் அடையாளத்தினை ஏற்படுத்தும் வகையில் ஹம்பாந்தோட்டை ஆரபொக்க மருந்து உற்பத்தி வலயத்தில் முதலீட்டாளர்கள் தங்களது தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்படும்.

தற்பொழுது உலகலாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள நோய்த் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் மருந்து உற்பத்தி கைத்தொழில் மிகவும் சிறந்த முதலீடாக மாறியுள்ளது. இதனால் இத்துறையில் முதலீடு செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இந்த திட்டத்தை துரிதகதியில் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஹம்பாந்தோட்டை ஆரபொக்க மருந்து உற்பத்தி வலயத்திற்கென ஹம்பாந்தோட்டை ஆரபொக்க பிரதேசத்தில் ஆயிரம் ஏக்கர் காணி இனங் காணப்பட்டுள்ளதோடு அதில் முதல் கட்டமாக 400 ஏக்கர் காணியில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. முதல் கட்டமாக காணிகளை கையேற்று வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய முதலீட்டு வலயத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கைத்தொழிற்சாலைகளை நிர்மாணித்தல் என்பன ஒரே தடவையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான எமது அரசாங்கம் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள நோய்த் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இத்துடன் இறக்குமதிக்காக செலவிடப்பட்டு வரும் பாரியளவு தொகையையும் குறைத்து ரூபாவின் பெறுமதியை பேணுவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

மருந்து இறக்குமதிக்காக வருடாந்தம் பாரிய தொகையை செலவிட்டு வருகிறோம். இதிலிருந்த ஒரு குறிப்பிட்டளவு தொகையை மீதமாக்குவதே எனது அமைச்சின் எதிர்பார்ப்பாகும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.





**எம்.இர்பான் ஸகரியா...**
**(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)**

# விருதுகள் பெற்றுள்ள நாகேந்திரன் அதிபர் சேவை–1 இற்கு பதவியுயர்வு

**பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிக்குடியில் பிரதி அதிபராக கடமையாற்றும் விசேட பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியரான நாராயணபிள்ளை நாகேந்திரன் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.**

இவர் கலைமாணி, கலை முதுமாணி, இந்து தர்மாசிரியர், பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா, கல்வி முகாமைத்துவ டிப்ளோமா, முன்பள்ளி டிப்ளோமா போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளார்.

பல ஆண்டுகளாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு 'அளவையியலும் விஞ்ஞான முறையும்' பாடத்தை கற்பித்து பல மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி மாணவர்கள் மத்தியில் தளராத நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார்.

பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக கல்வியமைச்சின் கல்வி வெளியீட்டு திணைக்களத்தால் 2008, 2010, 2015 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய பாட நூலாக்கப் பணியில் எழுத்தாளராகவும், பதிப்பாசிரியருமாக பங்காற்றியுள்ளதுடன், தேசிய கல்வி நிறுவகத்தின் பிராந்திய நிலையங்களில் நடத்தப்பட்டு வரும் கல்விமாணி பட்டக் கற்கை நெறியின் பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

பல கல்வி , கலைசார் , சிறுவர் ஆக்கங்களை நூல்களாக வெளியீடு செய்துள்ள இவர் கல்வியமைச்சு, கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சு, ஜனாதிபதி செயலகம், லேக்ஹவுஸ் போன்றவற்றால் நடத்தப்பட்ட கட்டுரை, பாடலாக்கம், கவிதை, சிறுவர் கதைகள் என பல போட்டிகளில் பங்கெடுத்து வெற்றி பெற்று விருதுகளையும், பணப்பரிசில்களையும் வென்றுள்ளார்.

இவருடைய சமூக, சமய அறநெறிச் சேவைகள், கல்விச் சேவைகள், சிறுவர்களுக்காக ஆற்றிய பணிகள் பாராட்டி அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கௌரவ பட்டங்களையும் விருதுகளையும் வழங்கி கௌரவித்துள்ளன.



கல்வியமைச்சு 'குரு பிரதீபா பிரபா' விருதினையும், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சும், இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து கலைச் சுடர், தேசிய கலைஞர் விருதுகளையும், தேசிய விஞ்ஞான மன்றம் ஐந்து நட்சத்திர விருதையும், பட்டிருப்பு கல்வி வலயம் சாதனையாளர் விருதினையும், அகில இன் நல்லுறவு ஒன்றியம் கலாநிதி, சாமசிறி வித்தியாசகர் பட்டங்களையும், தேசிய சமாதான சங்கம் கல்விசூரி, கீர்த்திசிறி தேசபந்து, இலங்கை சமாதான கற்கை நிலையம் சமாதான தூதுவர், விஸ்வம் கெம்பஸ் வாழ்நாள் சாதனையாளர் விருதினையும், தேசிய சமாதான நீதிவான்கள் பேரவை கீர்த்தி ஸ்ரீ விருதினையும், மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையம் சமூகஜோதி விருதினையும் வழங்கி கௌரவித்துள்ளன.

நாராயணப்பிள்ளை நாகேந்திரன் தேசிய எழுத்தாளர் அமைப்பின் உறுப்பினராகவும், மட்டக்களப்பு மாவட்ட கலாசார அதிகார சபையின் உபசெயலாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் நிருவாக சபை உறுப்பினராகவும், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் நிருவாக சபை உறுப்பினராகவும், அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச கலாசார அதிகார சபையின் உபதலைவராகவும், கோயில்போரதீவு தென்கண்ட கண்ணகி கமநல அமைப்பின் தலைவராகவும் பல சமூகப் பணிகளை சிறப்பாக ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

# சமுர்த்தி வங்கிகள், வங்கிச் சங்கங்களை கணினி மயப்படுத்தும் வேலைத் திட்டம்

**சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தவர்கள் அவர்களது வங்கி நடவடிக்கைகளின் போது எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களை கணினி மயப்படுத்தும் தேசிய வேலைத் திட்டம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.**

இதற்கமைவாக அம்பாறை மாவட்டத்திலும் இவ்வேலைத் திட்டம் விரைவாக முன்னெடுக்கப்படுவதுடன் இம்மாவட்டத்தில் இதுவரை கணினி மயப்படுத்தப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட வங்கிகளும் வங்கிச் சங்கங்களும் 'ஒன்லைன்' மூலமான கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்துள்ளன.

இதன் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் மூவின சமூகத்தவர்களும் வாழ்கின்ற அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஒலுவில், பாலமுனை, தீகவாபி போன்ற கிராமங்களில் சமுர்த்தி பயனாளிகளின் நன்மை கருதி அக்குடும்பங்களை ஒன்றிணைத்து பாலமுனை பிரதேசத்தில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கி கிளையில் கொடுக்கல் வாங்கல்களை ஒன்லைன் மூலமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.



ஒலுவில் பாலமுனை சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல். இமாமுடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் சமுர்த்தி மாவட்ட பணிப்பாளருமான ஜெகதீசன் பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபிர் கௌரவ அதிதியாகவும், அட்டாளைச்சேனை சமுர்த்தி வங்கி வலய முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மதுள்ளாஹ், சமுர்த்தி மாவட்ட கணக்காய்வு உத்தியோகத்தர் இஸட்.ஏ.றகுமான், மாவட்ட சமுர்த்தி புலனாய்வு உத்தியோகத்தர் எ.ஜே.எம்.ஹனிபா, வங்கி உதவி முகாமையாளர்களான ஏ.எஸ்.எஸ்.அஷ்ரப், ஏ.எல். பாறூக் உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், சமுர்த்தி பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



இத்திட்டத்தின் மூலம் வறிய குடும்பங்களை மேலும் வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தினை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. இந்த வங்கி வலயமைப்பின் ஊடாக சமுர்த்தி பயனாளிகள் இலகுவாக தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது சமுர்த்தி சங்கங்களின் ஏற்பாட்டில் பிரதம அதிதி, கௌரவ அதிதி மற்றும் சமுர்த்தி முகாமையாளர், உதவி முகாமையாளர்களின் சேவையைப் பாராட்டி நினைவுப் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஐ.ஏ.ஸிறாஜ்...**
**(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)**

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை

# கொட்டாவ வெளியேறல் பகுதி நேற்று முதல் மூடப்பட்டது



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ வெயியேறல் பகுதி, மறு அறிவித்தல் வரை நேற்று புதன்கிழமை காலை 06.00 மணி முதல் மூடப்பட்டுள்ளது.

கொட்டாவ வெயியேறல் பகுதியில் பணிப்புரிந்த 03 ஊழியர்களுக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் அம்பியூலன்ஸ் மற்றும் பயணிகள் பஸ்களுக்கு மட்டும் செல்வதற்கு கொட்டாவ வெயியேறல் பகுதி திறக்கப்படுமென வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் ஊடாக பயணம் மேற்கொள்பவர்கள் கஹதுடுவ மற்றும் அத்துருகிரிய வெளியேறல் பகுதிகளை பயன்படுத்துமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

கொட்டாவ நுழைவாயிலூடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்குள் செல்ல முடியும். ஆனால் கட்டணம் அறவிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாதென வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

## அரச ஊழியர்கள் வாரத்துக்கு... 03ஆம் பக்க தொடர்..

வேண்டும். அதற்கு மேலதிகமாக மிகவும் பொருத்தமான வகையில் நிறுவனத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான தீர்மானத்தை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவர்கள் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரிகள் வாரத்திற்கு மூன்று தினங்களுக்கு மேல் சேவைக்கு அழைக்கப்படுவார்களானால் அது தொடர்பில் நிறுவனத்தின் தலைவர் தீர்மானிக்க வேண்டுமென்றும் மேற்படி சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ)

## சாராவுக்கு என்ன நடந்தது... 03ஆம் பக்க தொடர்..

என்ற தமிழ் பெண் இஸ்லாமிய மதத்திற்கு மாறி கட்டுவாப்பிட்டிய தற்கொலைக் குண்டுதாரி ஹஸ்துன் என்பவரை திருமணம் செய்தார். அவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டாரென குறிப்பிட்டுள்ளார் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இதுவரையில் எதுவும் நிரூபிக்கப்படவில்லையென தெரிவித்துள்ள அமைச்சர், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சாரா தப்பிச் செல்வதற்கு உதவியதை தான் பார்த்ததாகவும் நிசார் தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியமளித்த ஒருவர்இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆனால் சிசிடிவி கமரா காட்சிகளோ அல்லது வேறு எந்த ஆதாரமோ இல்லை. அவர் பொய் கூறியிருக்கிறார் எனக் கருதுகின்றோம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை முடிவுக்கு கொண்டுவரவிரும்புகின்றேன். இந்திய புலனாய்வுத் துறையை அணுகியுள்ளோம். அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

வேறு எந்த ஆதாரங்களுமில்லை. இதன் காரணமாக நாங்கள் இந்த விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாத நிலையிலுள்ளோம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒருசில செகண்ட்களில் அவர் தப்பியிருக்கலாம் ஆனால் அவர் உயிரிழந்துவிட்டார் என்றே நாங்கள் கருதுகின்றோம் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அஸ்ட்ரா செனகா ... 03ஆம் பக்க தொடர்..

கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமானது.

முதல்கட்டமாக 09 இலட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு அஸ்ட்ரா செனகா தடுப்பூசி வழங்கப்பட்டது. இவர்களில் முன்னுரிமை அடிப்படையில் முதல் தடுப்பூசி வழங்கப்பட்டவர்களுக்கு நேற்று முதல் இரண்டாவது டோஸ் தடுப்பூசி வழங்கும் பணி ஆரம்பமாகியது.

அஸ்ட்ரா செனகா தடுப்பூசியே இவர்களுக்கு இரண்டாவது டோஸாகவும் வழங்கப்படுகிறது.

## சீன பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதியுடன்...

பயனுள்ளதாக அமைந்திருந்ததாக சீன பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் இந்த விஜயத்தின் மூலம் பலமடைந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பிங் (Wei Fenghe), தனது வருகையை நினைவுகூரும் வகையில் விசேட விருந்தினருக்கான நினைவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் (Qi Zhenhong), சீன மக்கள் இராணுவத்தின் ஒன்றிணைந்த பணிக்குழாம் திணைக்களத்தின் தலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் ஷாஓ யென்மின்ங் (Lt. Gen. Shao Yuanming), மேஜர் ஜெனரல் சீ கோவை (Ci Guowei) உள்ளிட்ட சிரேஷ்ட பிரதிநிதிகள், ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ராஜிதவுக்கு எதிரான வழக்கு ...

விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ் வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்த முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சர்ச்சைக்குரிய வெள்ளை வேன் கடந்தல் தொடர்பாக ஊடகச் சந்திப்பு ஒன்றை நடத்தி, அதன் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியதாக இவ்விருவருக்கும் எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## ஆப்கான், பாக், சீனா, ... 03ஆம் பக்க தொடர்..

முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு நாடுகளுக்கு உதவும் வகையில், கொவிட்19 தொற்றுநோயால் முன்வைக்கப்படும் சவால்களை எதிர்கொள்வதன் முக்கியமானது.

ஐ.நா. மற்றும் உலக சுகாதார தாபனத்தின் வழிகாட்டுதலின் கீழ், தேவைகளையுடைய நாடுகளுக்கு முக்கியமான மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் நிலையாகவும், சமமான அளவிலும் கிடைப்பதனைப் பராமரிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

இயற்கை மற்றும் ஏனைய பேரழிவுகளின் போது அவசரத் தேவைகளை வழங்குதல், தொழில்நுட்பம் மற்றும் ஏனைய கருவிகளின் பயன்பாடு மற்றும் கிராமப்புறப் பொருளாதாரங்களில் வறுமை ஒழிப்புக்கான தளங்கள் போன்றன தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு செயன்முறை மையம் அமைதல் வேண்டும் என்றார்.

## தொற்றுநோயை... 03ஆம் பக்க தொடர்..

முடக்காதிருப்பதற்கு ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் தீர்மானித்துள்ளோம். தொற்றுநோய்க்கு பிந்தைய நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கு இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

உலகளாவிய ரீதியிலிருந்து இலங்கைக்கு முதலீடுகளை ஈர்ப்பதே தற்போதைய எமது முன்னுரிமையாகவுள்ளது. அவ்வாறான முதலீட்டாளர்களின் இலங்கை மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு உங்களவு ஆதரவை நான் எதிர்பார்க்கின்றேன்.

உங்களவு இவ்விஜயம் குறித்து மீண்டுமொரு முறை நன்றி தெரிவிப்பதுடன், தொற்றுநோயால் ஏற்படும் சவால்களை சமாளிப்பதற்கு தற்போதுள்ள ஒத்துழைப்பை மேம்படுத்திக்கொள்வதற்கும், உங்களுடனும் உங்கள் அரசாங்கத்துடனும் நெருக்கமாக தொடர்ந்து பணியாற்ற எதிர்பார்க்கின்றேன் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## எத்தகைய சூழ்நிலையையும்... 03ஆம் பக்க தொடர்..

வேண்டுமென மேற்படி சங்கத்தின் செயலாளர் டாக்டர் செனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மருத்துவத்துறை சுமக்க முடியாத அளவில் நோயாளர்களின் அதிகரிப்பு ஏற்படுமானால் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கு அதனை கட்டுப்படுத்த முடியாமல் போகலாம்.

அதனை கருத்தில் கொண்டு போதியளவு சிகிச்சை நிலையங்களில் கொள்ளளவை அதிகரித்துக் கொள்ளல், தீவிர சிகிச்சைப் பிரிவில் வசதிகள் மற்றும் கட்டில்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் தேவையான அளவு ஒட்சிசனை களஞ்சியப்படுத்தல் போன்ற விடயங்களில் அரசாங்கம் அதிக அளவு கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## க.பொ.த. (உ/த) பரீட்சை...

அதேவேளை நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களையும் எதிர்வரும் மே 10ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கல்வியமைச்சர் அனைத்துப் பாடசாலைகளையும் மீண்டும் திறப்பதற்கான தீர்மானம் எதிர்வரும் 02ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த கல்வி அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்;

நாட்டில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடந்த நவம்பர் மாத இறுதியில் நிறைவு பெற்றது. நாடளாவிய ரீதியில் 03 இலட்சத்து 62 ஆயிரம் பரீட்சார்த்திகள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றினர். இன்னும் ஏழு தினங்களுக்குள் அதன் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை செப்டம்பர் மாதத்தில் மேற் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

க.பொ.த உயர்தரப்பரீட்சை கடந்த வருடம் நவம்பர் முதலாம் வாரத்தில் நடைபெற்றது. மாணவர்கள் 3,62,000 பரீட்சார்த்திகள் பங்கேற்றிருந்தனர். இன்று முதல் 07 நாட்களுக்குள் அந்தப்பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்க்கின்றோம். விசேடமாக கலை மற்றும் தொழில்நுட்ப விடயங்களுக்கான பரீட்சைகளை நடத்த சவால் இருந்தது. மாணவர்கள் பலரும் தொற்றினால் பாதிக்கப்பட்டதால் பரீட்சைகளை ஒத்திவைக்கவும் நேர்ந்தது. எந்த பிரச்சினை ஏற்படினும், பரீட்சைகள் ஆணையாளர் மற்றும் அதிகாரிகள், திருத்துபவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதால்தான் இன்றுமுதல் ஒரு வாரத்திற்குள் பெறுபேறுகளை வெளியிடமுடிகிறது. முடிவுகளை விரைவில் வெளியிட முடியுமாகையில், இந்த வருடத்திலேயே செப்டம்பரில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் சேரவும் முடியும். இது எமக்கு கிடைத்த வெற்றி. நாடு முழுவதிலும் மேல 10ஆம் திகதி பல்கலைக்கழங்களை திறக்க முடிவுசெய்தோம். இணையவழியைப் பயன்படுத்தி கற்கைகளை நடத்தமுடிந்த படியினால் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற இழப்புகளைத் தவிர்க்கவும் முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார். (ஸ)

## அதிகளவு நோயாளர் கண்டுபிடிக்கப்படும்...

தயாராகயிருப்பது சிறந்தது என தெரிவித்துள்ள இராணுவத்தளபதி, எனினும் எதிர்வரும் நாட்களில் கண்டுபிடிக்கப்படவுள்ள நோயாளிகளின் எண்ணிக்கையே இதனை தீர்மானிக்கும் எனவும் தெரிவித்துள்ளார். நாங்கள் மக்களை மிரட்டவேண்டிய அவசியமோ அல்லது உண்மையை மறைக்கவேண்டிய தேவையோ இல்லையென தெரிவித்துள்ள ஜெனரல் சவேந்திர சில்வா, கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் சிகிச்சை நிலையங்களை அதிகரிக்க இராணுவம் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## யாழ்.மாதகல் கடலில்...

தெரியவருவதாவது நேற்று புதன்கிழமை அதிகாலை மாதகல் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகொன்று நிற்பதை கடற்படையினர் அவதானித்துள்ளனர்.

இந்த படகில் ஆட்கள் எவரும் இருக்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

படகை சோதனையிட்டபோது கஞ்சா பொதிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றின் நிறை சுமார் 240 கிலோ கிராம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் கடற்படையினர் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய ஜனநாயக மக்கள்... 03ஆம் பக்க தொடர்...

அரசாங்கம் இலங்கை மக்களுக்கு வழங்கியுள்ள பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையிட்டு இந்திய அரசாங்கத்துக்கு தனது நன்றிகளை ரவிகுமார் தெரிவித்தார்.

மலையக மக்கள் மத்திய மற்றும் ஊவா மாகாணத்தில் மட்டுமன்றி அவர்கள் வடக்கு முதல் தெற்குவரை பல மாவட்டங்களில் சிதறி வாழ்வதை அவர் சுட்டிக் காட்டிய ரவிகுமார் மக்கள் நலத் திட்டங்கள் முல்லைதீவு, கிளிநொச்சி, களுத்துறை, மாத்தறை போன்ற மாவட்டங்களில் வாழும் இம் மக்களையும் எட்டச்செய்ய வேண்டும் என்பது எனது அரசியல் பயணத்தில் முக்கிய நோக்கம் எனவும் ரவிக்குமார் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பேராசிரியர் சோ. சந்திரசேகரனும் கலந்துகொண்டார். இந்திய அரசாங்கத்தின் பெருந்தோட்ட பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் திட்டம் அம்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என பேராசிரியர் இதன் போது தெரிவித்தார்.

கலந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக மலையக மக்களுக்கான ஓர் தேசிய பல்கலைக்கழகத்தை மலையக கற்றறிவாளர்கள் இடைவிடாது கோருவதற்கான காரணங்களை அரசியல் பிரிவு அதிகாரி ஆர்வத்துடன் கேட்டறிந்தார்.

இலங்கையுடனான நல்லுறவுகளைப் பேணுவதும் மக்கள் நல மேம்பாட்டுக்கு உதவுவதுமே இந்தியாவின் கொள்கை என இதன்போது தூதரக அதிகாரி தெரிவித்தார்.

## அத்தியாவசிய பொருட்களின்... 03ஆம் பக்க தொடர்..

நாளாந்த வருமானங்கள் இல்லாமையும் அத்தியாவசியப் பொருட்களின் கட்டுப்பாடற்ற விலை என்பவற்றால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கிய வண்ணம்முள்ளனர்.

குறிப்பிட்ட சில வியாபாரிகளின் தேவைகளுக்கேற்ப அரசாங்கம் செயற்படுகிறதேயன்றி மக்களின் தேவைகளுக்கேற்ப செயற்படுவதாக இல்லை.

சீனி மோசடியை ஏற்படுத்தியவர்களே தேங்காய் எண்ணெய் மோசடியையும் ஏற்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாக புரிகிறது. இதையும் தாண்டி மக்களை சூட்சுமமாக ஏமாற்றும் புதிய மோசடியிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அண்மையில் ஏற்படுத்தப்பட்ட கேஸ் விலைக் குறைப்பு பாரிய ஏமாற்றும் வித்தையாகும். கேஸ் 12.5 கிலோ எடை கொண்ட கொள்ளலவிலிருந்து 03 கிலோ எடையைக் குறைத்து விட்டு 100 ரூபா விலைக் குறைப்பாக காட்டியுள்ளனர்.

உண்மையில் எடை குறைப்பால் 400 அல்லது 500 ரூபாவை மக்கள் மேலதிகமாக செலுத்துகின்றனர். அரசாங்கத்தோடு இருக்கும் சில வியாபார நண்பர்கள் குழுவே இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டுள்ளன.

கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு சட்டம் நாட்டின் நலனிற்கு பாதிப்பாக அமைந்துள்ளது. புதிதாக இணைக்கப்பட்ட பூமிப் பரப்பை தனி சீனாவின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசமாக மாற்றும் இந்த ஆணைக்குழுச் சட்டம் என்பதாலயே இதை எதிர்க்கிறோம். இலங்கையின் முன்னேற்றத்திற்கு கொழும்புத் துறைமுக நகரம் மிக முக்கிய மூலோபாய இடமாகும். எனவே இதை சீனாவின் ஆதிக்கத்திற்கும் சீனாவின் தேவைக்கு ஏற்பவும் விடக்கூடாது.

கொரோனா மூன்றாம் அலை ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியாவில் முகாமை செய்ய முடியாமையின் விளைவுகளை படிப்பினையாகக் கொண்டு இலங்கை அரசாங்கமும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

கொவிட் பரவல் மற்றும் சிகிச்சையளிப்பு முகாமை விடயங்களில் சுகாதாரத் துறை பலவீனப்பட்டுள்ளதாக சுகாதார நிர்வாக அதிகாரிகளே கூறுகின்றனர்.

தடுப்பூசிளை கொள்வனவு செய்வதற்கு இவ்வளவு காலமும் நிதி ஒதுக்காது தற்போது தடுப்பூசி தான் ஒரே தீர்வு என்று ஜனாதிபதி கூறுகிறார். கடந்த ஆண்டே தடுப்பூசி கொள்வனவு பற்றி பாராளுமன்றத்தில் குறிப்பிட்டேன்.

அதற்கு அமைச்சர்களான வாசுதேவவும் நாமலும் கிண்டலடித்தனர். இன்று அவை உண்மையாகியுள்ளன என்றார்.

## யாழ். வண்ணார் பண்ணை கோவில்...

ஆலயத்தின் தலைவரும் செயலாளரும் பொலிஸாரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

நாட்டில் கொவிட்19 கட்டுப்பாட்டு சுகாதார விதிமுறைகளை மீறி ஆலயத் திருவிழாவை நடத்தியதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் பரவலை ஏற்படுத்த வழிசமைத்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய தலைவர், செயலாளர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு இன்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. கைதான இருவருக்கும் செவ்வாய்க்கிழமை இரவே பொலிஸ் பிணை வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அந்தக் காணொளி தென்னிலங்கை தொலைக்காட்சியில் வெளியிடப்பட்டதன் அடிப்படையில் யாழ். தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெனாண்டோவின் பணிப்பில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் சுகாதார விதிமுறைகளுக்கமைய 50 அடியார்கர்களுக்கு மட்டுமே ஆலயத்தில் ஒரே நேரத்தில் வழிபட அனுமதிக்கப்படும் என சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

## மே தினப் பேரணியை ...

ஜே.வி.பி. தனது மே தின நினைவுகளை ஒன்லைனில் நடத்த முடிவு செய்துள்ளது.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஒன்லைன் மூலம் மே தின பேரணி நடைபெறுமென கூறினார்.

உழைக்கும் சமூகத்துக்காகவும், அடக்குமுறையை மேற்கொள்ளும் தலைவர்களிடமிருந்தும் தங்கள் உரிமைகளை கோருவதற்காகவும் மே தினம் நினைவுகூரப்படுவதாக விஜித ஹேரத் குறிப்பிட்டார். (ஸ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை...

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 145 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்களுள் அதிகமானோர் மொனராகலை, திருகோணமலை மற்றும் களுத்துறை மாவட்டங்களை சேர்ந்தவர்களென தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 3,900 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சுற்றாடலை அழிவுக்கு உட்படுத்துவோருக்கு...

தீர்மானங்களை மேற்கொள்ளும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

சுற்றாடலை அழிவுக்குட்படுத்துவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும்சுற்றாடலைபாதுகாக்கும்வகையில் யோசனைகளை முன் வைப்பதற்கும் அதன்மூலம் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இந்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

'சுபிட்சமான நோக்கு' கொள்கைத் திட்டத்தின் கீழ் முக்கியமான சில விடயங்களை உள்ளடக்கி சுற்றாடலை பாதுகாப்பது தொடர்பில் இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரப் பாவனை, மண் வளம், பூகோளம், கழிவு பொருட்கள், கைத்தொழில் மற்றும் மீள் சுழற்சி வலு சக்தி, குடியிருப்புகள், நகர சுற்றாடல் தொடர்பான ஆய்வு தொடர்பிலும் இதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டிற்கு இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்காக கடந்த 2019 ஆம் ஆண்டில் மாத்திரம் 221 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்பட்டுள்ளது. அதனைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் சில வருடங்களுக்குள் இரசாயன உர இறக்குமதியை முழுமையாக நிறுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

எமது சுற்றாடலை பாதுகாத்து பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் எமது நாட்டுக்கு கிடைக்கும் பொருளாதார மற்றும் சமூக பயன்களை போன்றே சர்வதேச ரீதியில் பல்வேறு நாடுகள் வேகமாக பின்பற்றும் கொள்கையின் மூலமான பிரதி பலன்கள் எமது நாட்டிற்கும் பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

இதுதொடர்பான பல்வேறு யோசனைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். அதற்கான அனுமதியை அமைச்சரவையும் வழங்கியுள்ளது.

அதன்படி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இரசாயன உரம், கிருமி நாசினி மற்றும் பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதை தடை செய்தல்,

இயற்கைப் பசளை உற்பத்தி தொடர்பில் உற்பத்தியாளர்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல், புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தல், முள்ளுத்தேங்காய் உற்பத்தியை படிப்படியாக தடை செய்தல் உள்ளிட்ட விடயங்களும் மேற்படி யோசனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.(ஸ)

## நாட்டின் பல பகுதிகளில்...

திரிபுபடுத்தப்பட்டதுமான கொரோனா வைரஸ் இனங்காணப்பட்டுள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு, குருநாகல், பொரலஸ்கமுவ போன்ற பிரதேசங்களில் கொரோனா வைரஸ் தொற்று நபர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரி மூலமாக பிரிட்டனின் திரிபு வைரஸ் இலங்கையில் பரவியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் ஜீவ வாயு விஞ்ஞானத் துறை பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அது பிரிட்டனில் வேகமாக பரவும் திரிபுபடுத்தப்பட்ட வைரஸான B 1 1 7 ரக வைரஸ் எனவும் அது 50 வீதத்தை விட மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த இரண்டு மூன்று வாரங்களுக்குள் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டு வருகின்றனர்.

அதேபோன்று வைரஸ் தொற்று தொடர்பான அறிகுறிகள் தொடர்பிலும் சமூகத்திலிருந்து பெருமளவில் தெரிவிக்கப்பட்டு வந்தது. அதனை கருத்திற் கொண்டு நாம் அது தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்டோம். கொழும்பு மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களில் 43 மாதிரிகளை பெற்று நாம் ஆய்வு செய்தோம்.நேற்றுக் காலை பெற்றுக்கொள்ளப்பட்ட அதன் பரிசோதனை அறிக்கைக்கிணங்க பிரித்தானியாவின் திரிபுபடுத்தப்பட்ட வைரஸ் இனங்காணப்பட்டுள்ளது.

மேற்படி வைரஸ் இங்கிலாந்தில் தற்போது வேகமாக பரவியுள்ளது.அங்கு இதற்கு B 1 1 7 ரக வைரஸ் என பெயரிடப்பட்டுள்ளது. இலங்கையில் அது பரவியுள்ளதை நாம் நூற்றுக்கு நூறு உறுதி செய்துள்ளோம். அது தொடர்பில் மக்கள் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். அந்த வைரஸ் 55 வீதமான மரணங்களை ஏற்படுத்தலாம் எனவும் அதே போன்று வைரஸ் பரவும் வேகம் 50 வீதமாக அதிகரிக்கலாம் என்றும் அறியமுடிகிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வைரஸை கட்டுப்படுத்த எக்ஸ்டரா செனாகா தடுப்பூசியானது சிறந்த பெறுபேற்றை தந்துள்ளது.

அனைவரும் தடுப்பூசியை செலுத்திக் கொள்வதன் மூலம் இதற்கு தீர்வை காண முடியும். ஆனால், எதிர்வரும் இரண்டு மூன்று மாதங்கள் இலங்கைக்கு மிகவும் தீர்மானமிக்க காலப்பகுதியாகும். கடந்தகாலத்தில் ஓரளவு பாதமற்ற வைரஸ்தான் இருந்தது. புதிய வகை வைரஸானது மிகவும் ஆபத்தானது. புதிய வகை வைரஸ் பரவியுள்ள நாடுகள் அனைத்து பாரிய இழப்புகளை சந்தித்துள்ளன. கடந்த ஜனவரி மாதத்தில்தான் பிரிட்டனில் இந்த வைரஸ் கண்டறியப்பட்டது. அங்கு பாரிய மரணங்கள் ஏற்பட்டுள்ளன. தடுப்பூசியின் ஊடாக ஓரளவு தீர்வை கண்டுள்ளனர்.

இந்தியாவிலும் புதியவகை கொவிட் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. என்றாலும் அங்கு ஏற்டுவரும் அதிகமான மரணங்கள் பிரிட்டனில் கண்டறியப்பட்ட வைரஸின் ஊடாகதான். எமது நாட்டுக்குள் தற்போதுதான் இந்த வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் இதனை பரவலடையாது கட்டுப்படுத்த வேண்டும். வைரஸானது மிகவும் வேகமாக இலங்கை முழுவதும் பரவலடைந்துள்ளது என்றார். (ஸ)



கொழும்பு மாநகராட்சிப் பிரிவின் பாடசாலைப் பிள்ளைகளுக்கு அப்பியாசம் புத்தகம் வழங்கும் நிகழ்வு பொதுநூலக சேப்பாக்கத்தில் இடம்பெற்றது. இதில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நகர முதல்வர்,ரோஸி சேனாநாயக்க பிள்ளைகளுக்கு அப்பியாசப் புத்தகங்ளை கையளிப்பதைப் படத்தில் காணலாம்.பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (படம்:பாணந்துறை மத்திய குறுப் நிருபர்)



புத்தளம் நகரில் திங்கட்கிழமை (26) காலை ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட புத்தளம் பொலிஸார், வீதியோரங்களில் முகக்கவசம் அணியாமல் சென்ற பொதுமக்களை சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தினர்.வீதியால் வருவோர், சுகாதார விதிமுறைளைப் பேணியுள்ளனரா என்பதைப் பொலிஸார் கண்காணிப்பதைப் படத்தில் காணலாம்.

படம்: புத்தளம் தினகரன் நிருபர்

## சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் செயலமர்வு



**(புத்தளம் தினகரன் நிருபர்)**

வண்ணாத்தவில்லு கிறிஸ்தவ தேவஸ்தானத்தில் சுற்றுச்சூழலை பாதுகாப்பது எவ்வாறு என்ற தலைப்பில் சூழல் மற்றும் சமூக நல்லிணக்க படை அணியினரின் ஏற்பாட்டில் தலைமைத்துவ பயிற்சிநெறிகள் அண்மையில் (24) இடம் பெற்றன.

வண்ணாத்தவில்லு பௌத்த மத்திய நிலைய தலைமை தேரர், முஸ்லிம் மகளிர் அபிவிருத்தி நிதியம் மற்றும் “சேர்ச் பொ கொமண் கிரவுண்ட் Search For Common Ground நிறுவனங்களின் மூலமாக இதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் சட்டத்தரணி அன்சார் தலைமைத்துவ ஒழுங்குகள் தொடர்பாகவும், நசீஹா அன்சார் ஆளுமை வளர்ச்சி பற்றியும், இப்ளால் அமீன் இளைஞர் வலுவூட்டல் என்ற தலைப்பிலும் உரைகளை நிகழ்த்தினர்.

# வலையில் சிக்கிய யானைக் குட்டி உடவளவ சரணாலயத்தில் ஒப்படைப்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

கிரிபாவ பகுதியில் குளத்தில் மீன் பிடிப்பதற்காக விரிக்கப்பட்டிருந்த வலையில் நான்கு மாத கால யானைக் குட்டியொன்று சிக்கியுள்ளது.

இதனை அவதானித்த அப்பகுதியியைச் சேர்ந்த ஒருவர், குறித்த யானையை குளத்திலிருந்து உயிருடன் மீட்டு கிரிபாவ வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து அப்பகுதிக்கு கிரிபாவ வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் சென்று, மீட்கப்பட்ட யானையை நிகவரட்டிய மிருக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார். இந்த யானை உடவளவ யானை சரணாலயத்திற்கு கொண்டு செல்லப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி பணமோசடி

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர் )**

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பெண்களை நிர்க்கதியாக்கும் வெளிநாட்டு முகவர் நிலையங்கள், இடைத்தரகர்கள் குறித்து மலையகப் பகுதிகளில் பரவலாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறு ஏமாற்றப்படும் பெண்களிடம் பெருந்தொகைப் பணத்தையும் கடவுச்சீட்டுகளையும் பெற்றுக் கொண்டு இவர்கள் தலைமறைவாகி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் நிலையம் மற்றும் தொழிற் சங்க பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப் பட்டதையடுத்து இத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

# விபச்சாரத்தில் ஈடுபட்ட ஏழு பெண்கள் பொலிஸாரால் கைது

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

அநுராதபுரம் பழைய பஸ் தரிப்பிடம்,அநுராதபுரம் நுவரவெவ நீர் தேக்க பகுதிகளில் நடமாடிய பாலியல் தொழிலாளர்கள் ஏழு பேரை அநுராதபுரம் கோட்டப் பிரிவு குற்றப் புலனாய்வு பொலிஸார் கைது செய்தனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இப் பெண்கள் 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும், அநுராதபுரம், கல்கமுவ, சிலாபம், மதவச்சி,கம்பொல பளுகஸ்வெவ பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் விலைமாதர்களாக விபச்சார தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் கோட்டத்திற்குப் பொறுப்பான குற்றப் புலனாய்வு பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பண்டார விஜேயகோன் ஆலோசனையின் பேரில், மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இம்மாதம் 25 ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

# கொழும்பு மாணவனின் தற்கொலைக்கு உரிய விசாரணை நடத்தப்படும்

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் கல்வி பயின்ற எஸ்.வித்தகன் என்ற மாணவனின் தற்கொலை, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில், சமூக வலைத்தளங்களில் பல்வேறுபட்ட பதிவுகள் இடம் பெற்று வருகின்றன. இரண்டு வாரங்களுக்கு முன்னர் அம்மாணவன் தற்கொலை செய்துகொண்டுள்ளமை பற்றிய பல தகவல்கள் வெளியாகியுள்ளன. பாடசாலையில் இடம்பெற்ற சம்பவமொன்றினால் மன அழுத்தத்துக்கு ஆளான நிலையிலேயே மாணவன் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

இவ்விடயத்தில் தமக்கு நியாயம் கிடைக்கவேண்டுமென்று, சமூக நலன்விரும்பிகள் மற்றும் கல்விமான்களால், பிரதமர் அலுவலகத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும் என்று பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மேற்படி சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.கபில ஆகியோரிடமும், செந்தில் தொண்டமான் கலந்துரையாடியுள்ளார்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த செந்தில் தொண்டமான், “பாடசாலை என்பது, பலவிதமான மாணவர்களும் வரும் இடமாகும். அவர்களை அரவணைத்து, முறையாக வழிநடத்துவதே, பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் கடமையாகும். சில இடங்களில் அந்தக் கடமைகளை அவர்கள் செய்யத் தவறும் பட்சத்தில், இவ்வாறான பாதிப்புகள் ஏற்படக் கூடும். இது விடயங்களில், உரிய தரப்பினர் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான், எதிர்காலங்களில் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

“அத்துடன், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை முழுமையாக நம்பியும் அங்கு தமது பிள்ளைகள் அன்பும் அரவணைப்புடனும் நடத்தப்படுவார்கள் என்று எண்ணியுமே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். அதனைக் கட்டிக் காக்க வேண்டியது பாடசாலைச் சமூகத்தின் பொறுப்பாகும். அதேவேளை, பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் எவ்வாறு மாணவர்களிடம் நடந்து கொள்கிறார்கள் என்பது பற்றிக் கண்காணிக்க வேண்டிய தேவை, அரசாங்கத்துக்கும் உள்ளது. அப்போது தான், இவ்வாறான சம்பவங்கள் நடந்தேறாமல் தடுக்க முடியும்.



தற்கொலை செய்துகொண்டுள்ள மாணவன், நன்றாகக் கல்வி பயின்று, சிறப்பான சித்திகளைப் பெற்றுக் கொண்டவர் என அறியமுடிகின்றது. வகுப்புரீதியாக முதலாவதாகவும் ஆண்டு ரீதியாக இரண்டாவது நிலையிலும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக தெரியவருகிறது. அவ்வாறிருக்கையிலேயே, அம்மாணவன் மீது ஆசிரியரால் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வார்த்தைப் பிரயோகங்களே, மாணவனை இந்த முடிவுக்கு இட்டுச் சென்றிருக்கலாம் என்றும் சந்தேகிக் கப்படுகிறது.

எனவே மாணவனின் விடயத்தில், உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் மூலம், மாணவனின் பெற்றோருக்கு நியாயம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

# கரோலினாவில் லொறி விபத்து



**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் கரோலினா பகுதியில் லொறியொன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கிச்சென்ற லொறியே நேற்று 2804 காலை 07.30 மணியளவில் விபத்துக்குள்ளானது. சாரதியின் நித்திரையின்மையே விபத்துக்கான காரணம் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

# இரத்தினக்கல் சந்தையில் போலி இரத்தினக்கற்கள்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட போலி இரத்தினக்கற்கள் சந்தைக்கு வந்துள்ளமையால் தொழிற்துறை சார்ந்தோர் இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகப் பிரசித்தி பெற்ற இயற்கை இரத்தினக்கற்களுக்கு இரத்தினபுரி பிரதேசம் புகழ் பெற்று விளங்குகிறது. இப்பிரதேசத்தில் கிடைக்கும் நீலம் சிவப்பு ஆர்நூல் புஷ்பராகம், மரகதம், வைரோடி, பத்மராகம், கெவுடா பசிங்கல் போன்ற இரத்தினக் கற்கள் போன்றே இந்த போலி இரத்தினக்கற்களும் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு விடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## பெறுகை அறிவித்தல்

### சூரியவெவ பிரதேச சபை

சூரியவெவ பிரதேச சபைக்கு 40 அடி அளவிலான பாவிக்கப்பட்ட அல்லது புதிய கொள்கலன் (Container) பெட்டியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை 2021-05-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் ‘‘தலைவர், சூரியவெவ பிரதேச சபை, சூரியவெவ’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தின் செயலாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம்.

கொள்கலன் பெட்டியில் கனவளவு, ஏற்றுதல் மற்றும் இறக்குதல், கொள்வனவின் பின்னான போக்குவரத்து போன்ற இயைபான சகல செலவுகளையும் விலைகளில் உள்ளடக்குதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 047-2288212 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கோரல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை சூரியவெவ பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**ஜே. எரந்த ஜனக,**
**தலைவர்,**
**சூரியவெவ பிரதேச சபை.**

**2021-04-28ஆம் திகதி,**
**சூரியவெவ பிரதேச சபையில்.**



## பொருட்கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-123

**PURCHASE OF 01 No. OF THREE KNIFE TRIMMER FOR PERFECT BINDING MACHINE**

Bid Reference No. :SI 2021/27

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்/ அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து Purchase of 01 No. of Three Knife Trimmer for Perfect Binding Machine (BQ No - 470) தொடர்பில், விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| Item No. | Description | Quantity |
|---|---|---|
| 01 | Purchase of 01 No. of Three Knife Trimmer for Perfect Binding Machine (BQ No - 470) | 01 |

**விநியோகிக்க வேண்டிய இடம் :** அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 08.

2. அக்கறையுடைய தகுதிவாய்ந்த விலைமனுதாரர் “உதவி அரசாங்க அழுத்தகர் (வழங்கல்கள்) அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 08”. அவர்களிடம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதுடன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் விலை மனு ஆவணங்களை வேலை நாட்களில் **மு.ப. 09:00 மணி தொடக்கம் பி.ப. 03:00** மணிவரையான காலப்பகுதியில் பார்வையிடலாம்.

3. **Pre-bid meeting , 13.05.2021** ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு இல. 118 டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை கொழும்பு 08, இல் அமைந்துள்ள அரச அச்சுத்திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

4. **விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 20.05.2021 ஆந் திகதி பி.ப. 2 மணி வரையாகும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலை மனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும்போது விலைமனுதாரர் அல்லது அவரின் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.**

5. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு முந்திய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 11,000.00 உடன் சேர்த்து கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கொழும்பு 08, இல 118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை, அரசாங்க அச்சுத் திணைக்கள வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 3 மணிவரை விநியோகிக்கப்படும்.

**கங்கானி லியனகே,**
**பொருட் கொள்வனவுக் குழுத் தலைவர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி** :- **011-2694898**
**இணையதளங்கள்** :- www.documents.gov.lk, www.npa.gov.lk

2021.04.23



திகதி 27.04.2021 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4464
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 35,237,038.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 8 7 2 0 0 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2759
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,109,980.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 33 59 64 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,255,152.00

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 822
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,913,800.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 130,985,092.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து I சுப்பர் இலக்கம் 09 வெற்றி இலக்கங்கள் 32 36 42 70

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 501
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,421,160.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 14 45 68 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,966,254.00

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் : 1593
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,199,340.00
சுப்பர் இலக்கம் 10 வெற்றி இலக்கங்கள் 15 36 42 50
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,269,824.00

27.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 694,752
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 61,881,318.00
பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000/- மஹஜன சம்பத சுப்பர் பரிசு ரூ.25,925,048/-
சுப்பர் பரிசுகள் 02
ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 500,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 23

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சு

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை - மத்திய மாகாணம்

1. இயந்திராதிகளை கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்

**கேள்விச் சுருக்கம்**

| தொடர் இல. | விபரம் | தேவைப் படும் அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை வைப்பு (ரூ) | கேள்விப் பிணையின் பெறுமதி (90 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக ரூ. | வங்கிப் பிணை |
| 1. | இயந்திர வாள் கொள்வனவு செய்தல் Engine - Four Strock/ Size-24' | 09 | 1,000.00 | 15,000.00 | 30,000.00 |
| 2 | புல்வெட்டும் இயந்திரம் கொள்வனவு செய்தல் Engine - Four Strock/ Fuel - Petrol/ Cutting Blade - Double Side Blade with more than 455mm length/ power - (0.60 kw - 1kw) | 30 | | | |
| 3 | வீதி கோடுகள் குறிக்கும் இயந்திரம் (Suppling of white line marking machine) கொள்வனவு செய்தல் | 01 | 1,000.00 | 7,500.00 | 15,000.00 |
| 4 | டிஜிட்டல் கெமரா உபகரணம் கொள்வனவு செய்தல் | 15 | 1,000.00 | 10,000.00 | 20,000.00 |
| 5 | கணனி இயந்திரம் | 15 | 1,000.00 | 30,000.00 | 60,000.00 |
| 6 | லெப்டொப் | 06 | 1,000.00 | 15,000.00 | 30,000.00 |
| 7 | போட்டோப் பிரதி இயந்திரம் | 02 | 1,000.00 | 3,000.00 | 6,000.00 |
| 8 | UPS | 25 | 1,000.00 | 3,500.00 | 6,000.00 |
| 9 | அச்சு இயந்திரம் | 08 | 1,000.00 | 3,000.00 | 6,000.00 |
| 10 | பெக்ஸ் இயந்திரம் | 04 | 1,000.00 | 3,000.00 | 6,000.00 |
| 11 | பாதுகாப்பு கெமரா வழங்கி பொருத்துதல் | 10 | 1,000.00 | 3,000.00 | 6,000.00 |

- ➢ மேற்படி ஒவ்வொரு உருப்படிக்கும் இவ் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் மாதிரிப் பத்திரங்களில் மட்டும் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன்அதற்கான கேள்வித் தொகுதிகள் 2021.04.30 முதல் 2021.05.19 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் விநியோகிக்கப்படும். மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரின் பெயரில் மக்கள் வங்கியின் 158100110000022 கணக்கு இலக்கத்திற்கு செலுத்திய பற்றுச் சீட்டை அதிகார சபையின் தலைமையக பிரதான பொறியியலாளரிடம் சமர்ப்பித்து கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- ➢ குறித்த உருப்படியின் முன்னால் தரப்பட்டுள்ள குறித்த பெறுமதியுடனான கேள்வி பிணையினை பொது முகாமையாளர் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரத்தை அல்லது மக்கள் வங்கியின் இலக்கம் 158100110000022 கணக்கு இலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது அரசு அனுமதித்த வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறியை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ➢ இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் இரண்டாம் பிரதியென வேறு வேறு கடித உறைகளில் உள்ளிடல் வேண்டும் அத்துடன், உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கேள்விப் பத்திரத்தின் பெயரைக் குறிப்பிட்டு. 2021.05.20 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 09, எஹலேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது தலைமையகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதற்கு அனுமதியுண்டு. குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
- ➢ எந்தக் கேள்விப் பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது. மேலதிக விபரங்களை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடையில் அலுவலக நாட்களில் தொ.பே.இல. - 081-3159905 மூலம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையக பொறியியலாளரை அல்லது 081-3159906 மூலம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காளரை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 09, எஹலேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி.**

# கேள்விக்கான அழைப்பு

## மாவட்ட செயலகம் - கண்டி

01. கண்டி மாவட்ட செயலகத்தினால் செயற்படுத்தப்படும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் நிர்மாணங்களுக்காக கண்டி மாவட்ட செயலாளர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் தகைமைகள் கொண்ட அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத அது பற்றி ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

02. ரூபா 50 மில்லியனுக்குக் குறைந்த நிர்மாணம் சம்பந்தமாக கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படுவது. பிரதேச ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே, ஒப்பந்தங்கள் வழங்கும் போது இதற்கு முன் நிறைவேற்றியுள்ள வெற்றிகரமான நிர்மாணங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் அது பற்றிய விபரங்கள் கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வியுடன் சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்கள் கண்டி மாவட்ட செயலகத்தின் தொ.பே. இல. 081-5626672 இன் மாவட்ட பொறியியலாளரை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

03. கண்டி மாவட்ட செயலகத்தின் காசாளரிடம் கேள்வி ஆவணக் கட்டணத்தை காசாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 2021.04.30 முதல் 2021.05.20 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப 3.00 வரையான காலத்திற்குள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறாகக் குறிப்பிட்டு பொறியிட்டு ஒரு உறையில் இட்டு 2021.05.21 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு மாவட்ட செயலாளர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவர், மாவட்ட செயலகம், கண்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கீழ்க்காணுமாறு குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. தாமதமாகக் கிடைக்கும் மற்றும் குறித்த அறிவுறுத்தல்களுக்கு அமைவாக சமர்ப்பிக்காத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கைக்குள் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு மற்றும் கேள்வி திறக்கப்படும் நாள் முதல் செல்லுபடியாகும் நாட்களைக் கொண்ட நிபந்தனையற்ற கேள்விப் பிணைச் சான்றிதழ் அல்லது மாவட்ட செயலகத்தின் காசாளரிடம் காசாக மேற்கொள்ளப்படும் வைப்பிற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டு கேள்விப் பிணையொன்றாக கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை**

| தொடர் இல | வேலை | பொறியியல் மதிப்பீடு ரூபா மில்லியன் | தேவைப்படும் குறைந்த பட்ச CIDA பதிவு | கேள்விப் பிணையின் பெறுமதி | | கேள்விப் பிணைக்கான நாட்களின் எண்ணிக்கை | கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வங்கிச் சான்றிதழ் | காசாக | | |
| | | | | ரூபா | ரூபா | | |
| 01 | கங்கஇஹல கோரளே கலாசார நிலையம் நிர்மாணம் கட்டம் 3 | 19 | C6 | 200,000.00 | 100,000.00 | 77 | 5,000.00 |
| 02 | ஏற்றுமதி விவசாய திணைக்களம் தலைமையகத்தின் அலுமினியம் கண்ணாடி ஜன்னல் பொருத்துதல் | 3.5 | C8 | 35,000.00 | 17,500.00 | 63 | 2,000.00 |
| 03 | மாவட்ட செயலக வளாகத்தில் மோட்டார் சைக்கிள் நிறுத்துமிட நிர்மாணம் | 1.4 | C9 | 14,000.00 | 7,000.00 | 49 | 800.00 |

07. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் நேரத்தின் பின்னர் உடனடியாக கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு நேரில் சமுகமளிக்கலாம்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விகளில் தகைமையான கேள்வியை ஏற்றுக்கொள்ளல் அல்லது பூர்த்தியற்று சமர்ப்பித்துள்ள கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**சந்தன தென்னக்கோன்**
**தலைவர், பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்/ அரச அதிபர்**
**மாவட்ட செயலகம்,**
**கண்டி.**



## 2022ஆம் வருடத்திற்கான வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகளைப் பெற்றுக்கொள்ளல்

### புத்தளம் பிரதேச சபை

புத்தளம் பிரதேச சபையின் 2022ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட ஆவணங்களைத் தயாரிப்பதற்காக புத்தளம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கு இயைபான அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்குவதற்காக கருதும் பிரேரணைகளை 2021 ஜுன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் தலைவர், புத்தளம் பிரதேச சபை, மதுரங்குளி எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்குமாறு இத்தால் அதிகாரப் பிரதேசத்தின் பிரஜைகள் மற்றும் சமூக அமைப்புகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஆர்.எம். அஞ்சன சந்தருவன் ரத்நாயக்க,**
**தலைவர்,**
**புத்தளம் பிரதேச சபை.**

Best way
to fulfil
your
Future Dreams
Marriage
Proposals
in the
Sunday Observer

# வட மேல் மாகாண, மாகாண சபை

## ஆயுர்வேத திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளவாறு நிர்மாண வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வட மேல் மாகாண ஆயுர்வேத திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். 'இந்த பெறுகையின் மொத்த ஆகுசெலவு மதிப்பீடானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், 04/2016(ii)' என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிராந்திய விருப்புரிமை மற்றும் CIDA தர விருப்புரிமை ஆகியன பிரயோகப்படுத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் CIDA பதிவு செய்தல் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்திருத்தலும் வேண்டும்.

4. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு: தொழில்நுட்ப, நிதிசார், சட்டம் மற்றும் ஏனைய தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை குருநாகல், கொழும்பு வீதி, ஆயுர்வேத திணைக்கள ஆயுர்வேத ஆணையாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி மற்றும் தொலைநகல்: 037 2228408/ 037 2228407 மற்றும் மின்னஞ்சல்: **ayurvedanwp@gmail.com)** கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   கணக்கிடல் கிளை, ஆயுர்வேத திணைக்களம், கொழும்பு வீதி , குருநாகல்.

6. 2021 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 2021 மே 20 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், குருநாகல், கொழும்பு வீதி, ஆயுர்வேத திணைக்கள ஆயுர்வேத ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. குருநாகல், கொழும்பு வீதி, ஆயுர்வேத திணைக்களத்தில் 2021 மே 10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

8. விலைமனுக்கள் 2021 மே 21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் 'தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஆயுர்வேத திணைக்களம், கொழும்பு வீதி, குருநாகல்' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். குருநாகல், கொழும்பு வீதி, ஆயுர்வேத திணைக்கள கணக்கிடல் கிளையில் கேள்விப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

9. விலைமனுக்கள் 2021 ஓகஸ்ட் 7 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 77 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறான பெறுமதிக்கான 'விலைமனுப்பிணையொன்றுடன்' அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021 செப்டம்பர் 06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

| தொடர் இல. | விலைமனு செய்விதி | ஒப்பந்த தலைப்பு | பொறியியல் பிரிவு | தேவைப்படும் CIDA தரம் (கட்டிடங்கள்) | விலைமனுப் பிணை தொகை (ரூபாவில்) | மீளளிக்கப் படாத தொகை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 21/AYU/PW-NCB/PSDG-01/Nika. | நிக்கவெரட்டிய ஆயுர்வேத பொது மருந்தக புனரமைப்பு | வாரியபொல | சி-9 மற்றும் சி-8 | 20,000.00 | 2,000.00 |
| 2. | 21/AYU/W-NCB/PSDG-02/KURU/285-43 | குருநாகல் ஆயுர்வேத வைத்தியசாலையின் 285/43 ஆம் இலக்க விடுதி கட்டிடத்தை இடித்தல் | குருநாகல் | சி-9 மற்றும் சி-8 | 10,000.00 | 2,000.00 |
| 3. | 21/AYU/W-NCB/PSDG/03 /Kuru/w 02 | குருநாகல் ஆயுர்வேத வைத்தியசாலையின் 02 ஆம் இலக்க வாட்டின் புனரமப்பு | குருநாகல் | சி-9 மற்றும் சி-8 | 20,000.00 | 2,000.00 |
| 4. | 21/AYU/W-NCB//PSDG-04/Kuru/w 10 | குருநாகல் ஆயுர்வேத வைத்தியசாலையின் 10 ஆம் இலக்க வாட் மற்றும் வெளி நோயாளர் பகுதி கழிவறை ஆகியவற்றின் புனரமைப்பு. | குருநாகல் | சி-8 மற்றும் சி-7. | 30,000.00 | 2,000.00 |
| 5. | 21/AYU/W-NCB/PSDG-05/kuru/mtrn | குருநாகல் ஆயுர்வேத வைத்தியசாலையின் தாதித்தாயார் (Matron) அலுவலகம் மற்றும் ஆய்வுகூடம் ஆகியவற்றில் வளிச்சீராக்கல் முறைமையை நிறுவுதல் | குருநாகல் | சி-9 மற்றும் சி-8 | 20,000.00 | 2,000.00 |
| 6. | 21/AYU/W-NCB/PSDG/-06/kuru/drg | குருநாகல் ஆயுர்வேத வைத்தியசாலையின் ஔடத தயாரிப்பு பிரிவின் புனரமைப்பு (2 ஆம் கட்டம்) | குருநாகல் | சி-9 மற்றும் சி-8 | 30,000.00 | 2,000.00 |
| 7. | 21/AYU/W-NCB/PSDG/-07/Meeg | மீகலேவ ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் புனரமைப்பு | மாஹோ | சி-9 மற்றும் சி-8 | 25,000.00 | 2,000.00 |
| 8. | 21/AYU/W-NCB/PSDG/08/Amba | அம்பன்பொல ஆயுர்வேத வைத்தியசாலையின் புனரமைப்பு | மாஹோ | சீ-8 மற்றும் சி-7 | 30,000.00 | 2,000.00 |
| 9. | 21/AYU/W-NCB/PSDG-09/Doda | தொடம்கஸ்லந்த ஆயுர்வேத வைத்தியசாலையின் புனரமைப்பு | ரிதீகம | சி-9 மற்றும் சி-8 | 30,000.00 | 2,000.00 |
| 10. | 21/AYU/W-NCB/PSDG-10/Nara | நாரம்மல ஆயுர்வேத வைத்தியசாலையின் புனரமைப்பு | குருநாகல் | சி-8 மற்றும் சி-7 | 40,000.00 | 2,000.00 |
| 11. | 21/AYU/W-NCB/PSDG-11/Putt | புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலையின் பழைய கட்டிடத்தை இடித்தல் | புத்தளம் | சி-8 மற்றும் சி-7 | 10,000.00 | 2,000.00 |
| 12. | 21.AYU/W-NCB/PSDG-12/kuru/Admin | குருநாகல் ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆயுர்வேத ஆணையாளரின் அலுவலகத்திற்கான நிர்வாக பணிமனையின் நிர்மாணம். | குருநாகல் | சி-6 மற்றும் சி-5 | 250,000.00 | 5,000.00 |




# மலையகத்தில் கொரோனா பரவலை தடுக்க கடுமையான நடவடிக்கை





## மத்திய மாகாணத்தினுள் பிரவேசிக்கும் சகலருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை

**ஹற்றன் விசேட , ஹற்றன் சுழற்சி, பலாங்கொடை தினகரன், பதுளை தினகரன் விசேட, அக்குறணை குறூப் நிருபர்கள்**

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கே கொவிட் 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றுமாறு வலியுறுத்தி விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டம் மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார வைத்தியர்கள், சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கிராமசேவர்கள் இணைந்தே இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தியாவசிய தேவை தவிர வேறு காரணங்களுக்காக, மத்திய மாகாணத்தினுள் பிரவேசிக்கும் சகலரையும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த மத்திய மாகாண கொவிட் 19 வழிநடத்தல் குழு முடிவு செய்துள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டியிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். மலையக நகரங்களில் கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதுடன், சுகாதார விதிமுறைகளை பின்பற்ற தவறுபவர்கள் கைது செய்யப்பட்டதுடன் ஏனையவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். மேலும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அந்த வகையில் ஹற்றன், நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நோர்வூட் பொலிஸ் நிலைய பொறுப்பாதிகாரி பி.ஏ.பி.ஆர் பிரேமலால் தலைமையில் நோர்வூட் நகரில் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காதவர்கள் கைது செய்யப்பட்டதுடன் ஏனையவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

நோர்வூட் நகர் உள்ளிட்ட இடங்கள் பொலிஸாரால் நேற்று திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

நகரில் உள்ள கடைகள் மற்றும் பொது இடங்கள் இவ்வாறு பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது பொகவந்தலாவையில் இருந்து ஹற்றன் நோக்கி வந்த பஸ் ஒன்று பொலிஸாரால் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன்போது பஸ்சில் பயணித்த பயணிகள் அனைவரும் கீழே இறக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

முக கவசம் அணியாமலும், சமூக இடைவெளியை பேணாமலும் வந்த பயணிகள் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன், சிலர் நோர்வூட் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் சுகாதார வழிக்காட்டல்களை மீறி பயணிகளை ஏற்றி வந்த பஸ்சின் சாரதியும், நடத்துனரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

ஹற்றன் நகரில் முகக்கவசமின்றி திரிந்த 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஹப்புத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாகரதயாரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஹப்புத்தளை மற்றும் பெரகலை ஆகிய இரு நகரங்களில் கிருமி தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் சுகாதார வழிமுறைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுப்படுத்தினர்.

பலாங்கொடை பிரதேசத்தில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமல் நடமாடும் நபர்களை நேற்று முதல் அவ்விடத்திலேயே பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு பலாங்கொடை பிரதேச கொவிட் கமிட்டி தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவள தெரிவித்தார்.





# ஹெரமிட்டிகல பகுதியில் பஸ் வசதி இன்மையால் மக்கள் அவதி

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை ராசகல ஹெரமிட்டிகல பகுதிக்கு போக்குவரத்து பஸ் சேவை இன்மையால் கிராம மற்றும் தோட்டப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

பலாங்கொடை நகரிலிருந்து ராசகல வரையில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் வண்டிகள் அதிக அளவில் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

எனினும் இராசகலையில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஹெரமிட்டிகல கிராம, தோட்டப் பகுதி மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பலாங்கொடை நகருக்கு வருவதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லை என இவர்கள் முறையிடுகின்றனர்.

ராசகல பகுதியிலிருந்து ஹெரமிட்டிகல வரை போக்குவரத்து வசதிகள் இன்மையால் 250 ரூபா முதல் 300 ரூபா வரையில் மக்கள் முச்சக்கரவண்டிகளை வாடகைக் கமர்த்திப் பயணம் செய்கின்றனர். அடிக்கடி முச்சக்கர வண்டிகளில் பயணம் செய்யும் அளவுக்கு இப்பகுதி மக்களுக்குப் பொருளாதார வசதிகள் இன்மையால் நீண்ட தூரம் கால் நடையாக பொதிகளை சுமந்து செல்ல வேண்டிய அவல நிலை நிலவுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே இலங்கைப் போக்குவரத்துச் சபை பலாங்கொடை காரியாலயம் அல்லது அரசியல் தரப்புக்கள் இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி பலாங்கொடையிலிருந்து ராசகல ஊடாக ஹெரமிட்டிகல வரையிலான போக்குவரத்து சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நூலக தகவல் சேவைகள் டிப்ளோமா கற்கைநெறி

**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலம் நூலக தகவல் சேவைகள் டிப்ளோமா கற்கைநெறி முதற் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை தமிழ் மாணவர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நூலகத் துறையில் வேலை வாய்ப்பினை எதிர்ப்பார்ப்பவர்கள் மற்றும் நூலகத்துறையில் சேவை செய்வோர் தமது பதவி உயர்விற்காகவும் தமது, ஆற்றலை மேம்படுத்திக்கொள்ளவும் இக்கற்கைநெறி உதவும்.

இக்கற்கைநெறியானது ஒரு வருடம் இரண்டு அரையாண்டு கற்கை நெறியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிக்கான கட்டணமாக ரூபா. 35000.00 அறவிடப்படவுள்ளது. இதனை இரு தவணை வாரியாக செலுத்தமுடியும். இதற்கான விண்ணப்பபடிவத்தினை ரூபா. 500.00 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பதாரர்களுக்கு குறைந்த பட்ச தகைமைகளாக க. பொ.தராதர உயர்தர பரீட்சையில் 3 பாட சித்தியும் அல்லது அதற்கு இணையான NVQF நிலை 4 / SLQF நிலை 2, அல்லது நூலகம் ஒன்றில் 4 வருட சேவை அனுபவம் பெற்றவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

28.05.2021 திகதிக்கு முன்னர் விண்ணப்ப படிவத்தினை அனுப்ப வேண்டும் விண்ணப்படிவங்களையும் விபரங்களையும் www.pdn.ac.lk/cdce எனும் இணைய தளம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

# பதுளையில் கொரோனா பரவல் தீவிரம்; மூன்று கிராம சேவகர் பிரிவுகள் முடக்கம்

**பதுளை தினகரன் விசேடநிருபர்**

பதுளையில் கொவிட் 19 தொற்றாளர்கள் 15 பேர் நேற்றுமுன்தினம் இனங்காணப்பட்டிருப்பதாக பதுளை மாநகர பொதுசுகாதாரப் பரிசோதகர் ரணில் பிரியங்கர தெரிவித்தார்.

தொற்றாளர்களாக இனங்காணப்பட்டவர்களில் 12 பேர், பதுளை அரச வங்கி ஊழியர்களும் ஒருவர் பதுளை தனியார் வங்கி ஊழியர் எனவும் ஏனைய இருவரும் பதுளை மாநகருக்கு அண்மையிலுள்ள யாழ்ப்பாணவத்தை மற்றும் பதுளைப்பிட்டிய ஆகிய இரு இடங்களில் இனங்காணப்பட்டுள்ளனர்.

வங்கிகளில் இனம்காணப்பட்ட தொற்றாளர்கள் 13 பேரும் கொக்கல தனிமைப்படுத்தல் நிலையத்திற்கும், ஏனைய இருவர் பிந்துனவெள மற்றும் ககாகொல்லை கொவிட் 19 சிகிச்சை நிலையத்திற்கும் நேற்று அனுப்பப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய 40 பேர், அவர் தம் வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் பலருக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொது சுகாதாரப்பரிசோதகர் ரணில் பிரியங்கர மேலும் தெரிவித்தார். ஹல்துமுள்ளைப்பகுதி பாடசாலையொன்றில் தரம் 3 இல் கல்வி கற்று வந்த மாணவனொருவருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து அப்பாடசாலையின் தரம் 3, தரம் 4 ஆகிய வகுப்புக்களின் வகுப்பாசிரியர்கள் இருவரும், மாணவர்கள் நால்வரும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் அம்மாணவனின் பெற்றோர், சகோதரர்கள், தொடர்பைப் பேணியவர்கள் ஏழு பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக பொதுசுகாதாரப்பரிசோதகர் மேலும் தெரிவித்தார். மேலும் வெள்ளவாயா பகுதியில் கொவிட் 19 தொற்றாளர்களின் அதிகரிப்பினையடுத்து, மூன்று கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளவாயாப்பகுதியின் எத்திலிவெள, வெஹெரயாய, ரகதன்கம ஆகிய மூன்று கிராம சேவகர்கள் பிரிவுகளே தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மொனராகலை மாவட்ட கொவிட் 19 தொற்று தடுப்புக்குழுக்கூட்டம் மொனராகலை சுகாதார சேவை நிலைய கேட்போர் கூடத்திலேயே இவ்விடயம் குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டது.

# கம்பளை பகுதியில் மேலும் 17 பேருக்கு கொரோனா



**கம்பளை நிருபர், கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**

கம்பளை பகுதியில் மேலும் 17 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

கம்பளை – நாவலப்பிட்டிய பிரதான வீதியிலுள்ள தனியார் காப்புறுதி நிறுவனத்தில் பணிபுரிந்த ஊழியர்களுக்கே இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

தொற்றாளர்களை சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களுடன் தொடர்பில் இருந்த சுமார் 30 குடும்பங்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த நிறுவனத்தில் கடந்த 25 ஆம் திகதி மூவருக்கு வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து நிறுவனத்திலுள்ள மேலும் சிலரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதன்பிரகாரம் நேற்று முன்தினம் மேலும் நால்வருக்கு வைரஸ் தொற்று உறுதியானது. இந்நிலையிலேயே நேற்று மேலும் 17 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தில் மொத்தமாக 22பேர் கொரோனா தொற்றாளர்களாக இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்,

# திருமண நிகழ்வில் மணமகன், மணமகள், தாய் ஆகியோருக்கு கொரோனா

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

திருமண நிகழ்வொன்றில் மணமகன், மணமகள், மணமகளின் தாய் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதியானதால், அவர்கள் மூவரும் பிந்துனுவெள மற்றும் ககாகொல்லை சிகிச்சை நிலையத்திற்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளனர். இத்தகவலை, எல்ல பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் ஆர்.எம்.சாகர தெரிவித்தார். பதுளைக்கு அண்மித்த எல்ல பகுதியின் பிரபல உல்லாச விருந்தகமொன்றில் நேற்றுமுன்தினம் திருமண நிகழ்வொன்று மிக விமரிசையாக இடம்பெற்றது.

எல்ல பகுதியில் கொரோனா தொற்று மிகவும் தீவிரமடைந்து வருவதினால், எல்ல பொது சுகாதாரப் பிரிவினர் திருமண நிகழ்விற்கு சென்று, குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

அப்பரிசோதனை அறிக்கை நேற்று பகல் வெளியான போது, மணமகன், மணமகள், மணமகளின் தாய் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இவர்கள் சிகிச்சை நிலையத்திற்கு உடன் அனுப்பப்பட்டனர்.

அத்துடன் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட 125 பேரும், சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் திருமண நிகழ்வில் வைக்கப்பட்டிருந்த பதிவேட்டுப் புத்தகத்தில் கையொப்பமிட்டவர்களாவர்.

இந்நிகழ்விற்கு சென்று கையொப்பமிடாமல் எவரும் இருந்தால் அவர்கள் உடனடியாக எல்ல பொது சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

## சஹேல் பிராந்தியம்: 29 மில்லியன் மக்களுக்கு ஐ.நா உதவி கோரிக்கை

ஆபிரிக்காவின் பதற்றம் கொண்ட சஹேல் பிராந்தியத்தில் ஆறு நாடுகளில் பாதுகாப்பு பிரச்சினை மற்றும் பட்டினி காரணமாக 29 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் தன்னார்வ தொண்டு அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

புர்கினா பாசோ, வடக்கு கெமரூன், சாட், மாலி, நைகர் மற்றும் வட கிழக்கு நைஜீரியா நாடுகளில் கடந்த ஆண்டை விடவும் மேலும் ஐந்து மில்லியன் பேருக்கு உதவிகள் தேவைப்படுவதாகவும் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அட்லாண்டிக் தொடக்கம் செங்கடல் வரை சஹாராவின் தெற்கு விளிம்புப் பகுதியை இணைக்கும் பகுதி வறண்ட சஹேல் பிராந்தியத்தில் கடந்த ஆண்டுகளில் வன்முறைகள் அதிகரித்துள்ளன. இங்கு ஆயுதக் குழுக்கள், இராணுவ ஆதரவு போராட்டக் குழுக்கள் மற்றும் சர்வதேச கூட்டுப்படைகள் இந்தப் பிராந்தியத்தில் தீவிரமாக இயங்கி வருகின்றன.

“மேலும் சிக்கல் கொண்டதாகவும் மேலும் ஆயுதக் குழுக்களின் பங்கேற்புடனும் சஹேலில் மோதல்கள் அதிகரித்து வருகின்றன” என்று ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் இணைப்பாளர் சாவிர் கிரீச் தெரிவித்துள்ளார்.



## சீனாவின் ஆபிரிக்க முதலீட்டில் மாற்றம்



இந்த ஆண்டு ஆரம்பத்தில் சீன வெளியுறவு அமைச்சர் வங் யி–யின் கொங்கோ ஜனநாயக குடியரசுக்கான விஜயம் ஆபிரிக்கா தொடர்பில் சீனாவின் கடன் மற்றும் முதலீடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விஜயத்தின்போது கொவிட்–19 தாக்கத்தை கையாள்வதற்கு மத்திய ஆபிரிக்க நாட்டுக்கு 28 மில்லியன் டொலர் கடன் மற்றும் 17 மில்லியன் டொலர் ஏனைய நிதியுதவிகளையும் வழங்க வங் வாக்குறுதி அளித்தார்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக அங்கோலாவுக்கே ஆபிரிக்காவுக்கான சீனாவின் கடன்கள் சென்றன. அது எண்ணெய் சார்பு கடன்களாக வீதிகள், மின்சக்தி அணைகள் மற்றும் துறைமுகங்களுக்காக செலுத்தப்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சீனா 42.6 பில்லியன் டொலர் பெறுமதி மிக்க கடன்களை அங்கோலாவுக்கு வழங்கியுள்ளது. இது ஆபிரிக்க நாடுகளுக்கான கடனில் 30 வீதமாகும்.

இந்நிலையில் சீனாவுக்கு ஆபிரிக்காவின் செப்பு, கோபாற்று மற்றும் ஏனைய அரிய தாதுப்பொருட்களின் தேவை இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## ஈரானிய படகுகளை நோக்கி அமெ. எச்சரிக்கை வேட்டு



வளைகுடாவில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிக் காவல் படையின் படகுகளை நோக்கி எச்சரிக்கை வேட்டுகளை செலுத்தியதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. சர்வதேச கடலில் அமெரிக்க கப்பல்களை இந்த படகுகள் நெருங்கி வந்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மாலை அமெரிக்க கடற்படை ரோந்துக் கப்பல் மற்றும் அமெரிக்க கடலோர காவல் ரோந்துப் படகை நோக்கி ஈரானிய படகுகள் நெருங்கி வந்ததாக அமெரிக்க கடற்படை வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

“ரேடியோ, ஒலிபெருக்கி மூலம் அமெரிக்க வீரர்கள் பல முறை எச்சரித்த போதும் அந்தப் படகுகள் நெருங்கி வந்தன” என்று அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. “வீரர்கள் எச்சரிக்கை வேட்டுகளை செலுத்திய நிலையில் ஈரானிய படகுகள் அமெரிக்க கப்பல்களில் இருந்து பாதுகாப்பான தூரத்திற்கு விலகிச் சென்றன” என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## மியன்மார் மீது கூடுதல் தடைக்கு வலியுறுத்தல்



மியன்மார் இராணுவம் மீது கூடுதல் தடைகளை விதிக்குமாறு அமெரிக்க செனட்டர்களில் சிலர் ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்திடம் கூறியுள்ளனர். மியன்மார் பாதுகாப்பு அதிகாரிகள், ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் 750க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அதையடுத்து செனட்டர்கள் பைடனிடம் தடை உத்தரவு குறித்து கூறியுள்ளனர். அமெரிக்க வர்த்தகங்களிடமிருந்து மியன்மாரில் உள்ள எண்ணெய், எரிவாயு நிறுவனத்துக்குச் செல்லும் காப்புரிமைத் தொகையை நிறுத்தும்படி செனட்டர்கள் கோரினர். அதன் மூலம் மியன்மார் இராணுவத்துக்கு நிதி ஆதரவு கிடைப்பதாகக் கூறப்படுகிறது. மியன்மார் இராணுவத்துக்கு ஆண்டுதோறும் அதன் மூலம் கிட்டத்தட்ட 1 புள்ளி ஒரு பில்லியன் டொலர் வருமானம் கிடைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பாகிஸ்தானில் கொரோனா உயிரிழப்பு புதிய உச்சம்

பாகிஸ்தானில் கடந்த செவ்வாய்க்கிழமை கொரோனா தொற்றினால் முதல் முறை ஒரே நாளில் இரு நூற்றுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கும் நிலையில் கண்டிப்பான பொது முடக்கநிலை பற்றி ஆலோசித்திருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் செவ்வாயன்று 201 பேர் உயிரிழந்த நிலையில் அந்நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த மொத்த எண்ணிக்கை 17,530 என உயர்ந்திருப்பதாக கொரோனா தொற்று தொடர்பில் கண்காணிக்கும் தேசிய கட்டளை செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி 157 பேர் உயிரிழந்ததே பாகிஸ்தானில் கொரோனா தொற்றினால் ஒரே நாளில் பதிவான அதிக உயிரிழப்பாக இருந்தது.

கடந்த செவ்வாயன்று 5,292 புதிய தொற்று சம்பவங்கள் பதிவான நிலையில் அந்நாட்டின் மொத்த தொற்று சம்பவங்கள் 810,231 ஆக உள்ளது. இந்நிலையில் சுகாதார கட்டமைப்பு நிலைகுலையும் அச்சுறுத்தல் பற்றி அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். பாகிஸ்தானில் வென்டிலேட்டர்கள் மற்றும் ஒட்சிசன் போதுமான அளவில் கிடைக்கப்பெறாத நிலையில் சுகாதார வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது.



தற்போது 631 மருத்துவமனைகளில் 6,286 கொவிட்–19 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். பிரதான நகரங்களில் உள்ள மருத்துவமனைகளின் 70 வீதத்திற்கும் அதிகமான வென்டிலேட்டர்கள் மற்றும் ஒட்சிசன் படுக்கைகள் நிரம்பி உள்ளன.

## இராணுவத் தளங்களை மேம்படுத்துகிறது ஆஸி.



அவுஸ்திரேலியா, வடக்கில் இருக்கும் 4 இராணுவத் தளங்களை விரிவுபடுத்த 580 மில்லியன் டொலர் செலவிடவுள்ளது.

அமெரிக்காவுடன் இணைந்து போர் உத்திகளை விரிவுபடுத்தத் திட்டமிடுவதாகவும் அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்தார். அமெரிக்காவுடனும், இந்தோ–பசிபிக் வட்டாரப் பக்கத்து நாடுகளுடனும் அவுஸ்திரேலியா இணைந்து செயல்படுகிறது. நாட்டின் நலன்களைப் பாதுகாக்கத் தற்காப்புப் படைக்குத் தொடர்ந்து முதலீடு செய்யப்படும் என்றும் மொரிசன் குறிப்பிட்டார். அமைதி, நிலைத்தன்மை, இந்தோ–பசிபிக் வட்டாரத்தின் சுதந்திரம் போன்றவற்றை நிலைநாட்டும் நோக்கில் அவுஸ்திரேலியா உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவ மேம்பாடுகள் இவ்வாண்டு ஆரம்பித்து 2026ஆம் ஆண்டிற்குள் முடிவுபெறும்.

### அமெரிக்காவில் புதிய வழிகாட்டி:

## தடுப்பூசி பெற்றவர்களுக்கு முகக்கவசம் தேவையில்லை



முழுமையான கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்கள் வெளிப்புறங்களில் முகக்கவசம் அணியத் தேவையில்லை என்று அமெரிக்க நோய் கட்டப்பாட்டு மற்றும் தடுப்பு நிலையம் அறிவித்துள்ளது.

தேவைப்படும் அனைத்து தடுப்பு மருந்துகளையும் போட்டுக்கொண்டவர்கள் தனியாக இருக்கும்போது அல்லது தடுப்பூசி பெற்ற சிறு குழு ஒன்றுக்கு மத்தியில் தமது முகக்கவசங்களை அகற்றிக்கொள்ளலாம் என்று இந்த புதிய வழிகாட்டியில் கூறப்பட்டுள்ளது.

எனினும் உட்புறங்களில் மற்றும் கூட்டமான இடங்கள் அல்லது நிகழ்ச்சி இடங்களில் முகக்கவசம் அணிவதற்கான வழிகாட்டல்களும் இதில் கூறப்பட்டுள்ளது.

95 மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்கர்கள் இதுவரை முழுமையான தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு நிலையத்தின் அறிவிப்பை அடுத்து “பெறும் முன்னேற்றமாக” இந்த வழிகாட்டல் உள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வரவேற்றுள்ளார்.

அமெரிக்காவில் தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில் அந்நாட்டில் நோய்த் தொற்றுச் சம்பவங்களில் வீழ்ச்சி கண்டிருப்பதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## உயிரிழக்கும் பொலிஸாரை வீடியோ எடுத்தவருக்கு 10 மாதங்கள் சிறை



வாகன விபத்தில் உயிரிழந்து கொண்டிருந்த பொலிஸ் அதிகாரிகளை வீடியோ எடுத்து கேலி செய்த ஆடவர் ஒருவருக்கு அவுஸ்திரேலியாவில் 10 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரிச்சர்ட் புசி என்ற அந்த ஆடவர் மீதான பொது ஒழுக்கத்தை மீறியது மற்றும் ஏனைய குற்றச்சாட்டுகளில் கடந்த மாதம் அவர் குற்றங்காணப்பட்டார்.

42 வயதான அவர் ஏற்கனவே சுமார் 300 நாட்கள் தடுப்புக் காவலில் இருக்கும் நிலையில் ஒரு சில நாட்களில் தமது தண்டனைக் காலத்தை பூர்த்தி செய்ய வாய்ப்பு உள்ளது.

அவரது செயல், “இதயமற்ற, கொடிய மற்றும் வெட்ககரமானது” என்று தீர்ப்பளித்த நீதிபதி தெரிவித்தார்.

இந்த சம்பவம் அவுஸ்திரேலியாவில் பெரும் கோபத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் வழங்கப்பட்டிருக்கும் சிறைக்காலம் பற்றி பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். கடந்த ஆண்டு மெல்போர்னில் வேகமாக காரை செலுத்தியதற்காக நான்கு பொலிஸ் அதிகாரிகள் ரிச்சர்ட் புசியை நிறுத்தினார்கள். அப்போது அந்த நான்கு பொலிஸாரும் லொரி மோதி சம்பவ இடத்தலேயே உயிரிழந்தனர். சில மீற்றர் தொலைவில் விபத்தில் இருந்து தப்பிய புசி, தனது கைபேசியை எடுத்து பொலிஸ் அதிகாரிகளை வீடியோ எடுத்ததோடு அந்த வீடியோவில் அவர்களை கேலி செய்துள்ளார்.

## புர்கினா பாசோ கிராமங்களில் தாக்குதல்: 15 பேர் உயிரிழப்பு




வடக்கு புர்கினா பாசோவில் பல கிராமங்களில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“ஆயுததாரிகள் கடந்த திங்கட்கிழமை நடத்திய கொலைகார தாக்குதலில் செய்டன்யாகா பகுதியில் பல கிராமங்களிலும் 15 பேர் கொல்லப்பட்டனர்” என்று பெயரை வெளியிடாத அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தள்ளார்.

ஆரம்பத்தில் யட்டகவு கிராத்தில் தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் அங்கு 10 பேரை கொன்ற நிலையில் சொபொகலில் மேலும் ஐவர் கொல்லப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதில் ஆண்களே அதிகம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்பு தரப்பினர் இந்த தாக்குதலை உறுதி செய்தபோதும் உயிரிழப்புகள் பற்றி குறிப்பிடவில்லை. அங்கு பாதுகாப்புக்கு துருப்புகள் நிலைநிறுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றான புர்கினா பாசோ, 2015 இல் அண்டை நாடான மாலியில் இருந்து வந்த இஸ்லாமியவாத ஆயுதக் குழுக்களின் தாக்குதல்களால் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளது.

## முடக்கநிலைக்கு மத்தியில் கூகுள் வருவாய் அதிகரிப்பு




கொரோனா தொற்றினால் அதிகமானவர்கள் வீடுகளில் தங்கி இருந்த நிலையில் பலரும் கூகுள் சேவைகளை அதிகம் பயன்படுத்தியதால் அதன் உரிமை நிறுவனமான அல்பபட்டின் வருவாய் கடந்த காலாண்டில் அதிகரித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் வரையான மூன்று மாதங்களில் விளம்பரத்தின் மூலமான வருமானம் மூன்றில் ஒரு பங்காக அதிகரித்த நிலையில் நிகரலாபம் 162 வீதமாக உயர்ந்து 17.9 பில்லியன் டொலர் வருவாயை அது ஈட்டியுள்ளது.

பெருந்தொற்றினால் மக்கள் இணையதளத்தை எப்போதும் இல்லாத அளவுக்கு பயன்படுத்திய நிலையில் இந்த தொழில்நுட்ப நிறுவனத்தின் செல்வாக்கும் அதிகரித்திருப்பதை இது காட்டுகிறது. “கடந்த ஆண்டில் மக்கள் தகவல்கள் பெற, தொடர்பை ஏற்படுத்த மற்றும் பொழுதுபோக்கிற்கு கூகுள் சேர்ச் மற்றும் மேலும் பல ஒன்லைன் சேவைகளை நாடியிருந்தனர்” என்று அல்பபட் மற்றும் கூகுள் தலைமை நிர்வாகி சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார். இந்நிலையில் ஒன்லைன் விளம்பரங்களுக்கு அதிகம் செலவிடத் தூண்டி இருக்கும் சூழலில், முடக்க நிலையில் இருந்து திரும்பியபோதும் கூட உலகெங்கும் கூகுளின் பொருளாதாரத் திறன் தொடர்ந்து நீடிக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## புர்கினா பாசோ: கடத்தப்பட்ட மூன்று வெளிநாட்டவர்கள் பலி



கிழக்கு புர்கினா பாசோவில் சரணாலயம் ஒன்றில் வைத்து கடத்தப்பட்ட இரு பிரான்ஸ் ஊடகவியலாளர்கள் மற்றும் ஒரு அயர்லாந்து நாட்டவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த ஐரோப்பியர்கள் விலங்கு வேட்டைக்கு எதிராக ரோந்து சென்றிருந்தபோதே கடந்த திங்களன்று ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்கள் உயிரிழந்ததை புர்கினா பாசோ அரச அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை உறுதி செய்தனர். இதன்போது கடத்தப்பட்ட உள்நாட்டு படை வீரர் பற்றி எந்த விபரமும் வெளியிடப்படவில்லை.

இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பது உறுதிசெய்யப்படவில்லை.

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோ பெரும்பாலான அண்டை நாடுகள் போன்று இஸ்லாமியவாத ஆயுதக் குழுக்களில் தாக்குதல்கள் மற்றும் கடத்தல்களுக்கு முகம்கொடுப்பதால் பெரும் பாதுகாப்பு பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது.

புர்கினா பாசோ, அதேபோன்று மாலி மற்றும் நைகர் நாடுகளில் இஸ்லாமியவாதக் குழுக்கள் வெளிநாட்டினர் பலரையும் பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருப்பதாக நம்பப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில்

# கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை

## மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 351 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ் நிலையினை கருத்தில் கொண்டு எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் மன்னார் மாவட்டத்திலும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (28) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,,

மன்னார் மாவட்டத்தில் ஏப்ரல் மாதம் தற்போது வரை 13 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இந்த வருடத்தில் 334 தொற்றாளர்களும், மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 351 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே மக்கள் சுகாதார வழிமுறைகளை கடைபிடித்து நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

தற்போது இலங்கையின் சில இடங்களில் பரவி வருகின்ற கொரோனா தொற்றானது காற்று மூலமாக பரவும் என கூறப்படுகின்றது.காற்று மூலமாக ஒரு வைரஸ் பரவும் என கூறப்பட்டால் குறித்த வைரஸ் தனது இயல்பை திரிவடைந்து பெற்றிருக்கலாம்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்த வரையில் கடந்த ஜனவரி மாதம் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும், காற்றினால் பரவும் தொற்று இனம் காணப்படவில்லை.இந்த நிலமை மன்னார் மாவட்டத்திலும் ஏற்பட்டால் தொற்றாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கும்.

# 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

வவுனியா மாவட்டத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு வவுனியா மாவட்ட மாநாட்டு மண்டபத்தில் வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம் சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு உப தலைவருமான கு. திலீபன் மற்றும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், செல்வம் அடைக்கலநாதன்,சாள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலாவதாக கமநலசேவைகள் திணைக்களத்தினுடைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர்,...

திருத்தப்பட வேண்டிய அனைத்து குளங்களினுடைய பட்டியலை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாய அமைப்புக்களுடைய கடிதங்களுடன் மாவட்ட செயலாளருக்கு விரைவில் கையளிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் குளங்களில் திருத்த வேலையை மேற்கொள்ளும் போது வாய்க்கால்களையும் சேர்த்து திருத்த வேலைகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு முழுமையாக பயன்படும் வகையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

அத்துடன் கைவிடப்பட்ட காணிகளை விவசாய செய்கைகளுக்கு உட்படுத்தும்போது அந்தக் காணிகளுடைய உரிமையில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தாத வகையில் அத்திட்டத்தை மேற்கொள்ளுமாறும் அதை உறுதிப்படுத்தும் வகையில் பயனாளியுடன் ஒரு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுமாறும் அறிவுறுத்தல் வழங்கினார்.

கல்வித்துறை தொடர்டபிலான கலந்துரையாடலில் ஆசிரிய ஆளணி தொடர்பில் கேட்டறிந்த ஆளுநர்,

ஆளணி வெற்றிடங்கள் வெகுவிரைவில் நிரப்பப்படும் எனவும் நியமனம் பெற்ற ஆசிரியர் பாடசாலைக்கு சமுமளித்தல் தொடர்பாகவும் மாணவர்களின் வரவு மற்றும் பாடவேளைகள் தொடர்பாக திட்டமிடல் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு வலய கல்விப் பணிப்பாளருக்கு காணப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு துணுக்காய் வாணி மோட்டைக் குளம்;

# விடுவிக்கப்பட்டால் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு துணுக்காய் வாணி மோட்டைக் குளத்தின் கீழுள்ள வயல் நிலங்கள் வனபரிபாலன திணைக்களத்தின் கீழ் இருந்து விடுவிக்கப்படும் பட்சத்தில் அதை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணுக்காய் பிரதேச செயலாளர் லதுமீரா தெரிவித்துள்ளார்

மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகுட்பட்ட புத்து வெட்டுவான் கிராமத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட வாணி மோட்டைக்குளம் கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் புனரமைக்கப்பட்டுள்ள போதும் இதுவரை அதன் கீழ் உள்ள வயல் நிலங்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை.

குறிப்பாக இந்த பிரதேசத்தில் 80க்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயக் காணிகள் இன்றி வாழ்வதாகவும் அவர்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் தொடர்ச்சியாக இந்தப் பிரதேச மக்கள் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது, வாணி மோட்டைகக் குளமானது புனரமைக்கப்பட்டு இருந்தாலும் விவசாய காணிகள் எனவளத் திணைக்களத்தின் கீழ் இருப்பதனால் அவற்றை விடுவித்து மக்களுக்கு பகிர்ந்து அளிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# திட்டமிடல் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றங்கள்

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலகங்களில் திட்டமிடல் அதிகாரிகளுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனால் பணி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் அதிகாரி இ. திலீபன் காரைநகர் பிரதேச செயலகத்திற்கும், காரைநகர் பிரதேசத்தில் கடமையாற்றும் பா. ரேவதி மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கும், மருதங்கேணி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிருஷ்ணாளினி கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும், சங்கானை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் வை.தர்ஷினி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கும் பதில் கடமையாகவும், சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் இ.சர்வேந்திரன் யாழ். பிரதேச செயலகம், செ. சுபச்செல்வன் பருத்தித்துறை பிரதேச செயலகம் பணி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடமாற்றங்கள் நிர்வாக ரீதியான இடமாற்றங்கள் என கருதப்படும் நிலையில் யாழ். மாவட்டத்தில் வீட்டுத் திட்டங்கள் தொடர்பாக 350 முறைப்பாடுகள் யாழ். மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றதாக அரச அதிபர் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் வீட்டுத்திட்ட முறைப்பாடுகள் அதிகளவில் இடம் பெற்ற பிரதேசங்களைச் சேர்ந்த திட்டமிடல் அதிகாரிகளுக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.



# இலங்கையின் முதல் தமிழ் பெண் வேந்தர்

## பேராசிரியர் யோகா இராசநாயகம் காலமானார்

இலங்கை வரலாற்றில் முதலாவது பல்கலைக்கழக பெண் பீடாதிபதியும் இலங்கையின் முதலாவது தமிழ் பெண் பல்கலைக்கழக வேந்தருமான வாழ்நாள் பேராசிரியர் யோகா இராசநாயகம் கொழும்பில் திங்கட்கிழமை காலமானார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை பட்டதாரியான இவர் அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றியபடி முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டதுடன் தொடர்ந்து பிரித்தானியாவின் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

கொழும்பு பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளராகவும், துறைத்தலைவராகவும் நீண்ட நாட்கள் கடமையாற்றிய பேராசிரியர் யோகா இராசநாயகம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதியாக நியமனம் பெற்றதன் மூலம், இலங்கையின் முதலாவது பெண் பீடாதிபதி என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு ஹவ்லொக் வீதியில், வாழ்நாள் பேராசிரியர் யோகா இராசநாயகம் வேந்தராக நியமிக்கப்பட்டதை கௌரவித்து வேந்தர் வீதி என்று விசேட பெயர் சூட்டப்பட்ட வீதியில், 413/2C என்ற இலக்கத்தில் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு வாழ்ந்து வந்தார்.

# வவுனியாவில் சட்டவிரோதமாக கடத்தபட்ட மாடுகளுடன் இருவர் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் அனுமதி இன்றி கடத்தி செல்லபட்ட 10 மாடுகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (28) அதிகாலை 3 மணியளவில் புளியங்குளம் பகுதியில் இருந்து ஹிக்கிறிகொல்லாவை நோக்கி வாகனம் ஒன்றில் மாடுகள் கடத்திச் செல்லப்பட்ட நிலையில் சிதம்பரபுரம் பகுதியில் அதனை வழிமறித்த பொலிசார் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் சட்டவிரோதமான முறையில் அனுமதி இல்லாமல் மாடுகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

வாகனத்தில் இருந்தவர்களை கைது செய்த சிதம்பரபுரம் பொலிசார் மேலதிக விசாரணைகளிற்காக இருவரையும் வவுனியா பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவத்தில் ஹிக்கிரிகொல்லாவை பகுதியை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 10 மாடுகள் பொலிசாரால் கைப்பற்றபட்டது. அவற்றை கடத்தி செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட சிறிய கப்ரக வாகனம் ஒன்றையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

# வடக்கில் இரண்டாம் கட்ட தடுப்பூசி போடும் பணி

**யாழ்.விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தில் மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கொவிட் 19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கும் பணி இன்று ஆரம்பிக்கப்படும் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முதல் கட்டமாக சுகாதாரத் துறையினருக்கு கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் திட்டம் கடந்த ஜனவரி மாதம் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மருத்துவ சேவையாளர்கள், ஊழியர்கள் என 9 ஆயிரத்து 400 பேர் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவ கல்வியியலாளர்கள், சுகாதாரத் துறையினர் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு முதல் கட்டமாக கொவிட் 19 அஸ்ரா செனகா தடுப்பூசி வழங்கப்பட்டது.

அதன் இரண்டாவது டோஸ் வழங்கும் பணி இன்று ஆரம்பிக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்

# றிசாட் பதியுதீன் எம்.பியை விடுதலை செய்யுமாறு கோரி போராட்டம்



**வவுனியா விசேட நிருபர்**

முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டம் வவுனியா மாவட்ட செயலகம் முன்னால் நேற்றுக் காலை 9 மணியில் இருந்து 10 மணிவரை இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான றிசாட் பதியுதீன் கைது ஒரு அரசியல் பழி வாங்கல் எனவும், றிசாட் பதியதீன், அசாத்சாலி உள்ளிட்டவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் இந்த போராட்டம் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'அரசுக்கு ஆதரவு வழங்காததற்காக இந்த கைதா, சிறுபான்மை தலைமைகளை விடுதலை செய், அரசே உண்மையான சூத்திரதாரிகளை கைது செய், தமிழ் பேசும் உறவுகளே அநீதியான கைதுக்கு எதிராக ஒருமித்து குரல் கொடுப்போம், இன, மத பாகுபாடு இன்றி பணியாற்றிய சேவகனை விடுதலை செய்,சிறுபான்மையினரின் குரலை விடுதலை செய், என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோசமும் எழுப்பினர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் வவுனியா நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி, லரீப், ரி.கே. இராஜலிங்கம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாள்ர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சுகாதார விதிமுறைகளை மீறுவோர்; கண்காணிப்பு கமெரா மூலம் நடவடிக்கை

**பரந்தன் குறூப் நிருபர்**

சுகாதார விதிமுறைகளை மீறுவோர் மீது கண்காணிப்பு கமெரா மூலம் அவதானிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தள்ளார்.


தற்போதுள்ள கொவிட் பரம்பல் உண்மையில் மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது. இந்தியாவில் இடம்பெறுகின்ற சம்பவங்களை அவதானிக்கின்றபோது மீண்டும் ஒரு அவலம் எமது மக்களிற்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற விடயத்தை தெளிவுபடுத்துகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள மக்கள் அதிகம் கூடும் பகுதிகள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி சேவைச்சந்தை தம்புள்ளயுடன் நேரடி தொடர்பை பேணும் சந்தையாக காணப்படுகின்றது. இந்த நிலையில் அதிக அவதானம் செலுத்தப்படுகின்றது. தொற்றுநீக்கல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், கடந்த காலங்களைப் போன்று சேவைச் சந்தை நடைமுறைகளை மீண்டும் அமுல்ப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிசாரின் உதவியை நாங்கள் நாடவில்லை. ஆனால், எமது ஊழியர்களைக்கொண்டு இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றது. 90 வீதமான மக்கள் ஒத்துழைக்கின்ற போதிலும், சிலர் தர்க்கத்தில் ஈடுபட்டு ஒத்துழைக்க மறுக்கின்றனர்.

# முல்லைத்தீவில் கஜமுத்துவுடன் ஒருவர் கைது

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



யானையின் தந்தத்தில் இருந்து எடுக்கப்படும் கஜமுத்து இரண்டினை முல்லைத்தீவில் விற்பனைக்காக கொண்டு வந்த நபர் ஒருவரை சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

தென் பகுதியினை சேர்ந்த 39 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.இவரிடம் இருந்து பெறுமதியான இரண்டு கஜ முத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

# யாழ்.நகர் மற்றும் புறநகர் பகுதியில் இராணுவத்தினர் கண்காணிப்பில்

யாழ்.நகர் மற்றும் புறநகர் பகுதி பிரதான சந்திகளில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதை கண்காணிப்பதற்கு இராணுவத்தினர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதான சந்திகளில் நிற்கும் இராணுவத்தினர் முக கவசங்கங்களை உரிய முறையில் அணியாதவர்களை எச்சரித்து அவற்றை உரிய முறையில் அணிந்து செல்ல அறிவுறுத்துகின்றனர். பொதுமக்கள் ஒன்று கூடுவதையும் தடுப்பதோடு யாழ். நகரப் பகுதிகளில் சன நெரிசலை தடுக்கும் செயற்பாட்டினையும் முன்னெடுத்து வருகின்றார்கள்.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிப்பதனை உறுதிப்படுத்தும் முகமாகவும் மக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கின் குரல்



# சட்டவிரோதமாக இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் காலவரையறையின்றி மூடப்படும்

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சட்டவிரோமாக இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் காலவரையறை இன்றி மூடப்படுமென, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

நாட்டில் கொவிட்19 தொற்று வேகமாக பரவி வருகின்ற வேளையில் அதனை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பாடசாலைகள் மற்றும் பிரிவெனா கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், கல்முனைப் பிராந்தியத்தில் தனியார் கல்வி நிலையங்கள் சட்ட விரோதமாக இயங்கி வருவதாக தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.



குறித்த கல்வி நிலையங்கள் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸாரினால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுதனிமைப்படுத்தல்சட்டத்தின் கீழ் கால வரையறையின்றி மூடப்படுமெனவும் தெரிவித்தார்.

இவ்வாறு சட்டவிரோதமாக இயங்கும் தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

கூட்டங்கள் கூட்ட வேண்டாமெனவும் மக்கள் ஒன்று கூட வேண்டாமெனவும் அரசாங்கத்தினால் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான கல்வி நிலையங்கள் இயங்குவது பிரதேசத்தின் இயல்பு நிலையை பாதிக்குமெனவும் தெரிவித்தார்.

தற்போது பரவி வருகின்ற கொவிட்19 மூன்றாவது அலை மிகவும் வேகமானதாகவும், விரைவாகவும் காணப்படுவதால் மக்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுமாறும், தேவை இல்லாமல் வெளி மாவட்டங்களுக்கு செல்ல வேண்டாமெனவும் அறிவித்துள்ளார்.

# கல்முனை பிராந்திய சுகாதார துறையினரால் திடீர் சுற்றிவளைப்பு




அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ. சுகுணன் தலைமையில் சுகாதார அதிகாரிகள், பணியாளர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பங்களிப்புடன் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் செவ்வாய்க்கிழமை (27) கோவிட்19 திடீர் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டதோடு, சுகாதார வழிமுறைகளினை பின்பற்றாத பொதுமக்கள், வாகன ஓட்டுனர்கள், வியாபார நிலையங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கண்டிப்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

நாட்டில் மூன்றாம் அலையின் தாக்கம் தொடங்கியுள்ளதால் அதனை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது கடமையாகும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

# மதுரங்கேணிக்குளம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கல்வி வலயத்திற்குபட்ட அதிகஸ்ரப் பிரதேச பாடசாலையாக காணப்படும் மதுரங்கேணிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் கற்றலை மேலும் மேம்படுத்துவதற்காக அங்கு கல்வி பயிலும் 70 மாணவர்களுக்குரிய மதிய நேர உணவை வழங்குவதற்கு பொறியலாளர் கே.குமரேசன் தலைமையில் லண்டனிலிருந்து செயற்பட்டு வரும் கனகம்மா பவுண்டேசன் எனும் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இதனை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை நடைமுறைப்படுத்துகின்றது.

குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் பாடசாலை நண்பகல் கலைந்ததும் மாணவர்கள் வீடு செல்லாமல் பாடசாலையிலே இருந்து மாலை வேளைவரை கற்பதற்காக மதிய உணவு வழங்கப்படுகின்றது.

இம்மாணவர்களுக்கு உணவு வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வு பாடசாலை அதிபர் கே.மங்களரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் த.வசந்தசராசா, செயலாளர் சா.மதிசுதன், பொருளாளர் வ.சக்திவேல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆன்மிகம் ஒன்றுதான் மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்தும்

### சுவாமி தக்ஷஜானந்த ஜீ மஹராஜ்

(காரைதீவு குறூப் நிருபர்)

ஆன்மிகம் ஒன்றுதான் மனிதசமுதாயத்தை நல்வழிப்படுத்தும். ஆன்மிகம் சிறப்பாக தொழிற்பட்டால் ஏனைய அனைத்தும் நல்வழியில் சிறப்பாக இயங்கும். இதைத்தான் சுவாமி விவேகாநந்தர் முதல் சுவாமி விபுலாநந்த அடிகளார் வரை கூறியிருந்தனர்.

இவ்வாறு காரைதீவில் திங்கட்கிழமை (26) நடைபெற்ற சுவாமி விபுலாநந்த அடிகளின் 97ஆவது துறவறதின விழாவில் உரையாற்றிய மட்டக்களப்பு இராமகிருஸ்ணமிசன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்த ஜீ மஹராஜ் தெரிவித்தார்.

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 97ஆவது துறவறதினவிழா திங்கட்கிழமை சித்ராபௌர்ணமியன்று சுவாமிகள் பிறந்த காரைதீவில் கொண்டாடப்பட்டது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம் இணைந்து நடாத்திய துறவறதினவிழா மட்டக்களப்பு இராமகிருஸ்ணமிசன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்த ஜீ மஹராஜ் முன்னிலையில் பணிமன்றத்தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியான அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், சிறப்பதிதியான காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ஆகியோரும் உரையாற்றினர்.

97ஆவது துறவறதினத்தை யொட்டி இந்துகலாசார திணைக்களம் தயாரித்த சுவாமிவிபுலாநந்தரின் திருவுருவப்படம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சுவாமி மேலும் உரையாற்றுகையில்: சுவாமிக்கு விழா எடுப்பதானால் மிகப்பொருத்தமான தினம் இந்த துறவறதினம்தான். பிறந்த மரணித்த தினங்களைவிட மிகவும் சாலப்பொருத்தமான தினம் இதுதான்.

இந்துமதம் ஒன்றுதான் ஆன்மிகப்பட்ட மதம். அது ஒன்றாக இருந்தால் ஏனைய சமயங்களும் நன்றாக இருக்கும். இன்று அரசியல்கட்சிகள் போல சமயங்களும் மலிந்து விட்டன.

கல்லடியிலுள்ள சுவாமியின் சமாதியில் அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது. அதில் அவரது ஒட்டுமொத்த விடயங்கள் காட்சிப்படுத்தப்படவேண்டும். எனவே அதற்காக தமிழ்கூறு நல்லுலகம் உதவேண்டும் என்றார்.

# முன்பள்ளி டிப்ளோமா கற்கைநெறி சான்றிதழ் பெறுவதில் சிக்கல்

(பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலைகள் கல்விப் பணியகத்தினால் நடத்தப்பட்ட முன்பள்ளி டிப்ளோமா ஒரு வருட கற்கைநெறி வகுப்புகள் நிறைவடைந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை அதற்கான பரீட்சைகள் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக முன்பள்ளி ஆசிரியைகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலைகள் கல்விப் பணியகத்தினால் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எல்.அமீரின் நிதி ஒதுக்கீட்டிலும் வேல்ட் விஸன் நிறுவனத்தின் நிதி உதவியுடனும் அம்பாறை மாவட்ட முன்பள்ளி ஆசிரியைகளின் நலன் கருதி சம்மாந்துறை மத்திய கல்லூரியில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கை நெறிக்கான அனைத்துப் பாடங்களும் கடந்த 2018 ஆம் ஆண்டு பூர்த்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த டிப்ளோமா கற்கை நெறிக்கான பரீட்சையை கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதனால் கற்கை நெறியை நிறைவு செய்து சான்றிதழ் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.எனவே முன்பள்ளி கற்கை நெறிக்கான பரீட்சையை விரைவாக நடத்தி டிப்ளோமா சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் இனிமேலும் தாமதியாது நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்பள்ளி ஆசிரியைகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# திருமலை பூம்புகார் கிராம சேவகர் பிரிவு முடக்கம்



அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் பூம்புகார் கிராம சேவகர் பிரிவு திங்கட்கிழமை (26) இரவு 8.00 மணிமுதல் முடக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி உப்புவெளி பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குட்பட்டது.

குடைமாதா சந்தியில் உள்ள இரயில்வே கடவைக்கு அருகாமையிலும் இப்பகுதிகுள் உள் நுழையும் இன்னும் இரண்டு இடங்களிலும் பொலிசார் மற்றும் இராணுவத்தினரால் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இது வரை இப்பகுதியில் அன்டிஜென் பரிசோதிக்கப்பட்டவர்களில் 56 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தபட்டுள்ளது. மேலும் கடந்த 04 தினங்களாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றவர்களில் அதிகமானவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அவை தொடர்பான உத்தியோக பூர்வ தகவல்கள் வெளியிடப்படவில்லை.

திருகோணமலை சீமெந்து தொழிற்சாலை ஒன்றில் கடையாற்றிய ஒருவர் கொரோனா தொற்று காரணமாக ஏற்பட்ட மாரடைப்பினால் உயிரிழந்ததை தொடர்ந்து அதிகமானவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து பலர் ஈச்சிலம்பற்று மற்றும் மட்டக்களப்பு ஆகிய தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கபட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று இரவு முதல் இப்பகுதி முடக்கத்திலுள்ளது.

இவர்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை சுகாதார பிரிவினர் மற்றும் பொலிசார் மேற்கொள்ள உள்ளனர்.



புனித ரமழானை முன்னிட்டு முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தினால் இறக்காமம் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு வழங்கப்பட்ட பேரீத்தம் ஏனைய பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (26) இறக்காமம் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி ஏ.கே.அப்துல் றஊப் தலைமையில் இடம்பெற்ற போது. (படம்: இறக்காமம் தினகரன் நிருபர்)

### சுகாதார நடைமுறையை பின்பற்றாத

# வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் கொவிட் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மாவட்டத்திலுள்ள உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள், அன்றாட பாவனைப் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மற்றும் பேக்கரிகளில் கடமையாற்றும் ஊழியர்கள் முதல் உரிமையாளர்கள்வரை முகக் கவசமோ, கையுறையோ அணியால் பொருட்களை கையாளுவதனை காணக் கூடியதாகவுள்ளது. அத்துடன் பணத்தினை அதே கரங்களினால் பெற்று பரிமாறியும் வருகின்றனர். இதன் காரணமாக வர்த்தகர்களிடமிருந்து பொதுமக்களுக்கு கொறோனா தொற்று பரவுவதற்கு அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வர்த்தக நிறுவனங்களில் முகக் கவசம், கையுறை, தொற்று நீக்கி மற்றும் பணப் பரிமாற்றம் தொடர்பில் சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதனை சுகாதார அதிகாரிகள் அடிக்கடி விஜயம் செய்து கண்காணித்து, கடைப்பிடிக்கத் தவறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் சுகாதார அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# போதைப் பொருள் வியாபாரி கைது

றொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட றொட்டவெவ பகுதியில் ஐஸ் போதைப்பொருள், கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களை விற்பனை செய்யும் விநியோகஸ்தர் ஒருவரை விசேட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் ஞாயிற்றுக்கிழமை (25) கைது செய்துள்ளனர்.

குறித்த நபருக்கு எதிராக போதைப்பொருள் தொடர்பில் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரிடமிருந்து ஐஸ் போதைப் பொருள்கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை விசேட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் மொரவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# முச்சக்கர வண்டி விபத்தில் கணவன், மனைவி படுகாயம்

(றொட்டவெவ குறூப் ,திருமலை மாவட்ட விசேட நிருபர்கள்)

திருகோணமலைஹொரவ்பொத்தான பிரதான வீதி பம்மதவாச்சி பகுதியில் முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் கணவர் , மனைவி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில், செவ்வாய்க்கிழமை (27) திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



கிண்ணியாவிலிருந்து மன்னார் நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டமையால் வீதியை விட்டு விலகியதால் விபத்து இடம்பெற்றதாக ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் மன்னார் எருக்கலம்பிட்டி புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த எம்.ஐ.எம்.பர்ஜுன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பள்ளிவாசல்களில் அறிவிப்பு

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களில் தொழுகைக்கு வருகை தருவோர் கட்டாயமாக முகக்கவசம் அணிந்து வருமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வேண்டுகோளின் பிரகாரம் இந்த அறிவிப்பு ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளே சமூக இடைவெளி பேணி கடமைகளைச் செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

ரமழான் மாத காலமாதலால் தறாவீஹ், வித்ர் போன்ற ஸுன்னத்தான தொழுகைகள் பள்ளிவாசல்களில் இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தகாகதாகும் .

# கால்நடைகள் உணவின்றி அவதி

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேசத்தில் கால்நடைகள் வளர்க்கும் பண்ணையாளர்கள் தமது மாடுகள், ஆடுகளை மேய்ப்பதற்கு மேச்சல் தரைகள் இன்றி பெரிதும் கஸ்டப்படுகின்ற நிலையில், இக்கால்நடைகள் உணவுகளைத் தேடிக் கொள்வதில் பெரும் அவதியுறுகின்றன.

மூதூர் பிரதேசத்தில் மிக அதிகளவில் கால்நடை வளர்ப்பை தமது ஜீவனோபாயத் தொழிலாக கொண்டு வாழ்பவர்கள் பெருமளவில் உள்ளனர்.

இந்நிலையில் கால்நடைகளுக்கென தனியான மேய்ச்சல் நிலங்கள் ஒதுக்கப்படாத நிலையில் ,கால்நடைகள் ஊருக்குள் உலாவி உணவுகள் இன்றி தவிர்ப்பதோடு இதற்கான புல் உணவுகளை தேடி வீதிகளில் உலாவி பெரும் அவதியுறுகின்றன.

# கிழக்கின் குரல்



# திருமலையில் கோவிட் பரவலை கட்டுப்படுத்த மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## கொவிட் செயலணிக் கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர்

கிண்ணியா மத்திய, திருமலை மாவட்ட விசேட, தம்பலகாமம், அன்புவழிபுரம் தினகரன் நிருபர்கள்

தற்போது பரவியுள்ள கொவிட் பரவலை கட்டுப்படுத்த மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

மாவட்ட கொவிட் செயலணிக் கூட்டம் நேற்று (28) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்றபோதே மேற்குறித்தவாறு தெரிவித்தார்.



தற்போதைய சூழ்நிலையில் திருகோணமலை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே இவற்றை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

மக்கள் அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்படாவிட்டால் இதன் பாதிப்பு மிக அதிகமானதாக அமையலாம். எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளான முகக்கவசம் அணிதல், கைகளை கழுவுல், சமூக இடைவெளி பேணல், அநாவசிய நடமாட்டத்தை குறைத்தல் என்பனவற்றை பேணல் மிக முக்கியமானதாகும்.

முகக்கவசம் இன்றி நடமாடுபவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவுள்ளார்கள்.அத்துடன் இராணுவம் மற்றும் பொலிசார் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதன் மூலம் மக்களது அநாவசிய நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியும்.

அநாவசியமாக மக்கள் ஒன்றுகூடுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும். திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாதாந்த சிகிச்சைக்கு வருபவர்கள் அதிகளவில் உள்ளனர். இதன் காரணமாக கொவிட் பரவல் ஏற்படக்கூடிய நிலை ஏற்படலாம். எனவே மாதாந்த சிகிச்சைக்கு வருபவர்களின் வருகையை கட்டுப்படுத்தி அவர்களது மாத்திரைகளை வீடுகளுக்கே கொண்டு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் 13க்கு மேற்பட்ட ஆளணியினருக்கு கொவிட் தொற்று பரவியுள்ளது. நோயாளிகளை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டவர்கள் மாத்திரம் நோயாளிகளை பார்வையிட வைத்தியசாலைக்கு வருகை தர வேண்டும்.

மக்கள் வெளியேறலை கட்டுப்படுத்தும் வகையில் அத்தியவசியப் பொருட்கள் உட்பட தேவையான பொருட்களை வீடுகளுக்கு நடமாடும் சேவை ஊடே விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. எனவே மக்கள் தேவையான பொருட்களை வெளியே சென்று பெற்றுக்கொள்வதனை விட பாதுகாப்பாக காலடியிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பூம்புகார் கிராமசேவகர் பிரிவில் அண்ணளவாக 80க்கு மேற்பட்ட கொவிட் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கான அரசாங்கத்தின் கொடுப்பனவு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கொவிட் பரவலை அடிப்படையாக கொண்டு கொவிட் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் நோக்கில் மாவட்டத்தின் சில வைத்தியாசாலைகளின் வசதிவாய்ப்புக்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிக சிங்க, மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், சுகாதார திணைக்கள அதிகாரிகள், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.



# கோமாரியில் காட்டு யானைகள் அட்டகாசம்

(காரைதீவு குறுப் நிருபர் )

பொத்துவில் கோமாரிக் கிராமத்தில் அதிகாலையில் புகுந்த காட்டு யானைகள் வீடு, மதில்களை உடைத்து அட்டகாசம் செய்துள்ளன. இச்சம்பவம் புதன்கிழமை (28) அதிகாலையில் இடம்பெற்றுள்ளது. இதனால் கோமாரிக்கிராமமே அச்சத்தில் மூழ்கியுள்ளது. அங்கு புகுந்த காட்டு யானைகள் நகுலன் சதீஸ் என்ற குடும்பஸ்தரைத் தாக்கிவிட்டு அவரது குடும்பம் வாழ்ந்துவந்த குடிசையை துவம்சம் செய்தது.

அத்துடன் நின்றுவிடாது அருகிலுள்ள குடிமனைகளுக்கும் சென்று அங்குள்ள மதில்களை உடைத்து வீழ்த்தியுள்ளது. பயிர்பச்சைகளையும் சேதப்படுத்தியுள்ளன. இது தொடர்பாக த.தே.கூட்டமைப்பின் பொத்துவில் பிரதேசசபை உறுப்பினர் த.சுபோதரன் நேரில் சென்று பார்வையிட்டு சேதவிபரத்தை கிராமசேவை உத்தியோகத்தரிடம் அறிவித்துள்ளார். கிராமசேவை உத்தியோகத்தர் மேல் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார். பாதிக்கப்பட்ட அக்குடும்பம் நிர்க்கதியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு மிக அவதானமாக செயல்பட வேண்டும்

## குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் முபாரக் அப்பகுதி பொது மக்களுக்கு கொவிட் தொடர்பாக முக்கிய அறிவித்தலொன்றினை நேற்று (28) வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தற்போது கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். மேலும் புனித ரமழான் மாதம் வந்தடைந்து இருக்கின்றது. இந்த சூழ்நிலையில் பொது மக்களாகிய நீங்கள் நாட்டின் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மிகவும் அவதானமாக செயல்பட வேண்டும்.

குச்சவெளி பிரதேசத்தில் இதுவரையில் குறைவான வைரஸ் தாக்கம் தான் காணப்படுகின்றது இருந்தும் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய நிலையில் உள்ளோம்.

ஆகவே பொதுமக்களாகிய நீங்கள் அத்தியாவசிய தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதற்காக வெளியில் செல்ல வேண்டும் . அதை விடுத்து

பெருநாளை முன்னிட்டு ஆடைகளை கொள்வனவு செய்வதற்காக வீதிகளிலும் கடைகளிலும் தேவை இல்லாமல் அலைந்து திரிவதை முற்றாக தவிர்க்க வேண்டும் என்றார்.

# அம்மம்மாவின் இறப்பின் அதிர்ச்சியால் பேரன் தூக்கிட்டு தற்கொலை

## குருமண்வெளியில் சம்பவம்

மட்டக்களப்பு குறுப், புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருமண்வெளியில் அம்மம்மாவின் இறப்பினை கேள்வியுற்ற பேரன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குருமண்வெளி மாரியம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த 31 வயதுடைய மன நலம் பாதிக்கப்பட்டிருந்த இளைஞரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

குறித்த இளைஞர் அவர் வசித்து வந்த வீட்டினுள் தூக்கில் தொங்கியதைக் கண்ட உறவினர்கள் அவரை மீட்டு களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ள நிலையில் குறித்த இளைஞர் ஏற்கனவே இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதனைத் தொடர்ந்து களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு சென்ற களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரனை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம், சடலத்தை பார்வையிட்ட பின்னர், சடலத்தை பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

# திருமலை மாவட்டத்தில் ஒரேநாளில் 67 தொற்றாளர்கள் இனங்காணல்

## திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

றொட்டவெவ குறுப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை (27) மாத்திரம் 67 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜீ.எம். கொஸ்தா தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையினை நேற்று (28) அவர் வெளியிட்டுள்ளார்.

இதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதியில் 31 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உட்பட்ட பகுதியில் 27 தொற்றாளர்களும், கிண்ணியா பிரதேசத்தில் 5 தொற்றாளர்களும், குறிஞ்சான்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் ஒருவரும், தம்பலகாமத்தில் ஒருவரும், கந்தளாயில் இருவரும் இடங்காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



இதேவேளை 26ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் மூலம் கோமரங்கடவல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட எத்தாபெந்திவெவ, மொரவெவ பகுதிகளில் 11 பேர் இனங்காணப்பட்டுள்ள நிலையில், மொரவெவ பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் தொற்றாளர்களுடன் தொடர்புபட்டவர்களை தனிமைப்படுத்தியுள்ளதாகவும், தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்டத்தில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், சுகாதார வழிமுறைகளை பின்பற்றி சமூக இடைவெளிகளை பேணுமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பெரியகல்லாறு பொலிஸ் சோதனை சாவடியில் பி.சி.ஆர் பரிசோதனை



பாண்டிருப்பு தினகரன் நிருபர்

சுகாதார விதிமுறைகளைப்பின்பற்றாது பெரியகல்லாறு பொலிஸ் சோதனைச் சாவடி ஊடாக பயணிக்கின்றவர்கள் நிறுத்தப்பட்டு அவ்விடத்திலே அவர்களுக்கு பி.சீ.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இதில் பிராந்திய சுகாதாரப் பணிமனைகள் மற்றும் பிராந்திய பொலிஸ் நிலையங்கள் பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இதற்கமைய களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதராப் பணிமனையின் சுகாதாரப் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கமைய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எம்.இளங்கோவன், எஸ். சிவசுதன், வி.கணேசன், எஸ். விக்னேஸ்வரராஜா ஆகியோரினால் பெரியகல்லாறு பொலிஸ் சோதனைச்சாவடியில் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இங்கு முகக்கவசம் இன்றியும் சமூக இடைவெளியை பேணாதவர்களும் நிறுத்தப்பட்டு அவ்விடத்திலே பி.சீ.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதாரப் பிரிவினரின் இந் நடவடிக்கைகளுக்கு களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணவர்த்தன தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

# உன்னிச்சை குளத்தை பார்வையிடத் தடை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு உன்னிச்சை குளத்தை பார்வையிடுதல், குளத்தில் நீராடுவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள மிகவும் முக்கிய குளமான மட்டக்களப்பு உன்னிச்சை குளத்தை பார்வையிடுதல் அக்குளத்தில் நீராடுதல் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக மண்முனை மேற்கு பிரதேச சபை மற்றும் மண்முனை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து அறிவித்துள்ளது.

கொவிட் தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் இந்த தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.




# ஒரு இலட்சம் ஆக்சிஜன் செறிவூட்டிகளை வாங்க பிரதமர் நரேந்திர மோடி ஒப்புதல்

பி.எம்.கேர்ஸ் நிதியில் இருந்து ஒரு இலட்சம் ஆக்சிஜன் செறிவூட்டிகளை வாங்க பிரதமர் நரேந்திர மோடி ஒப்புதல் அளித்து உள்ளார்.

இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கை:

கொரோனா சிகிச்சைக்கு தேவைப்படும், மருத்துவ ஆக்சிஜன் தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்ட குழுக்கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் ஒரு இலட்சம் ஆக்சிஜன் செறிவூட்டிகளை பி.எம். கேர்ஸ் நிதியில் இருந்து வாங்க ஒப்புதல் அளித்தார். மேலும், அவற்றை விரைவாக கொள்முதல் செய்து, அதிக பாதிப்புள்ள மாநிலங்களுக்கு விநியோகிக்கவும் உத்தரவிட்டு உள்ளார். மேலும். பி.எம் கேர்ஸ் நிதியில் இருந்து, ஏற்கனவே 713 ஆக்சிஜன் உற்பத்தி மையங்கள் அமைக்க ஒப்புதல் வாங்கிய நிலையில், மேலும் 500 ஆக்சிஜன் கொள்முதல் நிலையங்கள் அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டது. இந்த நிலையங்கள் மூலம் மாவட்ட தலைநகரங்கள் மற்றும் 2ம் கட்ட நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் ஆக்சிஜன் தேவையை நிறைவு செய்ய முடியும். இந்த ஆக்சிஜன் உற்பத்தி நிலையங்கள், உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்காக டிஆர்டிஓ மற்றும் சிஎஸ்ஐஆர் தயாரித்த தொழில்நுட்பத்தில் அமைக்கப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## கோவாக்சின் 617 உருமாறிய கொரோனா வகைகளை வீரியமிழக்க செய்கிறது

கோவாக்சின் தடுப்பூசி, 617 உருமாறிய கொரோனா வகைகளை வீரியமிழக்க செய்வதாக அமெரிக்க மருத்துவ நிபுணர் ஆண்டனி பாஸி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் தலைமை மருத்துவ ஆலோசகராகவும், பெருந்தொற்று நிபுணராகவும் உள்ள டாக்டர் ஆண்டனி பாஸி, கான்பரன்ஸ் கால் மூலம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சமீபத்தில் கிடைத்த தரவுகளின் படி, இந்தியாவின் கோவாக்சின் தடுப்பூசி, கொரோனாவின் 617 உருமாறிய கொரோனா வகைகளை வீரியமிழக்க செய்கிறது. எனவே இந்தியாவின் உண்மையான கஷ்டங்களை பார்க்கும் போதும் தடுப்பூசி போட்டுக்கொள்வதுதான் கொரோனாவுக்கு எதிரான ஒரே வழிமுறை என்பது தெரியவருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

கொரோனா நோய்த்தொற்று தொடர்பான வெள்ளை மாளிகையின் சீனியர் ஆலோசகர் ஆண்டி ஸ்லாவிட் கூறுகையில், 'தடுப்பூசி உற்பத்தியை இந்தியா துரிதப்படுத்த, அதிகப்படுத்த தடுப்பூசி மூலபொருட்களை இந்தியாவிற்கு அனுப்பவுள்ளோம். இது இந்தியாவுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். இந்தியாவின் இந்தத் துயரச் சூழ்நிலையில் உதவிகரமாக இருக்கவே விரும்புகிறோம். சிகிச்சைப்பொருட்கள், பிபிஇ கிட்கள், வென்டிலேட்டர்கள், போன்றவற்றை அனுப்ப உள்ளோம். அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனத்தின் தடுப்பூசி நல்ல திறன் படைத்தது. உலகின் பல பகுதிகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்காவில் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படவில்லை. எங்களுக்கு பைசர், மாடர்னா, ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனங்களிடமிருந்து போதிய தடுப்பூசிகள் கிடைக்கின்றன,' என்றார்.

## கோவிஷீல்டு தடுப்பூசி விலையை குறைத்தது சீரம் நிறுவனம்

மாநில அரசுகளுக்கான கோவிஷீல்டு தடுப்பூசியின் விலை ரூ.400ல் இருந்து ரூ.300 ஆக குறைப்பதாக சீரம் நிறுவனம் அறிவித்துள்ளது.

கொரோனா 2வது அலை வேகமாக பரவி வரும் நிலையில், தடுப்பூசி போடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. மக்களுக்கு கோவாக்சின், கோவிஷீல்டு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன. மஹாராஷ்டிரா மாநிலம், புனேவை சேர்ந்த சீரம் நிறுவனம், ஐரோப்பிய நாடான பிரிட்டனை சேர்ந்த 'ஆக்ஸ்போர்டு ' பல்கலையுடன் இணைந்து கோவிஷீல்டு தடுப்பூசியை தயாரித்து வருகிறது. இந்த தடுப்பூசிக்கான விலையை சீரம் நிறுவனம் சில நாட்களுக்கு முன்னர் அதிகரித்தது. அதன்படி, ஒரு டோஸ் கோவிஷீல்டு தடுப்பூசி விலை மத்திய அரசுக்கு ரூ.150க்கும், மாநில அரசுகளுக்கு ரூ.400 ஆகவும், தனியார் மருத்துவமனைகளுக்கு ரூ.600 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு, பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில் சீரம் நிறுவனம் தலைவர் அதார் பூனவாலா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது: கோவிஷீல்டு தடுப்பூசி மாநில அரசுகளுக்கான விலை ரூ.400ல் இருந்து ரூ.300 ஆக குறைக்கப்படுகிறது. இது உடனடியாக அமலுக்கு வருகிறது. இதன் மூலம் கோடிக்கணக்கான பணம் மிச்சப்படுத்தப்படுவதுடன், ஏராளமானோருக்கு தடுப்பூசி கிடைக்க உதவும். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## தமிழக அரசு 1.50 கோடி கோவிட் தடுப்பூசிகளை கொள்முதல் செய்ய உத்தரவு

முதல் கட்டமாக 1.50 கோடி கோவிட் தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்ய தமிழக அரசு அரசாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு:

இந்தியாவிலேயே அனைவருக்கும் கரோனா தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும் என ஏற்கெனவே அறிவித்த முதல் மாநிலம் தமிழ்நாடு. கரோனா நோய்த் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்த தடுப்பூசி போடும் பணிகள் தமிழ்நாடு அரசால் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது 45 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்குச் செலுத்தப்பட்டு வரும் இலவச தடுப்பூசிப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை (27.04.2021), 55.51 லட்சம் நபர்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், வரும் மே 1ம் தேதி முதல் 18 வயதுக்கு மேல் 44 வயது வரை உள்ளவர்களுக்கு ஏற்கெனவே அறிவித்தவாறு, இலவசமாகத் தடுப்பூசி போட்டுக்கொள்ள தமிழ்நாடு முதல்வரின் உத்தரவின் பேரில் தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென, முதற்கட்டமாக 1.50 கோடி தடுப்பூசிகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலமாக கொள்முதல் செய்து வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் புதிய உச்சம்;

## ஒரே நாளில் 1,021 பேருக்கு கொரோனா; 13 பேர் உயிரிழப்பு

புதுச்சேரியில் புதிய உச்சமாக ஒரே நாளில் 1,021 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 13 பேர் உயிரிழந்துள்ளனர். மொத்த பாதிப்பு எண்ணிக்கை 55 ஆயிரத்தைத் தாண்டியது.இது குறித்து, புதுச்சேரி சுகாதாரத் துறைச் செயலாளர் அருண் வெளியிட்டுள்ள தகவல்:

'புதுச்சேரி மாநிலத்தில் 6,502 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில், புதுச்சேரியில் 781 பேருக்கும், காரைக்காலில் 108 பேருக்கும், ஏனாமில் 73 பேருக்கும், மாஹேவில் 59 பேருக்கும் என மொத்தம் 1,021 பேருக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதனால் மாநிலத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 55 ஆயிரத்து 47 ஆக அதிகரித்துள்ளது. இதில், மருத்துவமனைகளில் 1,522 பேர், வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் 6,306 பேர் என மொத்தம் 7,828 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

மேலும், தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த புதுச்சேரி பகுதிகளைச் சேர்ந்த 13 பேர் ஒரே நாளில் உயிரிழந்துள்ளனர். இதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 771 ஆக அதிகரித்துள்ளது.

# கொரோனாவிலிருந்து தப்பிக்க கமல் சொல்லும் வழிமுறைகள்

கொரோனாவுக்கு எதிராக நாமே தீர்வு என நம்பிக்கையோடு போராடினால் நாளை நமதாகும் என, கமல் ஹாசன் தெரிவித்துள்ளார்.மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல் ஹாசன் வெளியிட்ட அறிக்கை:

'கரோனா பெருந்தொற்றுப் பரவலின் இரண்டாவது அலை தீவிரமடைந்து வருகிறது. இந்தத் தீநுண்மத்தால் கடந்த ஆண்டிலிருந்தே நமது வாழ்வு எதிர்பாராத வகையில் மாறிப் போய்விட்டது.

நோய்க் கிருமியிடம் இருந்து தப்பித்து வாழ்வதற்கான வழிமுறைகளை நாம் கடைப்பிடித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

16 வழிமுறைகள்

★ எந்தத் தயக்கமும் அச்சமும் காட்டாமல் தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள்.சுற்றத்தாரைதடுப்பூசி போட்டுக் கொள்ள வலியுறுத்துங்கள். நான் இரண்டு தவணைகளை முடித்துவிட்டேன். எனக்கு அதனால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

★ பொதுவெளி நடமாட்டத்தை முடிந்த மட்டும் குறைத்துக் கொள்ளுங்கள்.

★ அத்தியாவசியத் தேவைகளுக்காக வெளியே சென்று வரும் பொறுப்பை வீட்டில் இருக்கும் இளைஞர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

★ தவிர்க்க முடியாமல், வெளியில் செல்ல நேர்ந்தால் தரமான முகக்கவசம் தவறாது அணிய வேண்டும். தனிமனித இடைவெளியைக் கடைப்பிடிப்பது, முடிந்தவரை கூட்ட நெரிசல் அதிகம் இருக்கும் இடங்களுக்குச் செல்லாமல் இருப்பது ஆகியவற்றை நிச்சயம் பின்பற்ற வேண்டும்.

★ எப்போது வெளியே சென்று வந்தாலும் உடனடியாகக் குளித்து ஆடைகளை மாற்றிக்கொள்வது அவசியம்.

★ கைகளை சோப்பினால் அல்லது சானிடைசரால் அடிக்கடி சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.

★ அடிக்கடி நமது பாரம்பரிய முறைப்படி நீராவி பிடிப்பது, மூச்சுப் பயிற்சி, உடற்பயிற்சி, யோகா ஆகியவற்றை மேற்கொள்வது அவசியம்.

★ ஆரோக்கியமான உணவுப் பழக்கத்திற்கு மாறிக்கொள்வதுடன், மரபுசார் மருத்துவர்கள் பரிந்துரைப்பது போல அன்றாடம் ஒரு ரசம் வைத்துச் சாப்பிடுவதும் நல்லது.

★ இரண்டாவது அலை குழந்தைகளையும் அதிக அளவில் பாதிக்கிறது. வீட்டில் குழந்தைகள், முதியோர் இருந்தால், அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

★ உறுதி செய்யப்பட்ட அதிகாரபூர்வமான செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளுங்கள். வதந்திகளை நம்பாதீர், பரப்பாதீர்.

★ மனநிலையை ஆரோக்கியமாக பாசிட்டிவாக வைத்துக்கொள்வது மிகவும் அவசியம். அதற்கு நல்ல புத்தகங்களை வாசிப்பது, இசை கேட்பது, நண்பர்களோடு போனில் அல்லது இணையத்தில் உரையாடுவது போன்றவை உதவக்கூடும்.

★ உங்களையே நம்பி இருக்கும் பணியாளர்கள், சிறு வணிகர்கள், சிறுசிறு சேவைகளை நல்குபவர்களைக் கைவிடாதீர்கள். உலகமே ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருக்க வேண்டிய தருணம் இது. முடிந்த மட்டும் பிறருக்கு உதவுங்கள்.

★கொரோனா தொற்று பெருநகர்ப்புறங்களில் அதிகமாக இருப்பதற்கு மிக முக்கியமான காரணம் மக்கள்தொகை பெருக்கமும், நெருக்கடியும்தான். சமவாய்ப்புள்ள நகரங்கள், தற்சார்பு கிராமங்கள்தான் உலகமே செல்ல வேண்டிய திசை. உங்கள் தொழிலை, சேவையை, வேலைகளை உங்கள் சொந்த ஊரில் இருந்தே செய்ய முடியும் என்றால் அதற்கான முயற்சிகளை இன்றே மேற்கொள்ளுங்கள்.

★ அரசுகளால் ஓர் எல்லைக்கு மேல் நம்மை க் காக்க முடியாது என்பதே இன்றைய புள்ளிவிவரங்கள் காட்டும் நிதர்சனம். மருத்துவக் கட்டமைப்புக்கு மேலும் மேலும் சுமையைக் கூட்டக் கூடாது. உங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பை உங்களிடமே வைத்துக்கொள்ளுங்கள்.

★இறுதியாக மக்கள் நீதி மய்யம் உறுப்பினர்களுக்கு, 'உத்தரவு கேட்டு உதவிக்குப் போவதில்லை; உதிரத்தில் உண்டே உதவும் குணம்' என்று உங்களைப் பற்றி நான் பெருமையாகக் குறிப்பிடுவதுண்டு. ஊரே முடங்கிக் கிடந்தபோது 'நாமே தீர்வு' என முதன்முதலில் களத்தில் இறங்கியவர்கள் நாம். நமது நற்பணிகளைத் தொய்வில்லாமல் தொடர்வோம்.

புனித ரழமான் மாதத்தை முன்னிட்டு

# விதவை தாய்மார்களுக்கு உலருணவுப் பொதிகள்

மாவத்தகம தினகரன் நிருபர்

புனித ரழமான் மாதத்தை முன்னிட்டு அகில இலங்கை வை. எம் எம். ஏ. பேரவையின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் மிகவும் பின்தங்கிய விதவைத் தாய்மார்களுக்கு 5000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் வேலைத் திட்டத்தின் கண்டி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மிகவும் பின்தங்கிய விதவைத் தாய்மார்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கண்டி கட்டுகஸ்தோட்டை சாஹிரா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அகில இலங்கை வை. எம் எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கண்டி மாவட்ட அமைப்பாளர் பெளஸ் ஏ. காதர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த உலருணவுப் பொதிகள் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 157 அகில இலங்கை வை. எம். எம். ஏ கிளையின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட மிகவும் பின்தங்கிய விதவைத் தாய்மார்களுக்கு வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன.

5000 ரூபா பெறுமதியான இந்த உலருணவுப் பொதிகளுக்குள் அரிசி, பால் மா, சீனி, கிழக்கு, வெங்காயம், பருப்பு , கோதுமை, தேயிலை உள்ளிட்ட 12 வகையிலான உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை இந்த அமைப்பினர் புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு நோன்பு ஆரம்பம் முதல் நாடளாவிய ரீதியில் வறிய ஏழைக் குடும்பங்களுக்கு 28,000 கிலோ அரசிப் பைகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






கொழும்பு, மாளிகாவத்தை பிளேஸ் பகுதியில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அர்ஷாத் நிசாம்தீன் அப்பியாசம் புத்தகங்கள் அன்பளிப்பு செய்வதை படத்தில் காணலாம். வேலைத் திட்டம் இணைப்பாளரும் உறுப்பினரின் செயலாளருமான ரியாஸ் கபூர் அருகில் காணப்படுகிறார்.

## உக்குவல சுகாதார பிரிவில் 40 கொரோனா நோயாளர்கள்; ஒரு பகுதிக்கு பூட்டு

(உக்குவளை தினகரன் நிருபர்)

மாத்தளை, உக்குவல சுகாதார மருத்துவ பிரிவில் பல்லலேக்கும்புற கிராமசேவகர் பிரிவில் 40 கொரோனா தொற்றாளர்கள் இனம்காணப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மேற்படி கிராம சேவகர் பிரிவை தனிமைப்படுத்த சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. மேற்படி கிராமத்தவர்கள் சிலர் திருகோணமலை பிரதேசத்திற்கு சுற்றுலா சென்று வந்ததாகவும் அவர்களில் இருந்தே தொற்றாளர்கள் உருவாகி இருக்கலாம் என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கொரோனா தொற்று மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்த கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவின் பொது சுகாதார பரிசோதகர் ஆய்வாளர் சமிதுஷ்யந்தா தெரிவித்தார்.

## அகில இலங்கை சமாதான நீதவான்களாக நியமனம்



மினுவாங்கொடையைச் சேர்ந்த முஹம்மது லியாப்தீன் முஹம்மது நிஸ்லான் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சர் அலி சப்ரியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்ற நீதிபதி கேசர சமர திவாகர முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். மினுவாங்கொடை நாலந்தா கல்லூரியின் பழைய மாணவரான முஹம்மது நிஸ்லான் மினுவாங்கொடை வலயக்கல்விப் பணிமனையில் ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பாளராக பணியாற்றுகிறார்.

இவர் கல்லொளுவையைச் சேர்ந்த முகம்மது லியாப்தீன் தம்பதியினரின் இளைய புதல்வர் ஆவார்.

### சிவஸ்ரீ சிவராமசிங்க மகேந்திரன் குருக்கள்



கொழும்பு கொச்சிக்கடை ராமநாதன் வீதி வீரமாகாளி அம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சிவராமசிங்க மகேந்திரன் குருக்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி டி. எம். கொடிதுவக்கு முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் சர்வதேச இந்துமத பீட அமைப்பின் சிரேஷ்ட நிர்வாக உறுப்பினர் ஆவார். அளவெட்டி அருணோதய கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். அளவெட்டி சிவராமலிங்க சர்மா சாவித்திரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.

### சிவஸ்ரீ வெங்கட்ரமண ஜெயந்தன் குருக்கள்



கொழும்பு 13 ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ வெங்கட்ரமண ஜெயந்தன் குருக்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி டி. எம். கொடிதுவக்கு முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் சர்வதேச இந்து பீட அமைப்பின் சிரேஷ்ட நிர்வாக உறுப்பினர் ஆவார்.

இரத்மலானை இந்து கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். புங்குடுதீவு வெங்கட்ரமணன் சர்மா கிருஷ்ணலீலா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வர் ஆவார்.

## நகர்வலம்



# சகல சமூகத்தவரும் ஒருங்கிணைந்து முன்னெடுக்கும் மனிதாபிமானப் பணிகள், இன ஐக்கியத்துக்கு வழிகோலும்

(பேருவளை விஷேட நிருபர்)

பிறந்தது முதல் எவருக்கும் தாம், விரும்பிய மதத்தைப் பின்பற்றும் உரிமையுள்ளதாகவும், பௌத்தர்களும் முஸ்லிம்களும் இணைந்து செய்யும் மனிதாபிமானப் பணிகள் நாட்டுக்கு முன்மாதிரியாக அமைவதாகவும் பேராசிரியர் பின்னவல சுமன தேரர் தெரிவித்தார். சீனன் கோட்டை பள்ளிச் சங்கமும் சீனன் கோட்டை பவுண்டேஷன் நிறுவனமும் இணைந்து, இரத்தினபுரி பெல்மதுளையைச் சேர்ந்த பிரபல மாணிக்க வர்த்தகரான திஸ்ஸ ஆனந்தவின் பூரண அனுசரணையில், இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்றை அண்மையில் நடத்தியது. சீனன் கோட்டை அல்பாஸியா ஜும்ஆப் பள்ளிவாசல் வளவில் நடந்த இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சுமன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 'அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஒருவர் பிறந்தது முதல் விரும்பிய மதத்தைப் பின்பற்றும் உரிமை உள்ளது.

அதேபோன்று விரும்பிய மொழி, விருப்பமான உடை, கலாசாரம் என்று சகல உரிமையும் அவருக்கு இருக்கவே செய்கிறது. இவை பெரும்பாலும் பெற்றோர் பரம்பரையில் பின்தொடரும் உரிமைகளாகவே அமைகின்றன. பௌத்த, கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் ஆகிய நான்கு பிரதான மதங்களைச் சேர்ந்தவர்களும் இரண்டறக் கலந்து வாழும் ஊரே பேருவளை.

இங்கு வரலாற்றுக் காலத்தில் இருந்தே இன, மத, உறவு நீடித்துக் கொண்டே வருகிறது. அதன் மகோன்னதக் காட்சியொன்றையே நாம் இப்போதும் இங்கு கண்டு கொண்டிருக்கிறோம். பௌத்த தனவந்தர் ஒருவரின் பூரண அனுசரணையோடு இஸ்லாமிய மத அமைப்புக்கள் இணைந்து முஸ்லிம் பள்ளிவாசல் வளவிலே இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடாத்தும் இந்த மனிதாபிமானப் பணியானது முழுநாட்டுக்குமே ஒரு முன்மாதிரியாகும்.

ஜனநாயக நாடொன்றில் காணப்படும் இத்தகைய உரிமைகளை எவராலும் தடுக்கவும் முடியாது, பறிக்க முடியாது. இவ்வாறு சுதந்திர உரிமையோடு வாழும்போதே அங்கு மனிதாபிமானம் பிறக்கிறது. அடுத்தவருக்குத் தொந்தரவின்றி வாழ்வதே மனிதாபிமானத்தின் அம்சமாகும்.

இத்தகைய இலவச மருத்துவ சிகிச்சை, பொதுநலப்பணிகள் யாவும் மனிதாபிமானத்தின் வெளிப்பாட்டையே உணர்த்துகின்றன. மனித உறுப்புக்களில் இதயம் பிரதானமானதாகும்.அதே போன்றே வெளி உறுப்புகளில் கண்கள் முக்கியத்துவம் பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். வலத்தர மெத்தாராம விகாராதிபதி வலத்தர சுபூதி தேரரின் உரையில், இலவச கண் சிகிச்சை முகாம் ஒரு புண்ணிய தர்மமாகும். சகல மதங்களையும் பின்பற்றும் எங்களுக்கிடையே நிலவும் உறவு, மேலும் நெருக்கமாவதற்கு இது போன்ற புண்ணிய காரியங்கள் வழி வகுக்கின்றன.

அத்துடன் முஸ்லிம் சகோதரர்களால் முன்னெடுக்கப்படும் இம்முயற்சிக்கு பௌத்த தனவந்தர் ஒருவர் பூரண அனுசரணையை வழங்கியிருப்பது உறவுப்பாலம் மேலும் சக்தி பெறுவதற்கான வழிகளைத் திறக்கும். இங்குள்ள பௌத்த, கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் உறவு நீடிக்க வாழ்த்துகிறேன்.

சீனன் கோட்டை பவுண்டேசன் நிறுவனத்தின் பொதுச் செயலாளரும் ஜாமியா நளீமியா கலாசார நிலையத்தின் விரிவுரையாளருமான அஷ்ஷெய்ஹ் அரபாத் கரீம் கூறியதாவது, 'சுமார் 10 வருடங்களுக்கு மேலாக இத்தகைய இலவச சிகிச்சை முகாம்களை நடாத்தி வருகிறோம். தனவந்த பெருமக்கள் பல வழிகளிலும் இதற்கு உதவி செய்து வருகிறார்கள்.

இம்முறை எமது சீனன்கோட்டையுடன் மாணிக்க வர்த்தகத்தில் ஈடுபடும் பெல்மதுளையைச் சேர்ந்த திஸ்ஸ ஆனந்த அனுசரணை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். சீனன்கோட்டை பாஸியா ஜும்ஆப் பள்ளி பிரதம இமாம்களில் ஒருவரான மௌலவி ஹாபில் முபாரகின் கிராஅத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அஷ்ஷெய்ஹ் இஹ்ஸானுத்தீன் (நளிமீ) அறிமுக உரை நிகழ்த்தினார். பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் முக்தார் ஹாஜியார், உப தலைவர் ஹில்மி அபுல் காஸிம், சீனன் கோட்டை பவுண்டேசன் செயலாளர் அஷ் ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் உரை நிகழ்த்தினர்.

முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் எம். எம். எம். அம்ஜத், நகர பிதா மஸாஹிம் முஹம்மத், சீனன் கோட்டை பவுண்டேஷன் தலைவர் பஸால் மர்ஸுக், பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம். எம். எம். ஷிஹாப் ஹாஜியார், ஆகியோர் இதில் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

## வை.எம்.எம்.ஏ ரமழான் மாத இலவச குடிநீர்த் திட்டங்கள் புத்தளத்தில் ஆரம்பித்து வைப்பு



வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இலவசமாக குடிநீர் வழங்கும் திட்டத்தை அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை ஆரம்பித்துள்ளது. புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், புத்தளம் மாவட்டத்தில் முதற் தடவையாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்பிரகாரம், புத்தளம், பாலாவி ஹுஸைனியாபுரம், இல்மியாபுரம், உலுக்கப்பள்ளம், கரம்பை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருப்பத்தைந்து பயனாளிகளுக்கு முதற் கட்டமாக குடிநீர் இணைப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. புத்தளம் உலுக்கப்பள்ளம் பள்ளிவாசல் மண்டபத்தில், புத்தளம் மாவட்ட வை.எம்.எம்.ஏ. பணிப்பாளர் முஜாஹித் நிஸார்,இந்நிகழ்வில் கலந்து கொண்டு இணைப்புக்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இந் நிகழ்வில், பாடசாலை அதிபர் எஸ்.ஆர்.எம்.எம். முஹ்சி, வை.எம்.எம்.ஏ. கற்பிட்டிக் கிளைத் தலைவர் இர்பான் ரிஸ்வான், பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவர்கள்,

அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜின்னாஹ் அஸ்மியா மற்றும் பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவர்கள் உள்ளிட்ட நலன்விரும்பிகள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

கற்பிட்டி பிரதேச செயலக செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகளின், இல்லங்களைப் பார்வையிட வை.எம்.எம்.ஏ. தெரிவுக்குழு, நேரடியாக இவர்களின் வீடுகளுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தது. அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையிலான இக்குழுவே, புத்தளத்திற்கு விஜயம் மேற்கொண்டு, பயனாளிகளை இனங்கண்டமை குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரம் மாவட்டத்தில் முருங்கை மரக்கன்றுகள் பொது மக்களுக்கு விநயோகம்



(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

நாட்டில் பத்து இலட்சம் முருங்கை மரக் கன்றுகளை நடும் வேலைத் திட்டத்தின் கீழ் முருங்கை மரக் கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்கும் வேலைத் திட்டத்தை கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

விவசாய இராஜாங்க அமைச்சர் ஷசிந்திர ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ்,ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வேலைத் திட்டத்தையே கமநல சேவைகள் திணைக்களம் மாவட்ட மட்டத்தில் தற்சமயம் முன்னெடுத்துள்ளது. இதன் முதற்கட்டமாக ஐந்து இலட்சம் முருங்கை மரக் கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்கும் திட்டம் தற்சமயம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அநுராதபுர மாவட்டத்தின் முதலாவது நிகழ்வு அநுராதபுரம் எப்பாவல ஸ்ரீ சுமங்கலாராம விகாரயில் வைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது, அநுராதபுர மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் எம்.எம்.குலதுங்க பொதுமக்களுக்கு முருங்கை மரக் கன்றுகள் வழங்கினார். இதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரது முயற்சியினால் கிடைக்கப்பெற்ற ஆயிரம் கொய்யா மரக் கன்றுகளும் ஆயிரம் தேசிக்காய் கன்றுகளும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தரம் ஆறில் மாணவர்களை சேர்ப்பதில் நிதிமோசடி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

தம்புத்தேகம மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் ஆறுக்கு சேர்க்கப்பட்ட மாணவர்களிடமிருந்து பணம் பெறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க சேவை உப தலைவர் அஷேல விஜேசிங்க தெரிவித்தார். கதிரை மேசை செய்வதற்கு 4000ரூபாவும் வகுப்புக்களை தயாரிப்பதற்கு 4000 ரூபாவும் பாடசாலையை சுத்தம்செய்வதற்கு 300 ரூபாவும் வசதிகட்டணமென 645 ரூபா பணமும் மாணவர்களிட அறவிடப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில், கருத்து தெரிவித்த அவர்.

தம்புத்தேகம மத்திய மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் 2021 தரம் ஆறில் 325 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.இந்த மாணவர்களிடம் வசதிக் கட்டணமாக 645 ரூபாவை மாத்திரம் பெற்றுக்கொள்ளவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றை மீறி, பாடசாலைச் சுற்று நிருபத்திலில்லாத விடயங்களுக்கும் மாணவர்களிடம் நிதி அறவிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு பெறப்பட்ட நிதிகளுக்கு எந்தப் பற்றுச்சீட்டுக்களும் வழங்கப்படவில்லை.

இதுதொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினரைக் கேட்டால், வசதிக் கட்டணமும் பாடசாலை அபிவிருத்திச் சங்க கட்டணமுமே அறவிடப்பட்டதாகத் தெரிவிக்கின்றனர். எனவே இவ்விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும் என்றும் இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் தெரிவித்தார்.

## மாணவர்கள் ஏற்பாடு செய்த சிறுவர் சந்தைக் கண்காட்சி

(திறப்பனை தினகரன் நிருபர்)

கெக்கிராவ கல்வி வலய கனேவல்பொல மு.ம.வித்தியாலயத்தின் தரம் 02 மாணவர்கள், ஏற்பாடு செய்த சிறுவர் சந்தை, பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் தரம் 02 இல் கல்வி கற்கும் 57 மாணவர்களும் பங்குபற்றியிருந்தனர்.வகுப்பாசிரியர்கள் மற்றும் பெற்றோர் உதவியுடன் இந்த சிறுவர் சந்தை அழகுபடுத்தப்பட்டது. பாடசாலை அதிபர் சட்டத்தரணி முகம்மட் நிஸாம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

பிரதம அதிதிகளாக கெக்கிராவ வலய கல்வி பணி மனையின் ஆரம்ப பிரிவு உதவி கல்விப் பணிப்பாளர் கே.பி.அமரவன்ச, ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகர் எம்.எச். சபார்தீன் ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன் கௌரவ அதிதிகளாக கனேவல்பொல மக்கள் வங்கி முகாமையாளர் செவ்வந்தி, மரதங்கடவல அல்அமீன் வித்தியாலய அதிபர் எஸ்.எம்.கௌஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.இங்கு மாணவர்களால் செய்யப்பட்டிருந்த சந்தைக் கடைத் தொகுதியையும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரிகள் பார்வையிட்டனர்.

## தொழிற்சாலையை மூடுமாறு ஆர்ப்பாட்டம்

மாவத்தகம தினகரன் நிருபர்

அதிகளவிலான கொரோனா தொற்று நோயாளிகள் இனங் காணப்பட்டதாகக் கூறப்படும் ஆடைத் தொழிற்சாலையை மூடுமாறு கோரி, பிங்கிரிய விலத்தவ பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிங்கிரிய விலத்தவ பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் அதிகளவிலான கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமையால் அதை மூடுமாறு அப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தத் தொழிற்சாலையை மூடாமலிருப்பது சமூகத்தில் பாரிய ஆபத்தை ஏற்படுத்துமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த தொழிற்சாலையில் கொவிட் 19 கொரோனா தொற்றாளர்கள் 142 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர்வாசிகள் தெரிவிகின்றனர். பிங்கிரியா, ஹெட்டிபோலா, தும்மலசூரிய ஆகிய, பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தங்க நகையை அபகரித்து போதை விற்பனை ஒருவரைக் கைதுசெய்து பொலிஸார் விசாரணை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

ஒன்றரை பவுண் தங்க நெக்லஸை அபகரித்துச் சென்று அதனை ஒரு இலட்சம் ரூபாவிற்கு அடகு வைத்த பணத்தின் மூலம் கொழும்பிலிருந்து ஹெரோயின் கொண்டு வந்து, வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

அநுராதபுரம் புதிய பேருந்து நிலையத்தில் வைத்து கடந்த (24) இவர் கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரம் சாலியபுர தெப்பக்குளம் பகுதியைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரியான இவரிடமிருந்து,ஒரு கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயினை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.சந்தேக நபர், கடந்த 21 சாலியபுர பகுதியில் மற்றுமொரு நபருடன் கை கலப்பில் ஈடுபட்ட போது அந்நபர் அணிந்திருந்த ஒன்றரை பவுன் தங்க மாலையை, அபகரித்து தப்பிச் சென்றிருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மாலையின் உரிமையாளர் அன்றைய தினம் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

கொழும்பிலிருந்து அநுராதபுரத்திற்கு பேருந்தில் ஹெரோயின் போதைப்பொருள் வருவதாக அநுராதபுரம் பிரதேச குற்ற விசாரணை பிரிவினருக்கு தகவல் கிடைத்ததையடுத்தே இந்நபர் கைதானார்.

சந்தேக நபர் இதற்கு முன்னரும் போதை பொருள் வியாபரத்தில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டவர் என்றும் பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

அநுராதபுரம் பிரதேசகுற்ற விசாரணை பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பண்டார விஜேகோன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.



கொழும்பு மாநகர சபை கிருலப்பனையில் நிர்மாணித்த புதிய ஆயுர்வேத வைத்திய நிலையத்தை மேயர் ரோஸி சேனாநாயக அண்மையில் திறந்து வைத்தார்.நகர ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## தனியாகச் சென்ற சிறுமியை காட்டுக்குள் இழுத்து வல்லுறவு

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

பாடசாலை நிகழ்வொன்றில் கலந்து விட்டு தனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்த 14 வயது சிறுமியைத் துஷ்பியோகம் செய்த, 17 வயது சிறுவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரத்மல்கஹவெவ குளக்கட்டில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்த சிறுமியை அச்சுறுத்திய, இச்சிறுவன் காட்டுக்குள் இழுத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இச்சிறுவனை கடந்த (23) அன்று பரசன்கஸ்வெவ பொலிஸார் கைது செய்தனர். பண்டுகாபய புர பரசன்கஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவனே கைது செய்யப்பட்டவராவார். குறித்த சிறுமி தனது நண்பியுடன் பாடசாலை விழா ஒன்றில் கலந்துவிட்டு நண்பியை வீட்டில் விட்டபின்னர், தனியாக ரத்மல்கஹவெவ குளக் கட்டு வழியாக வீடு சென்று கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

## திறப்பனை கமநல சேவையில் பணியாற்றும் பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதி

அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்

திறப்பனை கமநல சேவை மத்திய நிலையத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக திறப்பனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கர்ப்பிணியான இந்தஉத்தியோகத்தர் வைத்திய பரிசோதனைக்கு அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனையின் பின்பு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார வைத்தியர் அலுவலகம் தெரிவித்தது. குறித்த பெண் உத்தியோகத்தரை நெவில் பெர்னாந்து வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அவருடன் நெருக்கமாகவிருந்த 3 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் கமநல சேவை மத்திய நிலையத்தில் கடமையாற்றிய 40 ஊழியர்களும் அவர்களின் வீடுகளில் 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக திறப்பனை பிரதேச சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

# அமானா வங்கி சிறுவர் கணக்குகளுக்கு வருட இறுதி போனஸ்




மாதாந்த நிலையான கட்டளை ஒன்றினூடாக சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை பெற்றோர்கள் ஊக்குவிப்பதை வரவேற்கும் வகையில், 2020 ஆம் ஆண்டில் கணக்கை சீராக பேணியிருந்தமைக்கு அமைவாக, தகைமை பெற்றிருந்த சிறுவர் சேமிப்புக் கணக்குகளுக்கு அமானா வங்கி வருட இறுதி போனஸ் கொடுப்பனவை வழங்கியுள்ளது.

நிலையான கட்டளை போனஸ் ஊக்குவிப்புத் திட்டத்தை கடந்த ஆண்டு அறிமுகம் செய்திருந்த நிலையில், தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கணக்கிலிருந்து ஆகக்குறைந்தது தொடர்ச்சியான பத்து மாதாந்த நிலையான கட்டளைகளினூடாக கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்ட 2000க்கும் அதிகமான சிறுவர் சேமிப்புக் கணக்குதாரர்களுக்கு அவர்களின் நிலையான கட்டளைப் பெறுமதித் தொகைக்கு நிகரான ரூ. 2000 வரையான தொகை போனஸ் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது.

சிறுவர் சேமிப்பு போனஸ் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பில் வங்கியின் வைப்புகள் பிரிவின் தலைமை அதிகாரி அர்ஷாத் ஜமால்தீன் கருத்துத் தெரிவிக்கையில், "பலருக்கு நிதியியல் ரீதியில் பெருமளவு சவால்கள் காணப்பட்ட போதிலும், தமது பிள்ளைகளின் கணக்குக்கான மாதாந்த நிலையான கட்டளைகள் செயலில் இருப்பதை எமது வாடிக்கையாளர்கள் உறுதி செய்திருந்தனர்.

அவ்வாறான பெற்றோருக்கு வருட இறுதி போனஸ் கொடுப்பனவை அவர்களின் பிள்ளைகளுக்காக வழங்கி அவர்களின் முயற்சியை வரவேற்று ஊக்குவிப்பது முக்கியமானது என நாம் கருதுகின்றோம்.

கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட திட்டத்தின் வெற்றிகரத் தன்மையைத் தொடர்ந்து, பெற்றோர்களை தமது பிள்ளைகளுக்காக சேமிப்பதை மேலும் ஊக்குவிக்கும் வகையில், 2021 ஆம் ஆண்டுக்கான நிலையான கட்டளை போனஸ் ஊக்குவிப்புத் திட்டத்துக்கான ஆகக் கூடிய போனஸ் பெறுமதியை 5 மடங்கினால் வங்கி அதிகரித்து ரூ. 10000 ஆக்கியுள்ளது என்பதை அறியத் தருவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன" என்றார்.

ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களுக்கு நிலையான கட்டளையை நிறுவிக் கொள்வதற்கு அல்லது ஏற்கனவே காணப்படும் நிலையான கட்டளைப் பெறுமதியை அதிகரிப்பதற்கு, இலகுவாக வங்கியின் இணைய வலையமைப்பு மூலம் தகவல் அனுப்புவதனூடாக அல்லது bit.ly/AmanaCSO எனும் வலயத்தளத்திலுடாக இணைந்து கொள்ளலாம்.

# "மீள்பயன்பாட்டுக்கான கழிவுப் பொருட்கள் போட்டியை" ஏற்பாடு செய்த செலான் வங்கி

இலங்கையின் முன்னணி சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் டிக்கிரி, வனஜீவராசிகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு அதிகாரசபை உடன் இணைந்து "மீள்பயன்பாட்டுக்கான கழிவுப் பொருட்கள் போட்டி" என்பதை ஏற்பாடு செய்திருந்தது. இதனூடாக மீள்சுழற்சி மற்றும் சூழல் மீது பொறுப்புணர்வு ஆகியவற்றை சிறுவர்கள் மத்தியில் ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

டிஜிட்டல் போட்டியாக இது அமைந்திருந்ததுடன், சிறுவர்களுக்கு சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும், ஆக்கத்திறனை வெளிப்படுத்த வாய்ப்பளிப்பதாகவும் அமைந்திருந்தது.

அதிகளவு நேசிக்கப்படும் சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் வங்கியின் டிக்கிரி, டிஜிட்டல் கட்டமைப்பினூடாக, சிறுவர்களுக்கு அறிவூட்டுவது, ஈடுபாட்டை பேணுவது மற்றும் ஊக்குவிப்பதற்கு எப்போதும் புத்தாக்கமான வழிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. இந்தத் திட்டத்தினூடாக, தமது இளம் வாடிக்கையாளர்களுக்கு தம்மைச் சூழவுள்ள விடயங்களை அவதானித்து, பயின்று மற்றும் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவிப்பதற்கு செலான் எதிர்பார்த்தது.

இந்தப் போட்டியின் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்படும் சிறுவர்களுக்கு, பெறுமதி வாய்ந்த டிக்கிரி அன்பளிப்புப் பொதிகளை வெற்றியீட்டுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

முடக்கநிலை அமுலில் இருந்த காலப்பகுதியில், டிக்கிரி லொக்டவுன் டயரி (Tikiri lockdown diary), டிக்கிரி டிஜிட்டல் அவுருது (Tikiri Digital Avurudu), வெசாக் பத்தும (Vesak Pathuma), டிக்கிரி சாம்ப் (Tikiri Champ), கதை கூறல் மற்றும் பல ஒன்லைன் செயற்பாடுகளினூடாக சிறுவர்கள் மத்தியில் அதிகளவு ஈடுபாட்டை பேணுவதில் செலான் டிக்கிரி முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தது.

இந்த செயற்பாடுகள் அவர்களின் கவனத்தை ஈர்த்திருந்ததுடன், தமது வீடுகளில் அடைபட்டுக் காணப்பட்ட நிலையில் அவர்களை தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் பேணியிருந்தது.

சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு மேலாக, இலங்கையின் எதிர்கால சந்ததியினரை பொறுப்பு வாய்ந்த, கல்வி அறிவுடைய குடிமக்களாக தயார்ப்படுத்துவதிலும் செலான் டிக்கிரி கவனம் செலுத்தி வருகின்றது.

# சுகாதாரத்துறை ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தும் APHNH

"நியாயம், நீதி மற்றும் ஆரோக்கியம் நிறைந்த உலகம்" எனும் இம்முறை உலக சுகாதார தினத்தின் எண்ணக்கருவிற்கு அமைய தனியார் மருத்துவமனைகள் மற்றும் பராமரிப்பு நிலைய சங்கம் (APHNH) பயிற்சி அளித்தல் மற்றும் திறனை மேம்படுத்துவதன் மூலம் சுகாதார ஊழியரை பலப்படுத்துவதற்கான தமது அர்ப்பணிப்பு குறித்து மீண்டும் கவனம் செலுத்தியுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த தனியார் மருத்துவமனைகள் மற்றும் பராமரிப்பு நிலைய சங்கத்தின் தலைவர் கலாநிதி லக்கித் பீரிஸ், "எமது சமூகத்தில் மற்றும் நாட்டிலுள்ள சுகாதார ஊழியர்களினால் நிறைவேற்றப்படும் சேவையை கௌரவிக்கவும், அதனை அடையாளம் காணவும் கொவிட்19 தொற்றுநோய் எம் அனைவருக்கும் அழுத்தம் கொடுத்தது. தற்போது நம் அனைவருக்கும் எதிர்காலத்திலுள்ள சவாலானது கொவிட் தொற்றுநோய் காரணமாக தற்போது பாரிய அழுத்தங்களை எதிர்கொண்டுள்ள தனியார் பிரிவில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களையும் பலப்படுத்துவதற்காவும் மற்றும் இந்த மதிப்பீட்டை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும். உலக சுகாதார தினத்தில் உண்மையிலேயே அதனை அடையவும் மற்றும் நியாயமான மற்றும் ஆரோக்கியமான உலகை கட்டியெழுப்புதற்காக அர்ப்பணிக்க வேண்டுமென்றால் அதன் முதல் கட்ட நடவடிக்கையாக அமைவது தனியார் பிரிவிலுள்ள ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய அறிவு மற்றும் பயிற்சிகளை மேம்படுத்துவதாகும்.

இந்த புதிய யதார்த்தத்திற்கு ஆயத்தமாவதற்கு தனியார் சுகாதார ஊழியர்களை சிறந்த தரத்தில் உறுதிப்படுத்திக் கொண்டு எமது ஊழியர்களுக்காக நாம் முதலீடுகளை செய்ய வேண்டியுள்ளது." என தெரிவித்தார்.



இதற்காக தேசிய பயிற்சி மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA) மற்றும் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபை (PHSRC) போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் APHNH தனியார் சுகாதார சேவைத் துறைக்கு உரிய சுகாதார சேவை ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் திறன் மேம்படுத்தல் தொடர்பில் அந்த நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) அண்மையில் புதுப்பிக்கப்பட்டது.

# பழமையான கட்டடத்தின் 80வருடபூர்த்தியை கொண்டாடுகின்றது Baurs




கொழும்பு கோட்டையில் மேல் சத்தாம் வீதியில் அமைந்துள்ள பழமையான Baurs கட்டடம், கொழும்பில் காணப்படும் உறுதியான மற்றும் நீண்ட காலமாக நிலைத்திருக்கும் கூட்டாண்மை கட்டடங்களில் ஒன்றாக திகழ்கின்றது. இந்தக் கட்டடம் 80 வருடப் பூர்த்தியைக் கொண்டாடியதுடன், அதனைக் குறிக்கும் வகையில் முன் அலுவலகப் பகுதி சுவிஸ் பெறுமதிகளைக் குறிக்கும் வகையில் நவீன வசதிகளைக் கொண்டு மெருகேற்றப்பட்டிருந்தது.

இந்த கண்கவர், புகழ்பெற்ற கட்டமைப்பில் இலங்கையின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரக் குழுமமான A. Baur & Company Ltd இன் தலைமையகம் அமைந்துள்ளது. 1897 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டவரான அல்பிரட் பவர் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது முதல், சுவிஸ் நாட்டின் பாரம்பரியத்துக்கமைய நிறுவனத்தின் கொள்கைகள், பெறுமதிக் கட்டமைப்புகள் மற்றும் கலாசாரம் போன்றன ஆழமாக ஊடுருவியுள்ளன.

1941 ஆம் ஆண்டு கொழும்பில் நிறுவப்பட்ட Baurs கட்டடம், கொழும்பில் முதன் முறையாக நிறுவப்பட்ட தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கட்டடமாக அமைந்துள்ளது. கடற்படை தலைமையக வளாகத்தினுள் பாதுகாப்பாக அமைந்துள்ளது. இதுவரையில் பத்து முகாமைத்துவ பணிப்பாளர்கள் இதுவரை கடமையாற்றியுள்ளதுடன், இதில் ஒன்பது பேர் சுவிஸ் நாட்டவர்களாவர், அண்மையில் நியமனம் பெற்ற புகழ்பெற்ற இலங்கையின் வியாபார பிரமுகரான லக்ஷ்மன் நியன்கொட தற்போது நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற தவிசாளராக பணியாற்றுகின்றார்.

லக்ஷ்மன் கருத்துத் தெரிவிக்கையில், "Baurs பயணத்தில் இந்த ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. கொழும்பில் அமைந்துள்ள எமது கட்டடம் 80 வருட பூர்த்தியைக் கொண்டாடுகின்றது. எமது சகல திட்டங்கள், பிரார்த்தனைகள் மற்றும் அதீத ஈடுபாடுகளை இந்தக் கட்டடத்தின் சுவர்கள் நன்கறியும். இந்த கட்டடத்துடன் நாம் அதிகளவு உணர்வுபூர்வமான இணைப்பையும் கொண்டுள்ளோம். " என்றார்.

# வட்டியில்லா, கட்டணமில்லா முதலீட்டுத் திட்டத்தை வழங்குகிறது கொமர்ஷல் வங்கி

கொழும்பு சிட்டி சென்டர் (Colombo City Centre CCC) ரெசிடென்ஸஸில் தொடர்மாடி குடியிருப்புகளைக் கொள்வனவு செய்வோர், வட்டியில்லாததும் கட்டணமில்லாததுமான முதலீட்டுத் திட்டத்தை அனுபவிக்கும் விசேட வாய்ப்பு எட்டியுள்ளது. கொமர்ஷல் வங்கிக்கும் CCC Residencesஇன் உருவாக்குநர்களான அபான்ஸ் குழுமத்துக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட பங்காண்மையைத் தொடர்ந்தே, இந்த வட்டியை உருவாக்குநர் ஏற்கும் இத்திட்டம் (Developer Interest Bearer Scheme) உருவாக்கப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் தொடா்மனைக் குடியிருப்பின் பெறுமதியின் 80 சதவீதம் வரையான தொகையை, வீட்டுக் கடனாக வங்கியிலிருந்து பெறும் வாய்ப்பு இந்தப் பங்காண்மையின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுவதோடு, கொள்வனவு செய்வோரின் சார்பில் 24 மாதங்கள் வரை, அதற்கான மாதாந்த வட்டியை, கொழும்பு சிட்டி சென்டர் செலுத்தும். மேலதிகச் சலுகையாக, வாடிக்கையாளரின் சார்பில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கான முகாமைத்துவக் கட்டணங்களையும் கொழும்பு சிட்டி சென்டா் செலுத்தும். இதனால், தொடர்மனைக் குடியிருப்பைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளா்கள் அதன் பெறுமதியின் வெறுமனே 20 சதவீதத்தை மாத்திரம் ஆரம்பத்தில் செலுத்த வேண்டியிருப்பதோடு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு எக்கொடுப்பனவையும் மேற்கொள்ள வேண்டிய தேவையிருக்காது.

இந்த விசேட திட்டத்தின் கீழான வீட்டுக்கடன், 20 ஆண்டுகள் வரை நீடிக்கும் வகையில் வழங்கப்படுமென வங்கி தெரிவித்தது. நிலவும் சந்தை வட்டி வீதத்தின் அடிப்படையில், அதிக பட்ச வட்டி எல்லை ஒன்றுக்கு ஏற்ப 24 மாதங்கள் வரை மாதாந்த வட்டியை கொழும்பு சிட்டி சென்டர் செலுத்தும்.

இந்தப் பங்காண்மை தொடர்பில் கருத்துத் தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி சனத் மனதுங்க, "தொடர்மனைக் குடியிருப்புகளைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக, நாட்டிலுள்ள முன்னணி கட்டட உருவாக்க நிறுவனங்களுக்கு உதவுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

# தேசிய பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தும் SOLEX

இலங்கையில் நீர் பம்புகளுக்கான பிரபல நாமமான SOLEX உள்நாட்டு, விவசாய பம்புகள் மற்றும் தொழில்துறைக்கான வரிசைகளை உள்நாட்டில் 100 க்கும் மேற்பட்ட மாதிரிகளை வெவ்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தயாரிப்பதன் மூலம், உள்நாட்டுச் சந்தையில் அதன் ஆதிக்கத்தைச் செலுத்தி முன்னணியில் திகழ்ந்து வருகின்றது. கடந்த சில தசாப்தங்களாக தயாரிப்புகளில் அதன் உயர்ந்த தரம் காரணமாக இந்நிறுவனம் இலங்கை சந்தையில் தனது நிலையை உறுதியாக்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக தொழில்துறை வாகனங்களான Vacuum Jetters, Arial Platforms, Water Bowsers, Garbage Compactors, Gully Bowsers, Dehumidifier Machines, Fire Pumps மற்றும் பிற தயாரிப்புகள் உள்ளிட்ட பலவகையான தொழில்துறை தயாரிப்புகளையும் SOLEX வழங்குகிறது.

சமூகப் பொறுப்பை விரிவாக்கும் நோக்குடன் கூடிய ஒரு உண்மையான உள்நாட்டு நிறுவனமான Solex, பல சமூக பொறுப்புணர்வு திட்டங்களில் முதலீடு செய்துள்ளதுடன், அவை வெவ்வேறு பிரிவுகளுக்கும் பயனளித்துள்ளன. இவற்றில் ஒரு சிலவற்றைக் குறிப்பிடுவதாயின் Solex, அனைத்து மதங்களையும் சேர்ந்த புனித ஸ்தலங்களுக்கு நீர் முகாமைத்துவ அமைப்புகளை வழங்கியுள்ளதன் மூலமும், பின்னவலை யானைகள் சரணாலயத்தில் யானைகள் குளிப்பதற்கான அமைப்பை நிறுவுவதன் மூலமும், தினசரி பயணிகளுக்காக பல்வேறு இடங்களில் குளிரூட்டிய குடிநீர் அமைப்புகளை உருவாக்கியதன் மூலமும் சமூகத்திற்கு தனது தாராள பங்களிப்புகளை விரிவுபடுத்தியுள்ளது.

பாராளுமன்ற பொலிஸின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சரத் குமார, மிரிஹான பொலிஸின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நுவன் அசங்க மற்றும் தலங்கம பொலிஸின் பொறுப்பதிகாரி நலிந்த தில்ருக் ஆகியோர் இவற்றைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட சில அதிகாரிகளில் சிலர் ஆவர்.

களனிய பொலிஸின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சுதத் வல்பொல களனி விகாரை வளாகத்தில் இடம்பெற்ற தடுப்புகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார்.



Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**எனது இலக்கம்** - BD/ACQ/RDM/2018/21
**காணி அமைச்சின் இலக்கம்** - 4/3/9/2015/IR/102

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி கையகப்படுத்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தங்களுக்கமைய காணி கையகப்படுத்தல் சட்டம் (460 வது அத்தியாயம்)

### மொரான நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக காணி கையகப்படுத்தல்

2021.03.10 திகதியிலான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 2021.02.22 திகதியிடப்பட்ட உரிமைக்கோரல் பரிசீலனை திகதியானது 2021.05.28 ம் திகதி என திருத்தப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 222236 மற்றும் 2021/04/07 திகதியிலான வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**டி.எம்.எல்.எச். திசானாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**ரிதீமாலியந்த.**
**2021.04. மாதம் 22ம் திகதி**
**ரிதீமாலியந்த பிரதேச செயலகத்தில்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை – களுபோவில தெஹிவளை**

## சிற்றுண்டிச்சாலை சேவையை நடாத்திச் செல்லல் – 2021/2022

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2021/2022ஆம் வருட காலத்தில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கு இதன் பொருட்டு அனுபவம் வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) இது தொடர்பில் ஆர்வம் காட்டுவோர் விலைமனு ஆவணக் கட்டணமாக 2,000.00 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையும் சமர்ப்பிப்பதன் பேரில் 2021-04-29ஆம் திகதி முதல் 2021-05-12ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இந்த வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(02) விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை - 2021/ 2022ஆம் வருட காலத்தில் சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்குதல்'' எனக் குறிப்பிட்டு 2021-05-13 திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

(3) விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் அவ்வேளையில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

(5) விலைமனு ஆவணங்களை இலவசமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரின் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

(6) அரசாங்க ஒப்பந்தங்கள், நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு விலைமனு விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

(7) குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

(8) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரைத் தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி: 0112763038)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில,**
**தெஹிவளை.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல்மாகாணம்)

## ஏ.பீ.சீ.கல் (கலப்பு கல்) வழங்குதல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ்க்காணும் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களுக்கு தேவையான ஏபீசிகல் (கலப்புக்கல்) மற்றும் பொரளு மண் வழங்குவதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன..

**கேள்வி சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | ABC கலப்புகல் $m^3$ | பொரளு மண் $m^3$ | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | | கேள்விகள் திறத்தல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக ரு | வங்கி/காப்புறுதி பிணை மூலம் ரு. | |
| PRDA/WP/PRO/2021/23<br>கேள்வி விநியோகித்தல்<br>2021.04.29 - 2021.05.07<br>மு.ப.9.00 முதல் பி.ப.2.45 வரை | கொழும்பு மாவட்டம்<br>கொழும்பு நி.பொ.ப<br>மொறட்டுவ நி.பொ.ப<br>அவிசாவளை நி.பொ.ப | 2000<br>4000<br>2000 | - | 2000.00 + VAT | 119,250.00 | 238,500.00 | 2021.05.10 பி.ப.2.30 |
| PRDA/WP/PRO/2021/24<br>கேள்வி விநியோகித்தல்<br>2021.04.29 - 2021.05.07<br>மு.ப.9.00 முதல் பி.ப.2.45 வரை | களுத்துறை மாவட்டம்<br>களுத்துறை நி.பொ.ப<br>அகலவத்த நி.பொ.ப<br>ஹொரண நி.பொ.ப | 2000<br>2000<br>3000 | - | 2000.00 + VAT | 104,500.00 | 209,000.00 | |
| PRDA/WP/PRO/2021/25<br>கேள்வி விநியோகித்தல்<br>2021.04.29 - 2021.05.07<br>மு.ப.9.00 முதல் பி.ப.2.45 வரை | கம்பஹா மாவட்டம்<br>நிட்டம்புவ நி.பொ.ப<br>நீர்கொழும்பு நி.பொ.ப<br>உடுகம்பொல நி.பொ.ப<br>கிரிந்திவெல நி.பொ.ப | 3000<br>4000<br>3000<br>3000 | - | 2000.00 + VAT | 193,750.00 | 387,500.00 | |
| PRDA/WP/PRO/2021/16R<br>கேள்வி விநியோகித்தல்<br>2021.04.29 - 2021.05.10<br>மு.ப.9.00 முதல் பி.ப.2.45 வரை | கம்புராவல களுகல பெலவத்த வீதி (அகலவத்த நி.பொ.பணியகம்) மற்றும் தளுகம - வேவல்தூவ வீதி (கிரிந்திவெல நி.பொ. பணியகம்) | 5100 | 300 | 2000.00 + VAT | 79,500.00 | 159,000.00 | 2021.05.11 பி.ப.2.30 |

02. மேற்படி கேள்விப் படிவக் கட்டணத்தை செலுத்துவதன் பேரில் (அதிகார சபையில் பதிவுசெய்துள்ள வழங்குநர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் அவசியமில்லை) இவ் அதிகார சபையின் பெறுகைப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கிப் பிணையின் மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூ. 5 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரால் குறித்த 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் திறத்தல் மேற்கண்டவாறு இவ் அலுவலகத்தில் இடம்பெறும் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல. 59, சென்.செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12**
**தெ.பே. 011-5676903**

Repeat Your Ad For Better Offers

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சு

**மேல் மாகாணம்**

## நிறைவேற்று பொறியியலாளர் பணிமனைக்கான CSS 1 / CRS 1 இமல்சன் வழங்குதல்

இவ் அதிகாரசபையின் நிறைவேற்ற பொறியியலாளர் பணிமனைக்குத் தேவையான CSS 1 / CRS 1 இமல்சன் கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இப் பொருட்கள் எதிர்வரும் 06 மாத காலத்திற்கு தேவைப்படும் விதத்தில் வழங்குவதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

கீழ்க்காணும் கேள்விச் சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் வேறுவேறாக படிவத் தொகுதியை கொள்வனவு செய்தல் வேண்டும்.

| கேள்வி இலக்கம் | நிறைவேற்று பொறியியலாளர் பணிமனை | வழங்கல் அளவு (லீட்டர்) | | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்ந்தது) ரூ. | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | |
|---|---|---|---|---|---|---|
| | | CSS 1 | CRS 1 | | காசாக | வங்கிப் பிணை |
| PRDA/WP/PRO/2021/26 | நி.பொ.ப. நீர்கொழும்பு<br>நி.பொ.ப. உடுகம்பொல<br>நி.பொ.ப. கிரிந்திவல<br>நி.பொ.ப. நிட்டம்புவ | 17,000<br>81,400<br>5,000<br>5,000 | 19,000<br>5,000<br>5,000<br>5,000 | 2,300.00 | 52,000.00 | 104,000.00 |
| PRDA/WP/PRO/2021/27 | நி.பொ.ப. கொழும்பு<br>நி.பொ.ப. அவிசாவளை<br>நி.பொ.ப. மொறட்டுவ | 10,000<br>5,000<br>5,000 | 20,000<br>8,000<br>20,000 | 2,300.00 | 25,500.00 | 51,000.00 |
| PRDA/WP/PRO/2021/28 | நி.பொ.ப. களுத்துறை<br>நி.பொ.ப. ஹொரண<br>நி.பொ.ப. அகலவத்த | 30,000<br>5,000<br>10,000 | 15,000<br>5,000<br>25,000 | 2,300.00 | 33,000.00 | 66,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2021.04.29 முதல் 2021.05.07 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 2.45 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணத்திற்கு உட்படடு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூ. 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரால் குறித்த 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2021.05.10 மு.ப. 10.30 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும்.

05. அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12**
**தெ.பே. 011-5676903**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல்மாகாணம்)

## ரெடிமிக்ஸ் கொங்கிறீட் (G-30) Slump 74±5mm வழங்குதல் நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு

### நீர்கொழும்பு/உடுகம்பொல/ஹோமாகம பி.செ.பிரிவு

மேற்படி நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு/பி.செயலகப் பிரிவுகளில் வீதிகளுக்கான ரெடிமிக்ஸ் கொங்கிறீட் வழங்குதல் சார்பாக கேள்வி கோரல் இவ் அதிகார சபையினால் இடம்பெறுவதுடன் அதற்காக ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்வி சுருக்கம்**

| கேள்வி இலக்கம் PRDA/WP/ PRO/2021/15 R | விபரம் | அளவு $m^3$ | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வெட்வரி இன்றி) ரூ. | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக ரு | வங்கி/காப்புறுதி பிணை மூலம் ரு. |
| நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு நீர்கொழும்பு | ரெடிமிக்ஸ் கொங்கிறீட் (G-30) வழங்குதல் (வீதிப் பட்டியல் கேள்வி ஆவணத்துடன் தரப்பட்டுள்ளது) | 2640 $M^3$ | 3000.00 | 262,000.00 | 524,000.00 |
| நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு உடுகம்பொல | ரெடிமிக்ஸ் கொங்கிறீட் (G-30) வழங்குதல் (வீதிப் பட்டியல் கேள்வி ஆவணத்துடன் தரப்பட்டுள்ளது) | 115 $M^3$ | | | |
| ஹோமாகம பி.செ.பிரிவு | ரெடிமிக்ஸ் கொங்கிறீட் (G-30) வழங்குதல் | 210 $M^3$ | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2021.04.29 முதல் 2021.05.11 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 2.45 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணத்திற்கு உட்பட்டு (இவ் அதிகார சபையின் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூ. 5 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரால் குறித்த 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2021.05.12 மு.ப. 10.30 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12**
**தெ.பே. 011-5676903**

## பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகராலயம் கொழும்பு

### கொழும்பிலிருந்து பாகிஸ்தானுக்கு வருகை தரும் குழுவிற்கான பிரயாண பொருட்களுக்கான மற்றும் விமானப்பயண சீட்டுக்களுக்கான ஏற்பாடுகள்

கொழும்பிலிருந்து பாகிஸ்தானுக்கு வருகை தரும் குழுவிற்கான பிரயாண பொருட்களுக்கான /விமான பயணச்சீட்டுக்களுக்கான ஏற்பாடுகள் ஆகியவற்றிற்காக மிகச்சிறந்த விமான பயண கம்பனிகளிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகராலயம் கோருகிறது.

எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் விபரக்குறிப்புக்கள் மற்றும் ஏனைய விபரங்களை அடக்கியுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை உயர்ஸ்தானியகராலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல்கள்/ விலைமனுக்கள் 2021 மே 28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக உயர்ஸ்தானிகராலயத்தை வந்தடைதல் வேண்டும். விலைமனுக்கள் அதே நாளில் மு.ப. 11.30 மணிக்கு விலைமனுதாரர்கள்/ அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். பாகிஸ்தான் பெறுகை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சட்டங்களின் பிரகாரம் பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகராலயமானது முழுவதுமாக அல்லது பகுதியாக எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும்/ விலைமனுக்களையும ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

பின்வரும் இணையதளத்தில் இந்த விளம்பரமானது பிரசுரிக்கப்பட்டுள்ளது.

a) www.ppra.org.pk
b) www.pakistanhc.lk

**ஸ்தானிகராலய தலைவர்**
**பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின்**
**உயர்ஸ்தானிகராலயம்,**
**இல.: 42, புல்லர்ஸ் ஒழுங்கை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 011-2055681-82**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**நீர்கொழும்பு வலயக் கல்வி அலுவலகம் - கட்டுநாயக்க (2021)**

நீர்கொழும்பு கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளுக்காக பின்வரும் உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக திறந்த போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

P1 கணனி, புகைப்படப் பிரதி இயந்திரங்கள், மல்டிமீடியா இயந்திரங்கள்

P2 அலுவலக உபகரணங்கள்

❖ நூலக கபர்ட் மற்றும் அலுமாரிகள் (உருக்கு)

❖ சிறுவர் கதிரைகள் மற்றும் மேசைகள், பாலர் மேசைகள் / கதிரைகள், ஆசிரியர் மேசைகள், ஆசிரியர் கதிரைகள்

ஆர்வமுள்ள வழங்குநர்கள் இது தொடர்பான மேலதிக விபரங்களை கட்டுநாயக்கவில் அமைந்துள்ள நீர்கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து (நிர்வாகம்) (தொலைபேசி: 0112265639) பெற்றுக்கொள்ளலாம். இதற்கிடையில் இயைபுடைய வழங்குநரினால் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைக்கோரலுக்கான தகவல்கள் அடங்கிய முழுமையான பெறுகை விண்ணப்பத் தொகுதியொன்றை 2021-04-29ஆம் திகதி முதல் 2021-05-21ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை ஒரு தொகுதிக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 750.00 ரூபா கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் 5000.00 கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இந்தக் கட்டணத்தை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.

❖ இயைபுடைய விலைமனுக்களை 2021-05-24ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் வலயக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), நீர்கொழும்பு வலயக் கல்வி அலுவலகம், கட்டுநாயக்க எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து இயைபுடைய கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த உடனடுத்து 2021-05-24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம் என்பதுடன் அவர்கள் முன்னிலையில் அவைகள் திறக்கப்படும்.

❖ சமர்ப்பிக்கப்படும் அனைத்து விலைமனுக்களும் விலைக்கோரல் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் முதல் வருடத்தின் மிகுதியான காலம் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (2021-12-31)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்கொழும்பு வலயக் கல்வி அலுவலகம்,**
**கட்டுநாயக்க.**

## பெறுகை அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-115

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் ENVELOPE MAKING இயந்திரத்தை வழங்குதல், பொருத்துதல், செயற்படுத்துதல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றிற்கு வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது இலங்கையில் அதிகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| Item No. | Description | Quantity |
|---|---|---|
| 01. | Supply, Installation, Testing, Commissioning & 01 (One) Maintenance of Envelope Making Machine (Fully Automated / Semi Automated) | 01 |

தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறை.

வழங்க வேண்டிய இடம் - அரசாங்க அச்சுத் திணைக்களம்.
இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-08.

2. இதன் பொருட்டு ஆர்வம் காட்டும் தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்கள் மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு 2021-05-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-08 எனும் இடத்திலுள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெறும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். இங்கு எமது தேவைப்பாடுகள் தொடர்பில் சிறு விளங்கப்படுத்தல் மேற்கொள்ளவுள்ளதுடன் இதற்கான உங்கள் பிரேரணைகளையும் சமர்ப்பிக்கலாம்.

3. மேற்படி 2ஆம் இலக்கத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய விலைமனு ஆவணங்களை 2021-04-29ஆம் திகதி முதல் 2021-05-20ஆம் திகதி வரை மேற்படி முகவரியிலுள்ள வெளிநாட்டு வழங்கல் பிரிவில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 – பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும். சகல விலைக்கோரலுக்கும் மீளளிக்கப்படாத 4,000.00 ரூபா கட்டணத்துடன் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. 2021-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி முகவரியிலுள்ள கேட்போர் கூடத்தில் இரண்டாவது விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அங்கு இயந்திரத்தின் விபரக்குறிப்பு மற்றும் விலைக்கோரல் ஆவணங்கள் தொடர்பில் மென்மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். இங்கு இனங்காணப்பட்ட விடயங்கள் பெறுகை ஆவணங்களின் இணைப்பாக உங்களுக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

5. 2021-05-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மேற்படி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறுத்தப்படும் என்பதுடன் அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

6. இது தொடர்பிலான மேலதிக தகவல்களை உதவி நிதியாளர் - வழங்கல் அவர்களை 011-2694898 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளலாம்.

**கங்கானி லியனகே,**
**தலைவர், பெறுகைக் குழு.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி/ தொலைநகல்: 011-2694898**
**இணையதளம்:** www.documents.gov.lk
www.npa.gov.lk

2021-04-23

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை
### கொழும்பு - 10

### அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு Biochemistry Lab இற்கு பின்வரும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | Item | Qty |
|---|---|---|
| 1 | Laboratory Benches with water proof tops, with lockable wheels | 20 |
| 2 | Work Tables with water proof tops, with lockable wheels | 12 |
| 3 | Cupboards with lockable wheels, insertable under benches | 20 |
| 4 | Reception tables with water proof tops, with lockable wheels | 4 |
| 5 | Corner curved reception table | 1 |
| 6 | Reception table | 1 |

மேற்படி வழங்கல்கலுக்காக தகைமை வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத 3,000.00 ரூபா வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2021-05-20ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைக்கோரல் நிபந்தனைகள் சகிதமான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2021-05-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு 10.**

## பொது அறிவித்தல்

இக்கம்பனியின் இயக்கங்களுக்கான முகாமையாளராக சேவையாற்றியவரும் 197724510039 என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளரும் பிலியந்தல, சித்தமுல்ல, 4 ஆம் ஒழுங்கை, 27ஏ என்ற முகவரியில் வசிப்பவருமாகிய திரு. ஜி.கே.ஜி. உத்திக இரோஷ் என்பவர் இதுமுதற்கொண்டு இக்கம்பனியின் ஊழியரொருவர் இல்லை என பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது. மேலே பெயர் குறிப்பிட்டுள்ளவருடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையும் இக்கம்பனியின் சார்பில் மேற்கொள்ள வேண்டாமென்றும் அவருடன் எந்தவொரு நபர்/ கம்பனி ஏதாவதொரு செயலில் ஈடுபடின் அது அவருடைய (ஆண்/பெண்) தனிவிருப்பிலும் பொறுப்பிலும் இருக்கும். 2021 ஏப்ரல் 22 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் மேலே பெயர் குறிப்பிட்டுள்ளவரின் அதிகாரமற்றதும் சட்டரீதியிலுமற்ற செயற்பாடுகளுக்கு கம்பனியானது எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாது.

**Et Lab Manufacturing (PVT) LTD.**

## காணி சுவீகரித்தல் சட்டம்
### (460ஆவது அத்தியாயம்)
### 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம் : DSA/PALU/LND/LOTEL/54

**காணி அமைச்சின் தொடர்பு இல.** 4-3/9/2018/MV/149

காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அரசிற்கு சுவீகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் காணிப் பிரிவுகளுக்காக அச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் மற்றும் உரித்துரிமை மற்றும் நஷ்ட ஈட்டுப் பரிசீலனை 2021 மே 05ம், 06ம் திகதிகளில் மு.ப. 10.00 இற்கு பளுகஸ்வெவ பிரதேச செயலகத்தில் என்னால் நடத்தப்படும் என பொதுமக்களுக்கு அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இக் காணிப்பிரிவுகள் விடயத்தில் தொடர்புகள் உள்ளவர்கள் அப்பரிசீலனைக்கு சமுகமளித்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு இல. 2221/51 மற்றும் 2021 ஏப்ரல் 01ம் திகதி வியாழக்கிழமை அரச அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**மாகாணம்** - வட மத்திய
**மாவட்டம்** - அநுராதபுரம்,
**பிரதேச செயலகப் பிரிவு** - பளுகஸ்வெவ,
**கிராம அலுவலர் பிரிவு** - இல. 598, மடவளை.
**துண்டு விபரம்** - அ.க.பி. 1593 மேலதிக இல. 03, பத்திர இல. 03 இல் துண்டு இல. 183 முதல் 226 வரை (துண்டு 31) க.ச. 110715, வலய இல. 03, பத்திர இல. 02ல் துண்டு இல. 29 முதல் 41 வரை (துண்டு 08) அ.க.பி. 1592, மேலதிக இல. 02, பத்திர இல. 02 ல் வலய இல. 16 (துண்டு 01) அ.க.பி. 1616, மேலதிக இல. 15, பத்திர இல. 15 இல் துண்டு இல. 431 முதல் 459 வரை (துண்டுகள் 20)

**பிரதேச செயலாளர்,**
**பளுகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவு.**

**2021.04.27ம் திகதி**
**பளுகஸ்வெவ பிரதேச செயலகத்தில்**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

**தேசிய பாதுகாப்பு மற்றும்**
**அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு**

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

## பெறுகை அறிவித்தல்

### பாதுகாப்பு சேவைகளை வழங்கல் - 2021/2022

01) 2021/2022 ஆம் ஆண்டுகளுக்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக தகுதியுள்ள சேவை வழங்குனர்களை விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| விலைமனு இலக்கம் | விளக்கம் | விலைமனு உத்தரவாதம் |
|---|---|---|
| NBRO/AD/2021/160(III) | பாதுகாப்பு சேவைகளை வழங்கல் | 15,000 ரூபா |

(02) 2021 மே 25 ஆம் திகதி வரையும் www.nbro.gov.lk என்ற தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து விலைமனு ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம்.

(03) விலைமனுக்களை மூடும் தினமானது 2021 மே 25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவருடைய அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி/ பிரதிநிதிகள் பங்குபெற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(04) மேலதிக தகவலை 011-2588946 நீடிப்பு 613 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் நிர்வாகத்திற்கான பதில் கடமையாற்றும் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு-05.**

## கேள்வி அழைப்பு

**நிதி அமைச்சு**

### நிதி அமைச்சில் சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்வதற்கான கேள்வி கோரல்

01. கொழும்பு-01, லோட்டஸ் வீதியில் அமைந்துள்ள தரைமாடி உட்பட 05 மாடிகளைக் கொண்ட நிதி அமைச்சு பழைய கட்டிடம் மற்றும் தரைமாடி மற்றும் மேல் தரைமாடி உட்பட 06 மாடிகள் கொண்ட புதிய நிதி அமைச்சு கட்டிடத்திற்கு சுத்திகரிப்புச் சேவையை 2021/ 2022 ஆம் வருடங்களில் ஒரு வருட கால எல்லைக்குள் (2021.06.13 முதல் 2022.06.12 வரை) நடத்திச் செல்வதற்காக தேசிய போட்டி கொள்வனவு செய்யும் முறையின் கீழ் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்த கேள்விதாரர்களிடமிருந்து மட்டும் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் 2021.05.19 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

இதற்காக உங்களால் வழங்க வேண்டிய அடிப்படைத் தகைமைகள் கீழ்க்காணுமாறு.

(i) வியாபார பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல்

(ii) அரசதுறை/ கூட்டுத்தாபன துறையில் சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் பற்றிய குறைந்த பட்சம் 03 வருட அனுபவம். (குறைந்தபட்சம் ஒரு நிறுவனத்தில் 30 ஊழியர்களை ஈடுபடுத்தியிருத்தல் வேண்டும்).

(iii) குறைந்த பட்சம் 100 தொழிலாளர்களுடன் கூடிய தொழிலாளர் குழாம் இருப்பதுடன் அவர்களின் கடந்த 12 மாத காலத்திற்குள் அவர்கள் சார்பாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்புத் தொகை வைக்கப்பட்டுள்ளதாக உறுதி செய்யும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (கவனிக்கவும்:- விண்ணப்பத்துடன் மேற்படி தகைமையைப் பூர்த்தி செய்துள்ளமைக்கான சான்றுகள் ஆவணங்கள்/ சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்)

02. கேள்வி கோரல் ஆவணங்களில் அறிவுரைகள் வழங்கப்பட்டிருப்பது போலவே கேள்விப் பிணைமுறை மற்றும் ஏனைய ஆவணங்களை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இதற்காக மீளளிக்கப்படாத ரூ. 2,500.00 தொகையை கணக்காளர் (கொடுப்பனவுகள்) இடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின் 2021.04.29 முதல் 2021.05.18 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்படி முகவரியில் அமைந்துள்ள நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தரைமாடியில் அமைந்துள்ள கணக்குப் பிரிவில் கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

அவ்வாறே உங்களுக்கு கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்து பார்ப்பதற்கு தேவையெனில் அதற்காகவும் மேற்படி நாட்களில் அதனை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்விதாரர் தமது கேள்வியுடன் ரூ. 300,000.00 இலங்கையில் செயற்பாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை/ வங்கிப் பிணை அல்லது அப் பெறுமதிக்கு மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகையை நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பெயரில் வைப்புச் செய்வதற்காக அமைச்சின் கணக்குப்பிரிவின் காசாளர் கருமபீடத்திற்கு அத்தொகையைச் செலுத்தி பற்றுச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கேள்விப் பிணையை கேள்வி திறக்கப்படும் நாள் முதல் நூற்றி இருபது (120) லீப் நாட்கள் வரை (அதாவது 2021.09.15 வரை) செல்லுபடியாதல் வேண்டும்.

05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்களை கேள்வி ஏற்றுக்கொள்ளும் குறித்த நேரம் முடிவடைவதற்கு முன் கிடைக்குமாறு, நிதி அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தரை மாடியில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது 2021.05.19 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு பிரதம கணக்காளர், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் நிதி அமைச்சில் சுத்திகரிக்கும் சேவை வழங்கலுக்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

06. கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் 2021.05.13 மு.ப. 10.30 இற்கு நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கணக்குப் பிரிவில் இடம்பெறும்.

07. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன், அதாவது. 2021.05.19 பி.ப. 2.00 இற்கு நிதி அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தரைமாடியின் கணக்குப் பிரிவில் நடைபெறவிருக்கும் கேள்வி திறத்தல் நிகழ்வுக்கு கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு மட்டும் சமுகமளிக்கலாம்.

08. கேள்வி கோரல் ஆவணங்கள் பற்றி மேலும் விபரங்கள் தேவையெனில் கணக்காளர் (வழங்கல்கள்) 011-2484538, 011-2484600 (Ext.- 1430/ 4109) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பாரிய அளவிலான பெறுகைக் குழு,**
**நிதி அமைச்சு,**
**கொழும்பு-01.**

# பெறுகை அறிவித்தல்

## தொலைபேசி பாவனையை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்

### டி சொய்சா மகளிர் மருத்துவமனை

டி சொய்சா மகளிர் மருத்துவமனை தொலைபேசி பலகையை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து 2021.05.14 மு.ப.10.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒரு வருடத்திற்குள் 12 சேவை முறைகளை நிறைவேற்றுவதுடன் தேவைப்படும்போது உதிரிப்பாகங்களை பயன்படுத்துதல் வேண்டும்.

2021.04.30 முதல் 2021.05.13 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் வைத்தியசாலையின் காசாளரிடம் ரூ.3000.00 தொகையை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அலுவலகத்தின் AC விடயம் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்து விலைமனுக்களை சமர்ப்பிக்கும் ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தாம் சேவையை வழங்கும் நிறுவனம் மற்றும் தமது தகைமையை உறுதி செய்யும் ஆவணங்களுடன் விலைமனுக்கள் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2021.05.14 மு.ப.10.00 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்களை உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல்மூலையில் “தொலைபேசி பலகை பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் 2021/2022” என்றுக் குறிப்பிடுதல் வேண்டும். 2021.05.15ஆம் திகதி மு.ப.10.00இற்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும். அவ் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்படும் பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தை அழையுங்கள். தொலைபேசி இல - 0112662619 - (நீடிப்பு - 207)

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**டி சொய்சா மகளிர் மருத்துவமனை**
**கொழும்பு - 08.**

# உள்ளூராட்சித் திணைக்களம் – கிழக்கு மாகாணம்

**2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்**

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய நாகராசா மணிவண்ணன் ஆகிய என்னால் 2021.04.15 ஆம் திகதிய 2223/4 இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி (அதிவிசேடம்) ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் புதிய துணைத் தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்காக 2021.04.29 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படவிருந்த கூட்டமானது தற்போதைய கொவிட் 19 நிலைமை காரணமாக நடைபெறமாட்டாது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். மேலும் இக்கூட்டம் இரத்து செய்யப்பட்டமை தொடர்பாக என்னால் 2225/7 ஆம் இலக்க 2021.04.27 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் (அதிவிசேடம்) அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**நா.மணிவண்ணன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்.**

# மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 2020/01/10 | 2020/10/31 | 2021/05/17 |

**கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள்:** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுத்கம, அம்பாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

பியரத்ன முத்துகுமாரன
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர் மற்றும் ஏலவிற்பனையாளர்
இல.156 – 1/13, ஹலவ்ஸ்டோர்ப் வீதி, கொழும்பு 12.
தொலைபேசி: 0117 388 388 / 0777701821

BE BETTER INFORMED!


News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
VISIT
apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# பெறுகை அறிவித்தல்

## கொழும்பு கிழக்கு தளவைத்தியசாலை

## PABX தொலைபேசி அமைப்பை வழங்கி பொருத்துதல் மற்றும் பராமரித்தல்

முல்லேரியாவ, கொழும்பு கிழக்கு தளவைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் மேற்படி வேலைக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து 2021.05.19 மு.ப. 10.00 வரை கேள்விகள் கோரப்படுகின்றன.

ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் மேற்படி முகவரியில் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "PABX அமைப்பை வழங்கிப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்” என்று குறிப்பிடுதல் கட்டாயமானது.

2021.04.28 முற்பகல் 9.00 முதல் 2021.05.18 பிற்பகல் 3.00 இற்கு இடையிலான காலத்திற்குள் தமது தகைமைகளை உறுதி செய்யும் சான்று மற்றும் கேள்விக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் இவ் வைத்தியசாலையின் கணக்காளரிடம் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டு மற்றும் வேண்டுதல் கடிதத்தைச் சமர்ப்பித்து தலைமையகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், தேவைப்படின் இக் காலத்திற்குள் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

இரு பிரதிகளுடன் சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடுகொண்டு வந்து பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

| தொடர் இல. | உருப்படி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| 01 | PABX அமைப்பை வழங்கிப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல் | ரூ. 3,500.00 |

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பணிப்பாளர், கொழும்பு கிழக்கு தளவைத்தியசாலை (தொ.பே. இல. 011-2578226) ஐ அழையுங்கள். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு கிழக்கு தளவைத்தியசாலை,**
**முல்லேரியாவ புதிய நகரம்.**

# பெறுகை அறிவித்தல்

N - 124

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

**பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இலங்கையின் வழங்குநர்களிடமிருந்து இலங்கை அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விண்ணப்பங்கள் அழைக்கப் படுகின்றன.**

**1. Fork Lift (3 Ton) With Paper Roll Clamp**

விலைக்கோரல் இறுதி நாள்: 2021-05-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி

குறிப்பீட்டிலக்கம்: SCP/Fork Lift/NCB07/2020-06

2021-05-19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விண்ணப்பங்கள் கோரல் நிறைவுறும் என்பதுடன் அவ்வேளையிலேயே விண்ணப்பங்கள் திறக்கப்படும். விண்ணப்பப் படிவங்களுக்கு இயைபான ஆவணங்களை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள அரச அச்சுத் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும். சகல விண்ணப்பப் படிவங்களின் பொருட்டும் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்துடன் விண்ணப்பப் படிவத்தை மேற்படி விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் வந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கங்கானி லியனகே**
**தலைவர், பெறுகைக்குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த,**
**கொழும்பு - 08**
**தொ.பே இல: 0112694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாவட்ட பொது வைத்தியசாலை - எம்பிலிப்பிட்டிய

## கொவிட் 19 தொற்றுக்குள்ளான நோயாளர் சிகிச்சை நிலையத்திற்கு சமைத்த உணவு மற்றும் தேநீர் வழங்குதல்

இந்த வைத்தியசாலையினால் நடாத்திச் செல்லப்படும் கொவிட் 19 தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடைநிலை சிகிச்சை நிலையத்திற்கு சமைத்த உணவு மற்றும் தேநீர் வழங்கும் பொருட்டு தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தக் காலம்: 2021-06-01ஆம் திகதி முதல் 2021-12-31ஆம் திகதி வரையாகும் (இவ்விரு நாட்களும் உட்பட)

2021-05-03ஆம் திகதி முதல் 2021-05-18ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் இந்த வைத்தியசாலையின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படும் 10000.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படாத 500.00 ரூபாவைச் செலுத்தி விலைகளைச் சமர்ப்பிப்பதற்கான மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2021-05-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, எம்பிலிப்பிட்டிய எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். நேரில் கொண்டு ஒப்படைப்பதானால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

2021-05-19ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் தேவையானால் இந்த நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் விசாரித்தறியலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**எம்பிலிப்பிட்டிய.**
**தொ.பே. 047-2230261, 047-2230994**

## இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபா) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6191(MP) | Spare for Caterpiller C-15 engines fitted with ZPMC Transfer Cranes at JCT | 89,500.00 | 1,000.00 | 2021.06.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/21/PT/09/052 | 25 Nos. MS Plates 2400 X 1200 X 25 MM | 19,000.00 | 1,000.00 | 2021.05.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. மொத்த ஆகுசெலவு 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுமையான காலப்பகுதியிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளருக்காக மற்றும் அவர் சார்பாக அல்லது வழங்குநரொருவருக்கு முகவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பினால், அவர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவை மேற்கொண்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.
3. ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களில் மேலே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதான முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்) பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 04 ஆம் நிரலில் வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மூடும் திகதிக்கு முன்னைய நாள் வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இறுதி நேரத்தில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு - 01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024. 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்

## திவுலப்பிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கான சீமெந்து கொள்வனவு செய்தல்

இவ் அதிகாரசபைக்கு சொந்தமான திவுலப்பிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு ஒரு வருடத்திற்கு சீமெந்து வழங்குதல் சார்பாக திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்வி சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வெட்வரி இன்றி) ரூ. | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக ரூ | வங்கி/ காப்புறுதி பிணை மூலம் ரூ. |
| PRDA/WP/PRO/2021/29 | சீமெந்து பை (50Kg) | 9000 | 2000.00 | 52,000.00 | 104,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2021.04.30 முதல் 2021.05.14 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 2.45 வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்திற்கு (அதிகார சபையின் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூ. 5 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரால் குறித்த 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2021.05.10 மு.ப. 10.30 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12**
**தெ.பே. 011-5676903**

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2021 ஏப்ரல் 29 வியாழக்கிழமை

# இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் நுவன் சொய்ஸாவுக்கு 6 வருடம் தடை விதித்த ஐசிசி





ஐ.சி.சி.யின் மூன்று வகையான ஊழல் தடுப்பு விதிகளை மீறிய இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான நுவன் சொய்ஸாவுக்கு 6 வருட தடை விதிக்கப்பட்டுள்ளது.

அனைத்துவகை சார்ந்த கிரிக்கெட் தொடர்புடைய விடயங்களில் எதிர்வரும் 6 வருடங்களுக்கு நுவன் சொய்ஸாவால் பங்கேற்க முடியாது எனவும், இவருக்கான தடைக்காலம் 2018ம் ஆண்டு ஒக்டோபர் 31ம் திகதியிலிருந்து கணிக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற ரி 10 லீக் தொடரில் களமிறங்கிய இலங்கை அணியின், பயிற்சியாளராக நுவன் சொய்ஸா செயற்பட்டிருந்தார். இதன்போது அவர் ஊழல் மோசடியில் ஈடுபட்டதாக புகார் அளிக்கப்பட்டது.

கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐ.சி.சி இன் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நுவன் சொய்ஸா மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனையடுத்து, ஐ.சி.சியினால் நியமிக்கப்பட்ட சுயாதீன நடுவர் தீர்ப்பாயத்தின் முன் விசாரணைக்கு ஆஜராகிய பின்னர் ஐ.சி.சி இன் பின்வரும் சட்ட விதிகளை மீறியமை நிரூபனமானது.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:

சரத்து 2.1.1 – சர்வதேச போட்டி ஒன்றின்போது தரப்பு ஒன்று நிர்ணயிக்க அல்லது திட்டமிட அல்லது போட்டியில் முறையற்ற முடிவு, முன்னேற்றம், நடத்தை அல்லது ஏனைய அம்சங்களில் செல்வாக்கு செலுத்த முயற்சித்தல்.

சரத்து 2.1.4 – விதிமுறை சரத்து 2.1.1 இனை மீறும் வகையில் வீரர்களை நேரடியாக அணுகல், தூண்டுதல், கவர்தல் அல்லது ஊக்குவித்தல்.

சரத்து 2.4.4 – விதிமுறைகளின் கீழ் ஊழல் நடத்தை தொடர்பில் தன் மீதான அழைப்பு அல்லது அணுகல் பற்றி ஐ.சி.சி இன் ஊழல் தடுப்பு பிரிவுக்கு முழு விபரத்தை வெளியிட தவறுவது.

மேற்குறித்த குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட பின்னர், அவருக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டதுடன், அவருக்கான தண்டனைகள் அறிவிக்கப்படும் என ஐ.சி.சி. குறிப்பிட்டிருந்தது. அதன்படி, தற்போது 6 ஆண்டுகள் தடை விதிக்கப்படும் என ஐசிசி அறிவித்துள்ளது.

நுவன் சொய்ஸா 1997ம் ஆண்டு முதல் 2007ம் ஆண்டு வரை இலங்கை கிரிக்கெட் அணிக்காக விளையாடியதுடன், 30 டெஸ்ட், 95 ஒருநாள் போட்டிகளில் விளையாடி ஒட்டுமொத்தமாக 170 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

அதுமாத்திரமின்றி, இவர் கடந்த காலங்களில் இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## டெல்லியை ஒரு ஓட்டத்தினால் வீழ்த்தியது பெங்களூர் அணி



ஐ.பி.எல் தொடரின் 22வது போட்டியில் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 1 ஓட்டத்தினால் திரில் வெற்றி பெற்றது.

றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் டெல்லி கெப்பிடல்ஸ் அணிகளுக்கிடையிலான இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி கெப்பிடல்ஸ் அணி களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து 172 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய டெல்லி கெப்பிடல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களை பெற்று 1 ஓட்டத்தினால் தோல்வியடைந்துள்ளது.

றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பில் 75 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்த ஏ.பி.டி டிவில்லியர்ஸ் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

### சர்வதேச மட்ட கராத்தே போட்டியில் வெற்றியீட்டிய

## அல்–பாத்திமியா வித்தியாலய மாணவர்களுக்குப் பாராட்டு





**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

அக்கரைப்பற்று அல்பாத்திமியா வித்தியாலய மாணவர்கள் சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற Victory international virtual kata karate championship 2021கராத்தே போட்டியில் வெற்றியீட்டி, பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.சர்வதேச ரீதியாக 24 நாடுகள் போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகளை International e kata நிறுவனம் இணைய வழியாக நடாத்தியது.

இப்போட்டியில், இலங்கை சார்பில் பங்குபற்றிய, அக்கரைப்பற்று அல்பாத்திமியா வித்தியாலய மாணவன் அப்துல் காதர் முகம்மட் அப்றி முதலாமிடத்தையும், அனீபா முகம்மட் சஸா இரண்டாமிடத்தையும் பெற்று பாடசாலைக்கும், பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

வெற்றி மாணவர்களை நினைவுப்பரிசு வழங்கி பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று அல்பாத்திமியா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.எம்.எம். மிஸ்வர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, சாதனை மாணவர்களைப் பாராட்டியதுடன். இவர்களைப் பயிற்றுவித்த ராம் கராத்தே சங்கத்தின் ஸ்தாபகர் சிஹான் கே.கேந்திரமூர்த்தி மற்றும் பயிற்றுவிப்பாளர்களான கே.ரமீல், கே.சாரங்கனள் ஏனைய கறுப்புப்பட்டி வீரர்களுக்கு அல்பாத்திமியா வித்தியாலயத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

### எக்ஸ்போலங்கா ப்ரைட் லொஜிஸ்டிக் அனுசரணையில்

## மட்டக்களப்பில் ரக்பி போட்டியில் பல வீரர்கள் பங்கேற்க அடித்தளம்

### பிரதம அதிதியாக சி.சந்திரகாந்தன் எம்.பி பங்கேற்பு






நாட்டில் தொடர்ந்தும் விளையாட்டுக்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தின் ரக்பி ஒரு மகளை கண்டுபிடித்துள்ளதுடன் இலங்கை மட்டக்களப்பில் புதியவர்கள் இனங்காணப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.இதற்கான ஏற்பாடுகளை இலங்கை ரக்பி சங்கத்தின் தலைவர் ரிஸ்லி இல்யாஸ் முழு நாளும் பங்கேற்ற வீரர்களுடன் தனது ரக்பி போட்டி அனுபவத்தை பெற்றுக் கொடுத்தார்.

நிகழ்வுகளின் வியத்தகு திருப்பத்தில் இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் எதைச் செய்யத் தவறினார்களோ, ரக்கி கிழக்கு மாகாணத்தில் கால்பதித்ததன் மூலம் வெற்றி பெற்றுள்ளதுடன், ஒரு வருடத்திற்கும் மேலாக செயலற்ற விளையாட்டாக இருந்த ரக்பி விளையாட்டிற்கான ஒரு புதிய அடிவானத்தை வழங்கியுள்ளது.

இலங்கை ரக்பி (எஸ்.எல்.ஆர்) ஒரு படி மேலே சென்று மட்டக்களப்பை பூர்வீகமாகக் கொண்ட, மற்றும் கிழக்கின் உண்மையான மகளான முன்னாள் தேசிய மகளிர் கிரிக்கெட் அணி உறுப்பினர் ஐடா நோபர்ட் ஜோன்சனைக் கண்டு பிடித்துள்ளது.

முன்னைய வேகப்பந்து வீச்சாளரான நொபர்ட் ஜோன்சன், 2013 ஆம் ஆண்டில் ரி 20 உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் இலங்கை மகளிர் அணியில் உறுப்பினராக இருந்து தென்னாப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டதோடு,தற்போதுஉலகளவில் மகளிர்களுக்கிடையில் வேகமாக வளர்ந்து வரும் ரக்பி விளையாட்டிற்கு தனது பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

"இது எனக்கு பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தும் அனுபவமாகும். ரக்பி விளையாட்டுப் பயிற்சியில் கலந்து கொள்ளக் கிடைத்தமையினால் எனக்கு எனது திறமைகள் தொடர்பில் பெரும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் பெண்களுக்கிடையில் ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்" என ஜோன்சன் கூறினார்.






விளையாட்டு மற்றும் கல்வி அமைச்சுக்களின் பங்களிப்புடன் இலங்கை ரக்பி அதிகாரிகள் கடந்த வாரம் மட்டக்களப்புக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது, ஜோன்சன் கிரிக்கட்டிலிருந்து ரக்பிக்கு மாறினார்.

"ரக்பி விளையாட்டைக் கற்க வந்த சிறுவர்களின் கண்களில் அதைப் பார்த்தேன். அது நெருப்பு சக்தியாக இருந்தது" எனத் தெரிவித்த இலங்கை ரக்பி நிறுவனத்தின் தலைவர் ரிஸ்லி இல்லியாஸ், "இந்த பெண் (ஜோன்சன்) எங்களின் ஒரு பெரிய கண்டுபிடிப்பாகும், அவரை ஒரு தலைவராக, பயிற்சியாளராக மற்றும் போதிப்பாளராக ஆக்க விரும்புகிறோம்". என்றும் கூறினார்.

நாட்டின் ஒரு மூளையில் வீட்டில் இருப்பதை உணர்ந்ததாகத் தெரிவித்த இல்லியாஸ், மற்றவர்களிடமிருந்து "புறக்கணிக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாதவர்" என்று அவர் வி

"விளையாட்டு ஒரு நாட்டை ஒன்றிணைக்கிறது, மக்களை ஒன்றிணைப்பதற்கான செயற்பாட்டில் ரக்பி முக்கிய பங்கு வகிக்க முடியும். இது ஒரு தளம்" என்றும் இல்லியாஸ் கூறினார்.

கடந்த மாதம் ரக்பி விளையாட்டை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அவரது திட்டங்கள் க்ளப் மற்றும் வணிக அரசியலினால் கொழும்பில் வருடாந்த இன்டர் கிளப் செவன்ஸுக்கு சில நாட்களுக்கு முன்னா' நாசப்படுத்தப்பட்டதைக் கண்டதாகவும் கூறினார்.

போட்டி ரத்து செய்யப்பட்டபோது அது தரவரிசை வீரர்கள் மற்றும் அவர்களைப் பின்தொடர்பவர்களுக்கு பெரும் விரக்தியையும், காயத்தையும் ஏற்படுத்தியது.

ஆனால் 30 வருட உள்நாட்டு யுத்த வடுக்களைக் கொண்ட மட்டக்களப்பில் 20 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 150 மாணவ மாணவிகள் அனேகமானோர் கடந்து சென்ற புதிய உலகை கண்டு கொண்டதாக ரக்பி விளையாட்டு அதிகாரிகள் நம்புகின்றனர்.

புதிய ரக்பி வேட்டையானது கல்வியியலாளர்கள் மற்றும் வளர்ந்து வரும் ரக்பி விளையாட்டு வீரர்களின் பெற்றோர்களிடத்தில் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது.

ஆனால் மட்டக்களப்பில் இருக்கும் திறமைகளைப் பார்க்கும்போது, இலங்கை ரக்பி, இப்பிராந்தியத்தில் புதிய வணிகப் பங்காளர்களை கவர்ந்திழுத்துத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறது.

சுற்றுலாத் துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க கேந்திர நிலையமாகக் கருதப்படும் கிழக்கு மாகாணத்தில் ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதன் மூம் தேசிய ரீதியில் திறமைகளைக் காட்டும் விளையாட்டு வீரர் வீராங்கனைகள் உருவாவார்கள் என இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் சிறப்பான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள இலங்கை ரக்பி நிறுவனத்தின் தலைவர் றிஸ்லி இல்லியாஸ் தெரிவித்தார்.

பெண்களின் ரக்பி விளையாட்டிற்கு நிதியளிக்கும் எக்ஸ்போலங்கா ப்ரைட் லொஜிஸ்டிக் (ஈஎப்எல்) என்ற பன்னாட்டு நிறுவனத்தில் நம்பகமான மற்றும் விசுவாசமான வணிக பங்காளி இல்லியாஸிடம் உள்ளார். அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் அதிதியாக கலந்து கொண்டார்.

## மட்டக்களப்பில் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கான முதலாம் கட்ட யோகா பயிற்சி நெறி ஆரம்பம்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மேற்கு வலய கல்வி வலயமும், ஐஸ்வர்யம் யோகா கலை மன்றமும் இணைந்து நடாத்தும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கான முதலாம் கட்ட வதிவிட யோகா பயிற்சி நெறி மட்டக்களப்பு சர்வோதயம் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மூன்று நாட்களை கொண்ட வதிவிட யோகா பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு (22) இடம்பெற்றது.

குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், சிறப்பு அதிதிகளாக காசி பல்கலைகழக சிரேஸ்ட விரிவுரையாளரும் சித்தர்களின் குரல் அமைப்பின் ஆலோசகருமான ஆர்.சிவசங்கர் குரு ஜீ மற்றும் ஐஸ்வர்யம் யோகா கலை மன்றத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் அதிதிகளின் உரையின்போது யோகா கலையின் சிறப்பம்சம் மற்றும் அதன் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. அதேவேளை குறித்த இப்பயிற்சிப் பட்டறையில் பதஞ்சலி யோக சூத்திர பயிற்சி முழுமையாக கற்பிக்கப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வின்போது சித்தர்கள் குரல் அமைப்பினால் அனைத்து ஆசிரியர்களுக்கும் யோகா சீருடை இலவசமாக வழங்கிவைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 29ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.